# த ங் க ம் ம ா 1 0 0
# T H A N G A M M A 1 0 0

## நூறாவது பிறந்தநாள் நினைவஞ்சலி மலர்
## 1917 - 2017



அமரர் திருமதி தங்கம்மா வைரமுத்து
நாவற்குழி கிழக்கு - வேலம்பராய்

**16.07.1917 - 04.04.1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KERVEN MEDIA

Lebara pla

# நிறுவனத்தின்
# 5ஆம் ஆண்டை முன்னிட்டு
# அதிரடி மலிவு விற்பனை




**KERVEN MEDIA FRANCE**
191 Rue du Faubourg Saint-Denis
75010 PARIS
Tél : 09 77 19 59 11
Mob : 06 26 06 05 22

**KERVEN GMBH GERMANY**
Rheinische Str. 64
44137 Dortmund
Tel: 004923117721820
Mob: 00491738048459

PARIS YK YAAL KALAI Digital Photo & Video

info@kerven-gmbh.com
www.kerven-gmbh.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100

# நூறாவது பிறந்தநாள்

1917 - 2017

# நினைவஞ்சலி மலர்



V. Sivarajan
47249 Duisburg
Germany

## அமரர் திருமதி தங்கம்மா வைரமுத்து

நாவற்குழி கிழக்கு - வேலம்பராய்

16.07.1917 - 04.04.1998

வெளியீடு

2017 ஆடி மாதம் 22ம் திகதி

லண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை!......

எங்களைப் படைக்க மூலவேராக இருந்து, ஆல விருட்சமாகச் சுடர் ஒளி பரப்பிய எங்கள் இதய தெய்வங்களான திரு, திருமதி தங்கம்மா-வைரமுத்து தம்பதிகளுக்கு இம்மலரைக் காணிக்கையாக்குகின்றோம்!...

வெளியீடு:- 22.07.2017 - லண்டன்

தொடர்பு முகவரி:- V.Sivarajah
Am Windhovel 18a
47249 Duisburg
Germany
Email: v.sivarajah@arcor.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி தங்கம்மா வைரமுத்து

## நூறாவது ஆண்டு - நினைவுமலர்

1917 - 2017



16.07.1917 - 04.04.1998

## நாவற்குழி கிழக்கு - வேலம்பராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## நூறாவது வயதில் (1917 - 2017)
## அமரர் திருமதி தங்கம்மா வைரமுத்து
## (வேலம்பராய்-நாவற்குழி கிழக்கு - இலங்கை)

இலங்கைத்தீவின் வடபுலம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பிரதேச பிரிவின் நாவற்குழி கிராமசபையிலுள்ள வேலம்பராய் என்னும் கிராமத்தில் பிறந்தவர்தான் அமரர் திருமதி தங்கம்மா வைரமுத்து அவர்கள். 1917ம் ஆண்டு ஆடி மாதம் 16ம் திகதியில் பிறந்தார். தந்தையார் பெயர் முருகர் தாயார் பெயர் சீதேவி சாதாரண விவசாய, வியாபாரக் குடும்பத்தில் பிறந்த இவரோடு மூன்று சகோதரிகள் பிறந்தார்கள். தெய்வானை, பொன்னி, வள்ளி ஆகியோர். இவர்தான் இளைய பிள்ளை கடைக்குட்டி என்று செல்லமாக அழைத்தனர். ஆரம்பக் கல்வியை யாழ்-கோவிலாக்கண்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் பின்னர் யாழ் நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் எட்டாம் வகுப்புவரை கல்வி பயின்றார்.

இளமையில் துடிப்புள்ளவராகவும் வீட்டில் செல்லப்பிள்ளையாவும் வளர்ந்தார். அழகான கட்டுடல் கன்னியாக உருவெடுத்தபடியால் பதினேழு வயதிலேயே திருமணம் செய்துகொண்டார். இதே ஊரைச் சேர்ந்த வினாசித்தம்பி மகன் வைரமுத்துவை மணந்துகொண்டார். இவர்களின் திருமணம்கூட ஒரு சுவார்சியமான கலியாணம் எனப் பின்னர் சொல்லக் கேள்விப்பட்டோம். 1932 ஆண்டு மணம்முடித்துக்கொண்டார். இல்லற வாழ்வின் இனிமையில் குழந்தைச் செல்வங்களுக்குக் குறைவே இல்லாமல் பதின்நான்கு பிள்ளைகளைப் பெற்று இந்தப் பிரதேசத்தின் சாதனைக்குடும்பமாக இன்றுவரை திகழ்கிறார்கள். இவர்களது சாதனையை இந்தப் பிரதேசத்தில் இதுவரை எவரும் முறியடிக்கவில்லை என்பது வரலாறாகும். ஒன்பது ஆண்கள் ஐந்து பெண்கள் எனப்பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்து வளர்த்து, கல்வியூட்டி, அறிவூட்டி, தொழில் வளங்கள்காட்டி, திருமண பந்தத்தில் இணைத்து அத்தனை செல்வங்களையும் புகழோடு வாழ வழிவகுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்காலத்தில் இவர்களின் தொழிலாக விவசாயம், வியாபாரம் என இருந்திருக்கின்றது. நாவற்குழி கிராமம் முழுவதும் பனை, தென்னை வளங்கள், தோட்டம் நெல்வயல் வளங்கள் நிறைந்து காணப்பட்டபடியால் இவைகளில் கிடைத்த பல வருமானங்கள் மூலம் குடும்பம் வாழ்ந்திருக்கின்றது. இப்பொழுதும் அந்த ஊர் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. பிற்பாடு பிள்ளைகள் சிலர் அரச உத்தியோகம் வகித்தபடியால் அவற்றாலும் வாழ்க்கையை கொண்டுசெல்லக்கூடியதாக இருந்துள்ளது. பிற்காலத்தில் வன்னிப் பிராந்தியத்திலும் குடியேறி மல்லாவி, துணுக்காய், ஒட்டன்குளம் பிரதேசங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள்.

பதின்நான்கு பிள்ளைகள் என்றால் இலேசுப்பட்ட குடும்பமா?...அத்தனை பிள்ளைகளையும் இந்தத்தாயவள் எவ்வளவு வேதனைப்பட்டுப் பெற்றெடுத்திருப்பார். இந்தக் காலத்தில் ஒன்று இரண்டு பிள்ளைகளைப் பெற்றுவிட்டு ஐயோ!..குய்யோ!... என்று குரலெழுப்புகிறார்கள். ஆனால் அமரர் தங்கம்மா அவர்கள் இவ்வளவு பிள்ளைகளையும் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்க எத்தனை துன்பங்கள் துயரங்கள் சுமைகளைப் பெற்றிருப்பார். இந்தத் தாயை நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியமான பெண்மணி என்றே சொல்ல வேண்டும்.

இன்று இவரின் பிள்ளைகள் பலர் தாய் நாட்டில் வாழ்கிறார்கள். சில பிள்ளைகள் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கிறார்கள். பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் என அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, டென்மார்க், சுவீடன், நோர்வே, சுவீஸ்லாந்து ஆகிய நாடுகளில் வாழ்துகொண்டிருக்கிறார்கள். கொடியாகப் படர்ந்து உலகப்பரப்பு எங்கும் வாழ்கிறார்கள் என்றால் திரு, திருமதி தங்கம்மா - வைரமுத்து தம்பதிகளின் குடும்ப வாரிசுகள் என்னும்போது மகிழ்வுதான்.

1917ம் ஆண்டு பிறந்து 1998ம் ஆண்டு தனது எண்பத்தொராவது வயதில் காலமாகியவர்தான் திருமதி தங்கம்மா அவர்கள். அவர் உயிருடன் இருந்திருந்தால் இந்த வருடம் 16.07.2017 ஆண்டில் தனது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடியிருப்பார். அவர் எங்கள்குடும்பத்தைவிட்டு மறைந்தது எங்கள் குடும்பத்தின் பேரிழப்பாகவே கருதுகிறோம்.. தாயில்லாமல் நாம் ஏது?.. இந்த உயிர் தந்த உத்தமியை, எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் மூலவேரை, நிழல் தந்த ஆலமரத்தை நாம் வாழ்நாள் முழுவதும் நினைவில் நிறுத்திக்கொண்டே வாழ்கிறோம்.

அவர் வாழ்ந்த வாழ்க்கையையும் வழிகாட்டல்களையும் நாம் பாடமாகக்கொண்டு அவரின் அடிச்சுவட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.அவர் வாழ்ந்த காலத்தில் எப்படி வாழ்ந்தார். என்ன சாதனைகள் செய்தார், வாழ்க்கைப்பாடத்தில் என்ன விடையங்களை விட்டுச் சென்றார் என்னும் பல விடையங்களை நம் சந்ததிகளும் ஏனையோரும் கற்றறிந்து நல்ல வாழ்வை வாழ்வதற்காகவே அவரது அனுபவ பாடங்களை எனக்குத்தெரிந்தவற்றைத் தொகுத்துள்ளேன். எனக்குத் தெரியாத அறியாத பல விடையங்களும் இருக்கலாம். இம்மலர் உங்கள் கைகளில் தவழ்கின்றது. நீங்களும் வாசியுங்கள் நல்ல விடையங்களை உங்கள் வாழ்க்கைக்கு எடுததுக் கொள்வதுடன் உங்கள் நட்புக்களோடு பரிமாறுங்கள். எங்கும் எப்போதும் அமரர் தங்கம்மா அவர்கள் உங்களுக்கு நல்லாசிகள் வழங்கிக்கொண்டே இருப்பார்.

வாழ்க அவர் நாமம்!...வளர்க அவர் புகழ்!...

-ஆசிரியர்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் என்னும் கோவில்

"தாயிற் சிறந்த கோவிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"என்று நம் முன்னோர் கூறுவர். உயிரினங்களின் படைப்புகளில் மனிதப்படைப்புதான் சிறந்தது. இதிலும் பெண் என்னும் தாயின் படைப்புதான் இந்த உலகில் உன்னதமானதாகும். தாய்தான் முழுமுதற் கடவுளாவர். கண்ணால் காணாத தெய்வங்களைவிட கண்ணால் நேரடியாகக் காணும் தாயவள்தான் இந்த உலகின் தெய்வமானவள். கடவுளானவள்.

பத்துமாதம் கருச்சுமந்து இரவு பகல் என விழித்திருந்து பட்டினிகிடந்து தன் உதிரத்தைக் கொட்டி உயிர்கொடுக்கும் இருப்பிடம்தான் தாயின் கருவறை. தாய் என்னும் பெரும் கோவிலில் நாம் எல்லோரும் பக்தர்களே. நம்மைப் பெற்றெடுத்து, நம் அழுக்குகளைப் போக்கிச் சுத்தம் செய்து அழகுபடுத்துபவள்தான் பெற்றதாய். தன் பசி பொறுத்து பட்டினி கிடந்து தன் உதிரத்தைப் பாலாக்கிப் பிள்ளைக்குப் பாலூட்டுபவள்தான் தாய். துன்பங்கள் கவலைகள் நட்டங்கள் எது வந்தாலும் அனைத்தையும் பொருட்படுத்தாமல் பிள்ளையின் நலனில் அக்கறையோடு காரிமாற்றுபவள்தான் தாய் என்னும் கோவில்.

தன் பிள்ளைக்கு அழகான புது உடை அணிந்து அழகுபார்ப்பதும், தத்தித்தத்தி நடைபயில கரம்பிடிப்பதும் கல்வியூட்டி முதல் ஆசிரியராகத் திகழ்பவளும் அவளே. தந்தையின் உதவியில், வழிகாட்டலில், பொருட் தேடலில் உற்ற துணையாக இருந்து குடும்பத்தின் குத்துவிளக்காக ஒளி தருபவளும் தாய்தான். பிள்ளை வளர்ப்பில் முக்கிய பங்கு வகித்துப் பிள்ளைக்குக் கல்வியூட்டி, வழிகாட்டி, உலகத்தைக்காட்டி, வாழ்க்கையைக் காட்டி கலங்கரை விளக்காகவும் நிற்பவள் இந்த அற்புதப்பிறப்பு தாய்தான்.

இப்படியாகத் தாயின் அவதாரத்தைப் பக்கம்... பக்கமாக எழுதிக்கொண்டெ இருக்கலாம். உலகிலுள்ள கவிஞர்கள், எழுத்தாளர்கள், பாடலாசிரியர்கள் தாய்-தந்தையரைப்பற்றி எழுதிய பாடல்களும் கட்டுரைகளும் மலைபோல் கிடக்கின்றன. இதில் அம்மா என்னும் அருஞ்சுடரைப்பற்றி பல ஆயிரம் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், இலக்கியப் பரப்பில் குவிந்து கிடக்கின்றன. உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் யாரைப் பிடிக்கும் என்று யாரைக் கெட்டாலும் "அம்மா" தான் என்று பல கோடிபேர் உடனடியாகவே பதில் கூறுவார்கள். அப்படிப் பாசத்திற்கும் நேசத்திற்கும், அன்புக்கும் ஆதரவிற்கும், தியாகத்திற்கும் தித்திக்கும் இனிப்பான பண்டத்தைப்போல் முன்னிலை வகிப்பவள் எம்மைப்படைத்த தாய்தான்.

எமக்குச் சிறு நோய் வந்தாலும் பதறித்துடிப்பவள் அவள்தான். அரவணைப்பில் பிள்ளையை வைத்திருக்கும் தாயானவள் சில விநாடிகள் பிள்ளையைக் காணவில்லை என்றால் அலறி அடித்து அங்கும் இங்கும் ஓடித்திரிந்து தன் பிள்ளையைக் கண்டுபிடித்து அகமகிழ்பவள் அம்மா என்னும் தெய்வம்தான். பாலூட்ட நேரம் தவறிவிட்டால் பிள்ளை என்ன வேதனைப்படும் என்று அலறித்துடிப்பவளும் அவளே. எங்கு நின்றாலும் பிள்ளைக்குப் பாலூட்டவேண்டும் என்று நினைத்துக் கவலை கொண்டு ஓடோடி வந்து அரவணைத்துப் பாலூட்டி நம் பசியைத் தீர்த்து அட்சய பாத்திரமாக விளங்குபவள் எம்மைப் பெற்றவள்தான். வறுமை தாண்டவமாடினாலும் கோர நோய் வந்தாலும் குடும்பத்தில் பிரச்சனைகள் வந்தாலும் கடன்பட்டாவது தன்பசி பொறுத்து எம்பசி போக்கி உத்தமியாக இந்த உலகில் பிரகாசிப்பவள் தாய்தானே.

சந்திரன் பூமிக்கு ஒளி கொடுப்பது போல எமது வாழ்வுக்கு வாழ்நாள் முழுவதும் ஒளி தருபவள் தாய்தான். எத்தனை அறிவுகள் ஆற்றல்கள், படைப்புக்கள், தேடல்கள் அத்தனையையும் ஒருமுகப்படுத்தி அவ்வப்போது எதுவித குறைகளும் இல்லாமல் ஒரு நல்ல ஆசிரியரைப் போல எந்நாளும் ஒளி தந்துகொண்டிருக்கும் ஒளிவிளக்கானவள் நம் தாய்தான்.

வாழ்க்கைச் சக்கரத்தில் நாம் வழி தவறித் தடம் மாறாமல் நேர்வழி சென்று நல்வழி காட்டி நிற்பவளும் அம்மாதான். ஒரு கப்பலின் மாலுமியைப்போல் வாழ்வில் கவலைகொள்ளாமல் வெற்றிப்பாதையைக் காட்டுபவளும் அவள்தான். கவலை, தோல்வி வந்தாலும் அவற்றிற்கு ஆறுதல் சொல்லி நம்மை துவளவிடாமல் உயர்வு பெற வைப்பவள் தாய்தான். போட்டி, பொறாமை, சண்டைகள் வந்தாலும் எல்லாவற்றையும் சமாளித்து உடனிருந்து ஔடதமாய் விளங்குபவள் இந்தத்தாய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டு மொத்தத்தில் கணவன்-மனைவி பிள்ளைகள் மற்றும் இரத்த உறவுகள், சொந்தங்கள், பந்தங்கள், நட்புக்கள் போன்ற அனைவருடனும் ஒற்றுமையாய் வாழ வழி காட்டுபவர் அம்மாதான். தன் வாழ்நாள் முழுவதும் பிறருக்காகவே வாழ்பவள், மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்து தியாக ஒளி பரப்புபவளும் அவளே. மெழுகுவர்த்தி தன்னை உருக்கி உலகிற்கு ஒளி கொடுப்பது போல தன்னை அழித்து பிறரை வாழ வைப்பவள் தாய்தான்.

கல்வி, கலை, விளையாட்டு, மற்றும் வாழ்வுக்குத் தேவையான அத்தனை துறைகளிலும் எம்மை ஏற்றம்பெற்று வாழ ஏணியாய் நிற்பவளும் தாய்தான். இல்லாதோருக்குக் கொடுக்கவும் இயலாதவருக்கு உதவவும் ஏழை எளிய மக்களின் துயர் போக்கவும் உற்ற துணையாக நின்று உதவி புரிபவளும் எம் தாய்தான். குடும்பத்தின் ஆணி வேராகவும் ஆலமரமாகவும் தாங்கி நின்று நிழல்தந்து காப்பவளும் அவள்தான். நறுமணம் வீசும் இளந்தென்றலாய் பசுஞ்சோலையாய் நறுமணம் வீசுபவளும் நம்மைப் படைத்தவள்தான். நீலக்கடலாய்ப் பரந்து நின்று, மாபெரும் மலைபோல் உயர்ந்து நின்று வழிகாட்டியாய் சூரிய ஒளிபோல் இந்தப் பூமிப் பந்து எங்கும் ஒளிபரப்பும் தாயவளை எந்நாளும் போற்றி வணங்குவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். உயிருள்ளவரை தாயை மறக்காமல் வாழ்ந்து தாயைப் போற்றுவோம்!... வாழ்த்துவோம்!... அவர் பெற்றெடுத்த பிள்ளைகள்...

| | பிள்ளைகள் | மருமக்கள் |
|---|---|---|
| 01. | தியாகராசா (அமரர்) | இராசமணி |
| 02. | நடராசா | சரஸ்வதி |
| 03. | சரவணமுத்து (அமரர்) | தங்கம்மா |
| 04. | நல்லம்மா | முத்தையா (அமரர்) |
| 05. | ஜெகராசா | அன்னலட்சுமி |
| 06. | வேலய்யா | நாகேஸ்வரி |
| 07. | சீனிவாசன் | புனிதவதி |
| 08. | பராசக்தி | பரமசாமி (அமரர்) |
| 09. | தங்கரத்தினம் | செல்லையா |
| 10. | பரராசசிங்கம் | புஸ்பராணி |
| 11. | சிவராசா | இராஜேஸ்வரி |
| 12. | நாகேஸ்வரி | கனகரத்தினம் (அமரர்) |
| 13. | பரமேஸ்வரி | பாலேந்திரன் |
| 14. | அழகராசா | கலா (அமரர்) வசந்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சியாச்சி

எங்கள் தந்தையார் பெயர் வைரமுத்து. ஆனால் ஊரவர்களும் அயலூரவர்களும் துரை என்றுதான் அன்போடு அழைப்பார்கள். என்ன பெயர்ப் பொருத்தம். தாயாருக்குப் பெயர் தங்கம்மா. தங்கமும் வைரமும் பெயரில் அடங்கியிருக்கிறன. இதனால் தான் இருவரும் பதின்நான்கு பிள்ளைகளைப் பெற்று சந்தோஷ மாக வாழ்ந்திருக்கிறார்கள். துரை என்ற பெயருக்குப் பொருத்தமாக துரையாகவே வாழ்ந்திருக்கிறார். அதாவது கடும் உழைப்பாளியாக இல்லத்தலைவனாக வாழ்ந்துகாட்டி 17.11.1985ல் மறைந்துவிட்டார். அவரின் கடின உழைப்புத்தான் பிள்ளைகளை வாழ்வில் உயர்ச்சி பெறச் செய்தது எனப் பெருமையாகக் கூறிக்கொள்ளலாம்.

எங்கள் தாயார் தங்கம்மாவை துரை ஆச்சி என்று ஊராரும் உறவினரும் அயலூரவர்களும் அழைத்து வந்தனர். ஊரில் தாயாரின் உறவினர்களான மருமக்கள் பெறாமக்கள் சிறுவர்கள் இளையோர்கள் ஏனைய உறவுமுறைக்காரர்கள் என அனைவரும் அவரை குஞ்சி ஆச்சி என்றே அன்போடு அழைத்து வந்தனர். இன்னும் சில நெருக்க உறவுகள் சீனி அம்மா, சீனி ஆச்சி என்றெல்லாம் அழைத்தனர். உறவு முறை கொண்டாடினர். இதைக் கண்டுகொண்ட தெரிந்த தெரியாத பல உறவுகளும் நண்பர்களும் குஞ்சி ஆச்சி என்றே அழைத்து வந்தனர்.

இவற்றை விட நாங்கள் வன்னியில் வாழ்ந்த காலங்களில் அங்கு பல ஊரவர்களும் வாழ்ந்த குடியேற்றத் திட்டமாகும். மல்லாவி, துணுக்காய், வவுனிக்குளம், ஒட்டன்குளம் ஆகிய இடங்களில் வாழ்ந்தோம். ஆதலால் அங்கு ஊரின் பெயரைச் சொல்லியே ஆள் அடையாளத்தைக் கண்டுகொள்வார்கள். அப்போது இவரை எல்லோரும் "நாவற்குழி ஆச்சி" எனவும் பெயர் சொல்லி அழைத்தனர். உண்மையில் இதைப் பார்க்கும் போது சினிமாவில் புகழ்படைத்த மனோரம்மாவை எல்லோரும் ஆச்சி என்று அன்போடு அழைத்தமாதிரித்தான் எங்கள் தாயாரையும் அனைவரும் குஞ்சி ஆச்சி என்று செல்லமாகவும் அன்பாகவும் அழைத்து மகிழ்ந்தனர். எப்படியும் ஆச்சி எல்லோருக்கும் தங்கமான ஆச்சியாகத்தான் வாழ்ந்து காட்டிச் சென்றிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்பதித்த குடும்பத்தலைவி

ஒரு குடும்பத்தில் தாய் - தந்தை எவ்வளவு முக்கியமானவர்கள். அவர்கள் வழிதான் பிள்ளைகளின் வழியாக அமைந்துவிடும். தாய் தந்தை கெட்ட நடத்தை அல்லது கூடாத பழக்கமுடையவர்களாக இருந்தால் பிள்ளைகளும் அந்த நிலையைப் பின்பற்ற அதிக வாய்ப்புக்கள் உண்டாகும். ஆகவே தாய் தந்தை என்பவர்கள் எந்நாளும் வழிகாட்டுபவர்களாக, அறிவூட்டுபவர்களாக குடும்பத்தில் வீற்றிருக்க வேண்டும்.

எங்கள் தாயானவள் எங்கள் குடும்பத்தில் பல அவதாரங்களை எடுத்து குடும்பத்தை நல்வழிப்படுத்திய பெருமை உண்டு. ஊரவர் மற்றும் அயலூரவர் யாரைக் கேட்டாலும் "தங்கம்மா-துரையின் பிள்ளைகளா" வாரிசுகளா!...அவர்கள் நல்லவர்கள்... வல்லவர்கள்... பொதுத் தொண்டாற்றுபவர்கள்.... பிறருக்குக் கொடுத்து உதவுபவர்கள்...என்றெல்லாம் பெருமையாகப் பேசுவார்கள். அந்தக் கிராமத்திலோ அல்லது அந்தப் பிரதேசத்திலோ என்ன நிகழ்வு இடம்பெற்றாலும் இக்குடும்பத்தவர்களின் பங்களிப்பு, ஒத்துழைப்பு எப்போதும் இருந்துகொண்டெ இருக்கும். இது இப்பொழுதும் தொடர் பணியாகவே இருந்து வருகின்றது. அந்த அளவுக்கு எங்கள் தாயாரின் வழிகாட்டல் அமைந்தது எனப் பெருமையாகக் கூறிக்கொள்ளலாம்.

தந்தையார் கறுத்த உடல் கொண்டவர். ஆயினும் வெள்ளை மனம் படைத்தவர். வஞ்சகம், சூது, பொறாமை எதுவும் கிடையாது. எதையும் வெளிப்படையாகவே பேசுவார். இளகிய மனம் படைத்தவர். ஆனால் கடும் உழைப்பாளி. இரவு பகலாக வேலை செய்யக்கூடிய தொழிலாளி. இரண்டு மூன்றுபேர் செய்யும் வேலையை தனியே செய்யக்கூடிய திறமைசாலி. பிள்ளைகளாகிய எங்களில் ஒன்று இரண்டுபேரைத் தவிர மற்றவர்கள் அவருக்குக்கிட்டவே நிற்கமுடியாது. அப்படிப்பட்ட பலசாலிதான் வைரமுத்து (துரை) என்னும் வைரம் மிக்க மனிதன். தான் பெற்ற பிள்ளைகளின் சொந்தக்காரன். இந்தப் பிள்ளைகளை வளர்த்தெடுக்க எவ்வளவு வியர்வை சிந்திக் கடுமையாக உழைத்திருப்பார். இவரை எப்போது நினைத்தாலும் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் கடுமையாக உழைத்தாலும் பிள்ளைகளையும் பணத்தை, பொருள்பண்டங்களை, சொத்துக்களை, உறவுகள் , நட்புக்களைச் சிதறவிடாமல் அழியவிடாமல் ஒட்டுமொத்த குடும்பத்தையும் கட்டிக்காத்தவர் தாய்தான். எங்கள் தாயார் என்ன உயர் கல்வி படித்துப் பட்டம் பெற்றவரா?..உயர்கல்வி கற்றவரா?..உயர் பயிற்சி பெற்றவரா?.. அல்லது அவரது குடும்பத்தில் யாராவது உயர்படிப்பு படித்தவர்களா?.. ஒன்றுமே இல்லை.

தான் பெற்ற கல்வியோடு வாழ்க்கையில் தான் பெற்ற கஸ்டங்களும் நட்டங்களும் துன்பங்களும்தான் அவரின் பல்கலைக்கழகப் படிப்பு!.. பதின்நான்கு செல்வங்களையும் பெற்றெடுத்தபோது பட்ட வேதனைகள் தான் அவரின் வைத்தியப் பட்டப்படிப்பு!.. குடும்பத்தில் அனைவரையும் நிர்வகித்து வழிநடத்தி உயர்ச்சி பெற வைத்ததுதான் அவரின் நிர்வாகத்திறன் படிப்பு!..குடும்பத்தில் நீதி தவறாமல் எல்லோரையும் சரிசமமாகப்பேணி ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் பார்த்து அனுசரித்து வாழ்ந்துகாட்டியதுதான் அவரின் சட்டப்படிப்பு!...ஊராரையும் குடும்பத்தவர்களையும் பிணக்குகள் இல்லாமல் அனைவரையும் ஒன்றுபடவைத்து வாழ்ந்து காட்டியதுதான் அவரின் நீதிவழி வாழ்க்கைப்படிப்பாகும்!..

இப்படியாக நமது தாயாரின் அனுபவங்களையும் சிறப்புக்களையும் வழிகாட்டல்களையும் வாழ்ந்துகாட்டிய வாழ்க்கை முறைகளையும் எழுதுவதென்றால் பக்கம்...பக்கமாக எழுதலாம். இருந்தும் எனது அறிவு அனுபவங்களுக்கு எட்டியதை இங்கு பதிவு செய்துள்ளேன். எங்கள் குடும்பத்தின் சரித்திரத்தையும், புகழையும் அழியாமல் பாதுகாத்த தாயவள் உயர்ந்து நிற்கின்றாள். நற்கருணை பொழிந்து நிற்கிறார். பலர் போற்ற வாழ்ந்து காட்டிய இந்தச் சரித்திர நாயகி எங்கள் குடும்பத்தில் தடம்பதித்த குடும்பத்தலைவியாக விளங்குகின்றார். என்றும் எங்கள் குடும்பத்தில் கதிர் ஒளி வீசிக்கொண்டே இருக்கிறார்!..இருப்பார்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பமும் வேலையும்

தனது பதினேழுவயதினிலேயே முதல் ஆண்பிள்ளைக்கு தாயானார். தொடர்ந்து அடுக்கடுக்கா ஒரு வருடம் இரு வருடம் இடைவெளியில்தான் பதின்நான்கு பிள்ளைகளையும் பெற்றெடுத்தார். இந்த பதின்நான்கு பேரையும் பெற்றெடுப்பதில் எவ்வளவு வேதனைகள், துன்பங்கள், கண்ணீர்கதைகள். எவ்வளவு உதிரம் கொட்டி உயிர் பிரியும் வேதனைகளைத் தாங்கியிருப்பார். இன்றைய பெண்கள் ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்கவே ஐயோ! ஆத்தே! எனக்குளறியடிக்கிறார்கள். அப்போ எனது தாயார் ஒரு வேள்வியை நடாத்தி, அனுபவித்தே இத்தனை பேருக்கும் உயிர் கொடுத்தார் என்றால் இவர் ஆண்டவனுக்கு மேலான ஆக்கல், படைத்தலைச் செய்தார் என்றால் வியப்பாகத்தான் இருக்கும்.

அந்தக்காலத்தில் குடும்பக்கட்டுப்பாடு என்றால் என்னவென்று தெரியாது, மருந்து மாத்திரை, அறுவைச்சிகிச்சை தெரியாது. எவ்வளவு துன்பம் வரினும் பிள்ளையைப் பெற்றுவிட்டால் அது தானாக வளரும் என்பது அப்போதைய இலக்கணமாக இருந்தது உண்மையே. பின்னாளில் தனது சோகக்கதைகளைச் சொல்கையில் இப்போதும் நமக்குக் கவலைதான். தான் கர்ப்பமாக இருக்கும்போது ஒரு பிள்ளை மடிக்குழந்தை, இன்னும் இரண்டு சிறிசுகள் தனது தாவணியில் பிடித்துக்கொண்டு பசியால் அழுவார்கள். மடிப்பிள்ளைக்குப் பால் கொடுக்க வேண்டும் மற்றைய பிள்ளைகள் பசியாற ஏதாவது செய்து பசிதீர்க்க வேண்டும் சமையல் செய்ய வேண்டும் உடுதுணி தோய்க்க வேண்டும். நான்கு உயிர்களை ஒரே நேரத்தில் (வயிற்றில்,மடியில்,வெளியில்) கவனித்துப் பாதுகாக்க வேண்டும் என்றால் எவ்வளவு கஸ்டம். இவைமட்டுமா? வேலையால் களைத்துவரும் தந்தையாருக்குச் சமைக்க வேண்டும் மற்றைய பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவேண்டும். வீட்டுவேலை, ஆடு,மாடுகளின் பராமரிப்பு வேலை, தோட்டவேலை என இயந்திரமாகவே சுழன்றிருக்கிறார். குடும்ப உறவுகளின் உதவிகளும் பெரியளவில் கிடைக்கவில்லை. ஆதலால் எல்லா வேலைகளையும் தானே செய்ய வேண்டியநிலை இருந்து வந்தது. இதற்கிடையில் ஒருபிள்ளைக்கு நோய் ஏற்பட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு அன்றைய பரியாரி, வைத்தியர் வீடுகளுக்குச் சென்று மருந்தெடுத்து பிள்ளைகளின் வைத்தியராக வேண்டும்.

இப்படியாக மனைவியாக, இல்லத்தரசியாக, தாயாக, அம்மாவாக, மாமியாக, வைத்தியராக, ஆலோசகராக, சேவகராக, வேலைக்காரியாக, பிள்ளைபெறும் இயந்திரமாக தனது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து உயிர்துறந்த எனது தாயாரை அன்னைதிரேசாவை விட உயர்ந்தவர் என்றுதான் கூறலாம். இவைமட்டுமா....? ஊரில் ஏதும் விசேசங்கள், கோவில் திருவிழாக்கள், திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, வீடுகுடிபுகுதல் என அனைத்து விழாக்களிலும் இவரின் பங்களிப்பு இருந்திருக்கிறது. திட்டமிட்டு முன்னேற்பாடாகப் பல வேலைகளைத் தானும் செய்து மற்றவர்களையும் செய்யத்தூண்டிச் சிறந்ததொரு நிர்வாகியாக செயற்பாட்டாளராக விளங்கியிருக்கிறார்.

ஊரிலோ அல்லது அயல் ஊரிலோ சொந்தபந்தங்களில் மரணம் ஏற்பட்டுவிட்டால், உடனடியாக அவர் செய்யும் வேலை மிகச்சிறப்பாகும். அதாவது பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள், உறவினர்கள் அழுது களைத்துவிடுவார்கள்தானே. எனவே அவர்களைத்தான் முதற்கருத்திற் கொண்டு நாலைந்து பேரைச் சந்தைக்கு அனுப்பி, அத்தனை உணவுப் பொருட்களையும் வேண்டிவர லிஸ்டுப்போட்டு கொடுத்து, பொருட்கள் வந்ததும் உடனடியாக நாலு ஐந்து பெண்களை வீட்டுக்கு அழைத்து, சமையல் செய்து பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களின் பசிபோக்குவார். அது அவரின் முதல் இலட்சியமாக விளங்கியிருப்பது எவ்வளவு மனிதாபிபமான கடமையாகும். இவரின் இச்செயல்தான் எனது சகோதரங்கள் இன்றும் பொதுவாழ்வில், அறவாழ்வில் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம்.

எங்கள் குடும்பத்திற்கு அன்றைய சொத்துகள் வயல், வளவு, தோட்டம், தென்னை, பனை, ஆடு, மாடு எனக்காணப்பட்டன. இவ்வளவு பிள்ளைகளையும் அடுக்கடுக்காகப் பெற்றுக்கொண்டு இந்தளவு வேலைகளையும் செய்து முடித்தார் என்றால் எவ்வளவு மனத்தைரியசாலி, உடற்பலசாலி. அன்றைய உணவுப் பழக்கவழக்கங்கள் உரமூட்டினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை கடமைகளையும் செய்து முடிப்பது என்பது மிகக் கடினமான வேலையாகும். ஏன் இத்தனைக்கும் மத்தியில் நான் சிறுவனாக, இளைஞனாக இருந்த போது அவரோடு கூலி வேலை செய்யப் பல நாட்கள் சென்றிருக்கிறேன்.

சனி,ஞாயிறு பாடசாலை விடுமுறை நாட்களில் கூலிவேலைக்குச்சென்று கிடைத்த சம்பளத்தை வைத்துதான் பாடசாலைப் புத்தகம், கொப்பி போன்றவற்றை அன்றைய நாட்களில் வாங்கியிருக்கிறேன். இவற்றைவிட எங்களுடைய வயல், தோட்ட வேலைகளிலும் தாயார் எங்களோடு இரவு பகலாகப்பாடுபட்டு மாடு போல் உழைத்து, குடும்பத்தின் உத்தமியாக வாழ்ந்து வழிகாட்டியவர் என்பதைப் பெருமையுடன் கூறலாம்.

இவரை ஒரு மேதை என்றும், சிறந்த வழிகாட்டி என்றும், பன்முக ஆளுமைமிக்கவர் என்றும் கூறினால் மிகையாகாது. பிறருக்கு கொடுத்து, பிறர் வாழ்வை உயர்த்தி, பிறர் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து, தன் குடும்பத்தையும் உயர்த்தி, சமூக சேவைகளில் சளைக்காமல் ஈடுபட்டு உத்தமியாய் உறவுகள், ஊரார், அயலூரார், போற்றும் சிறந்ததொரு பெண்மணியாக வாழ்ந்துகாட்டி ஒரு சாதனை லட்சியப் பெண்ணாக தடம்பதித்துச் சென்றமை எங்கள் குடும்பத்தின் அகல் விளக்காக எந்நாளும் ஒளி கொடுத்துக்கொண்டே நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் அழகு

தாயின் அழகிற்கு உலகில் நிகராக வேறு அழகு உண்டோ...? நாம் பிறந்தவுடன் முதல் பார்க்கும் முகம் தாயின் அழகு முகத்தைத்தான். பின்னர்தான் அத்தனை அழகுகளும். வாடகை செலுத்தாமல் கருவறையில் வீற்றிருந்தோம். தூங்காமல் பசியோடும், பட்டினியோடும் உதிரம் கொட்டி உயிர்தந்த தேவதைதான் தாய் என்னும் அழகு தெய்வம். இந்தத் திருமுகத்தின் அழகை வர்ணிப்பது என்பது எவ்வளவு சந்தோஷம்.

தாயவர் சிறுமியாய், பிள்ளையாய், குமரியாய் இருந்தபோதெல்லாம் எவ்வளவு அழகாய் இருந்திருப்பார் என்று ஒரு பிள்ளைக்கும் தெரியாதவிடையமாகும். பின்னர் தாய் அல்லது வேறுயாரும் சொல்லித்தான் அவரின் அழகைப் புரிந்து கொள்ளவோம். இந்த வகையில்தான் எனது தாய் இளம் பிள்ளையாக இருக்கும்போது தான் நல்ல குண்டுப்பெண்மணியாய், அழகான பெண்ணாய் இருந்தவர் என்று கூறியபோது அந்த அழகை ரசிக்க முடியவில்லையே என்று இப்போது ஏக்கம். அழகாய் இருந்தபடியால்தான் எனது தந்தையாரால் கவர்ந்திழுக்கப்பட்டு கட்டாயத்திருமணம் நடைபெற்றிருக்கிறது என எண்ண இடமுண்டல்லவா.....!

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்று கூறுவதைப்போல பெற்ற தாய்க்கு தன் பிள்ளை அழகுதான். அதேபோல் ஒவ்வொரு பிள்ளைக்கும் தாய் அழகு தேவதைதான். பின்னாளில் தாயோடு வாழ்ந்த காலத்தில் இளமையில் எனது தாயார் எவ்வளவு அழகாக, உடல்கட்டாக, நிறமாக வாழ்ந்திருப்பார் எனப்பல தடவைகள் நான் கற்பனையில் பார்த்து ரசித்திருக்கிறேன். தாயார் காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து, சுவாமி தரிசனம் செய்யத்தவறுவதில்லை. அப்போ அவரின் அகண்ட நெற்றியில் பெரியளவில் திருநீறு பூசி அழகுடன் தோற்றமளிப்பார். சுருள் முடி என்றபடியால் தலையைப் பின்னிக்கட்ட முடியாது. வசீகரமான தோற்றம். பக்திமிக்கவர் கோவில் விரதங்கள் தவறவிடுவதில்லை. செல்வச்சந்நிதி, நல்லூர், நயினாதீவு, வற்றாப்பளை, கதிர்காமம், மடு என வெளியூர் கோவில்களுக்கு திருவிழாக் காலங்கள் எல்லாம் சென்றுவருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட உள்ளூர் கோவில்களையும் தரிசிக்கும் பழக்கமுடியவர். அம்மன்கோவில், அண்ணமார் கோவில், கந்தசாமி கோவில் எனக்கிராமத்திலுள்ள கோவில்களின் பூசைகளுக்கும் சென்று வழிபடுவார். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரையும் அழைத்துச்சென்று வழிபட்டுவருவார். இதைவிட கோவில் திருவிழாவிற்கு பணம், பொருள், சரீர உதவிகளையும் அவ்வப்போது வழங்கி தனது நம்பிக்கையை நிலைநாட்டிக் கொண்டார்.

விலை உயர்ந்த சேலை, சட்டை வேண்டி அணியமாட்டார். எப்பொதும் சாதாரண சேலை சட்டைதான். ஏதேனும் திருவிழா, கொண்டாட்டத்திற்குச் செல்வதென்றால் பூப்போட்ட சாதாரண சேலை உடுத்திச் செல்வார். பெருமைகிடையாது. எப்போதும் சிக்கனமாக வாழப்பழகிக்கொண்டார். தந்தையார் எப்போதும் எங்கு சென்றாலும் வெள்ளைவேட்டி சால்வை, வெள்ளை பெனியன். வெள்ளை உடைகளை இருவரும் விரும்பி அணிந்துவந்ததுபோல்தான் இருவரின் மனங்களும் வெள்ளையானவையே. போட்டி, பொறாமை, எரிச்சல், வஞ்சனம் எதுவுமே கிடையாது.

இந்த அழகுத்தேவதை பெற்றெடுத்த குஞ்சுகள் அத்தனையும், அவர்களுக்குப் பிறந்த குஞ்சுகள் அனைவரும் அழகுக்கு ஏதோ குறைவோ...! அத்தனை செல்வங்களும் உயிர்த்தோன்றலுக்கு மூலாதாரமாக, ஆணிவேராக இருந்த தாயவளின் திருமுகம் எங்கள் குடும்பத்தின் தலைசிறந்த அழகாகும். இந்த அழகு தேவதையை நினைத்தால் அழகு அழகாக கண்ணீர்த்துளிகள்தான் கொட்டும்!...

---

**உலகில் பெற்ற தாயைவிட**
**உயர்ந்தது எதுவும் இல்லை**

**உலகில் தாயின் ஆசிக்கு நிகர்**
**எதுவுமே கிடையாது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேநேரத்தில்

எங்கள் குடும்பத்திற்கு ஊரில் நெல்வயல்கள், தோட்டங்கள், ஆடு, மாடுகள், பனை, தென்னை விளைபொருட்கள் என ஏராளம் வருவாய்கள் அப்போது காணப்பட்டன. ஆதலால் செல்வச்செழிப்பு நிலவியது. பசி, பட்டினி கிடையாது. கோடை, மாரி காலம் எல்லாம் உணவுத்தட்டுப்பாடு இல்லை. பெரிய கூடைகளிலும், சாக்குகளிலும் நெல்மூடைகள், தோட்டக் காய்கறிகள் தினமும், பனை, தென்னை பொருட்கள் தாராளம். ஒடியல்பிட்டு, புழுக்கொடியல், பனங்கட்டி, பனாட்டு, பனங்களி, பதநீர் எனவும், தேங்காய், இளநீர், தென்னோலை, விறகு என இன்னோரன்ன வருவாய்களும், உணவுப்பொருட்களும் தாராளமாகவே கிடைத்தன. அந்தக்காலங்கள் ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம்.

அப்படியாக வறுமையில்லாமல் வாழ்ந்தபடியால்தான் எனது தாய், தந்தை நிறையவே பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றுதான் சொல்லத்தோன்றுகிறது. பிள்ளைபெற்ற விடயத்தில் எங்கள் குடும்பத்தில் சாதனையும் இடம்பெற்றிருக்கிறது. இதை வாசிக்கும்போது உங்களுக்கு ஆச்சரியமாகவும், சிரிப்பாகவும் இருக்கலாம். ஆனால் அந்தக்காலத்தில் இது சர்வசாதரணமாகும். இனி விடயத்திற்கு வருகிறேன். எங்கள் வீட்டின் கடைக்குட்டியாக தம்பி (அழகராசா) பிறந்தபோது, எங்கள் மூத்த அக்கா ஒரு பிள்ளையைப் பெற்றார் ( சகீஸ்வரி ). அதே நேரத்தில் மூத்த அண்ணரின் அண்ணி ஒரு மகனைப்பெற்றார் (திலகநாதன்). ஒரே ஆண்டில் தாய், மகள், மருமகள் என மூவரும் பிள்ளைகளைப் பெற்றெடுத்துச் சாதனை புரிந்ததும் ஒரு வரலாறாக அமைந்துவிட்டது.

இவைமட்டுமல்ல இன்னும் சுவாரஸ்யமான நிகழ்வுகளும் எங்கள் குடும்பத்தில் நடந்தேறியிருக்கின்றன. காலங்கள் ஓடியன. பிள்ளைகள் பலர் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். அவர்களுக்கும் பிள்ளைகள் பிறந்தன. பிள்ளைகள் பல ஊர்களில் திருமணம் முடித்தனர். அப்போது எனது தாயாருக்கு மருத்துவிச்சிவேலை, பிள்ளைப்பேறு பார்க்கும் வேலைகள் நிறைந்துவிடும். வீட்டில் இருக்கும் தனது சிறு பிள்ளைகளைக் கவனிப்பதுடன், சமையல், வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் செய்ய வேண்டும். இவை அனைத்தையும் முடித்துப்பிள்ளை பெற்றவர்களைக் கவனிக்க வேண்டும். கடவுளே எத்தனை பொறுப்பு எத்தனை உழைப்பு எத்தனை உதவிகள்.

ஒரே ஆண்டில் ஓரிருமாத வித்தியாசத்தில் மட்டுவில் அக்கா ஒரு பிள்ளை பெற்றபோது, இன்னோரு அண்ணி ஊரில் ஒரு பிள்ளையைப் பெற்றிருப்பார். இதேவேளை இன்னோரு அண்ணி உரும்பிராயில் ஒரு பிள்ளையைப் பெற்றிருப்பார். இந்த மூவரையும் ஓடி ஓடிப்பார்த்து ஆறுதல் கூறி, ஒத்தாசைகள், உதவிகள் செய்து முடிப்பதற்கு அவர் எவ்வளவு பாடுபட்டார் என்பதை நான் நேரில் கண்டாலும் அவரின் வலியையும், முயற்சியையும் அரவணைத்து அன்பு ஊட்டி வளர்த்த பெருமையை இப்போ உணரும்போது ஒரு அதிசயப்பிறவியாகத்தான் வாழ்ந்திருக்கிறார். தாரமாக, தாயாக,மாமியாக, பாட்டியாக, பூட்டியாகப் பல உருவங்கள் எடுத்துக் குடும்பத்தைக் கட்டிக்காத்து வளர்த்தெடுத்த தன்னிகரில்லா என் தாய் என்னும் தெய்வத்தைப்போற்றி வணங்குகிறேன். இப்படியாகப் பெற்ற பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இன்று தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் "பெயர் சொல்ல" வாழ்ந்து கொண்டிருப்பது சிறப்பாகவே கருதலாம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க பெண்மணி.

ஆளுமை என்பது ஒருவருக்கு இயல்பாக வரக்கூடிய ஒன்றல்ல. அவர் வாழும் சூழல், வளர்ப்புமுறை, சந்ததி, கல்வி அறிவு போன்றவற்றால் ஆளுமை என்பது ஒருவருக்கு வந்துசேரும். பணம், பொருள் மட்டும் இருந்தால் போதாது. மேற்குறிப்பிட்ட அத்தனை அம்சங்களும் ஒருவரிடம் காணப்பட்டால்த்தான் சிறந்த ஆளுமைமிக்க மனிதராகா வாழ முடியும்.

இந்த வகையில் தாயார் தங்கம்மாஅவர்கள் கல்வியில் உயர்வகுப்போ, பல்கலைக்கழகமோ சென்று படித்தவரல்ல. சாதாரண எட்டாம் வகுப்பு படித்த இவருக்கு எப்படி இந்த ஆளுமை வந்த சேர்ந்தது என்று எண்ணிப்பார்க்கையில் வியப்பாகத்தான் இருக்கின்றது. ஒரே நேரத்தில் பல விடையங்களை மனதில் உள்வாங்கிச் செயற்படுபவர்களை அட்டாவதானி, தசாவதானி என்றெல்லாம் அழைப்பார்கள். இப்படி ஒரு பல்வகை ஆளுமை மிக்கவராகவே வாழ்ந்திருக்கிறார்.

பெரிய குடும்பம், நிறையப்பிள்ளைகள். பிள்ளைளைப்பெற்ற இளம் பெண்ணாக இருக்கும் போதே கணவன் அதாவது எனது தந்தையாரின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும், குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கவேண்டும். மற்றப்பிள்ளைகளுக்குப் பால்,உணவு கொடுக்க வேண்டும் காலை, மதியம், இரவு சாப்பாட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் தேடவேண்டும். அவை வேளாவேளைக்குத் தயாரிக்க வேண்டும். வீடுவளவைக் கூட்டித்துப்பரவாக்க வேண்டும். குழந்தை, மற்றும் பிள்ளைகளைக் குளிப்பாட்டிப் பராமரிக்க வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டும். வீட்டில் சண்டைபிடிக்கும் பிள்ளைகளை சமாதானப்படுத்தி நல்வழிப்படுத்த வேண்டும். பின்பு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து தூங்க வைக்கவேண்டும். பின் தந்தையாருக்கு வேண்டிய பணிவிடைகள், வீட்டிலுள்ள ஆடு மாடுகளுக்கான உணவு தயார்ப்படுத்துதல் போன்ற பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்து முடிக்கும் தசாவதானியைவிடவிஞ்சியவராகவே தாயார் இயந்திரமாக வாழ்ந்தார் என்னும்போது ஆச்சரியமாகவே இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவித சம்பளமோ, கூலியோ கிடைக்கின்றதா? இல்லவே இல்லை. குடும்பம் என்ற கோவிலில் தாய் என்னும் தெய்வம் எத்தனை கடமைகளைச் செய்து தியாகியாக வலம் வருகிறாள். இவைமட்டுமா..? தாயார் வயது வர...வரப்பொறுப்புகளும் அதிகரித்தன. உதாரணத்துக்கு சில சம்பவங்களை எடுத்து நோக்கினால்... ஒரே நேரத்தில் நான்கு,ஐந்து வகையான பிள்ளைகள். தனது சிறிய பிள்ளைகள் இரண்டு, இதைவிட வயதுக்கு வரும் வயதில் ஒரு பெண்பிள்ளை. அடுத்த பெண்பிள்ளைக்கு திருமணம் பேசிக்கொண்டிருப்பார். இன்னொரு ஆண்பிள்ளையின் மனைவி அதாவது மருமகள் நிறைமாத கர்ப்பிணியாக இருப்பர். இன்னொரு மகள் பிள்ளைபெற்று ஒருமாதம் கூட இருக்கமாட்டாது. இன்னொரு பிள்ளை வேலைக்காக வெளியூர் சென்றிருப்பார். இப்படியாக அனைத்துப் பிள்ளைகள், மருமக்கள் யாவரையும் ஒரே நேரத்தில் ஓடிஓடிக் கவனித்தார் என்றால் சாதாரண ஒரு பெண்ணால் முடியுமா...?

இன்றைய வசதிகள் வாய்ப்புகள் நிறைந்த காலத்தில் ஒன்று இரண்டு பிள்ளைகளோடு பெண்கள் பலர் படாதபாடுபடுகிறார்கள். ஆனால் அன்றைய காலங்களில் வசதி வாய்ப்புகள், பொருளாதாரம், அறிவியல் யாவும் குறைந்த காலங்களில் இப்படிப் பல பிள்ளைகளைப்பெற்று வளர்த்தல் என்பது எவ்வளவு கடினம். உண்மையில் தாயார்பட்ட துன்பங்கள், சோகங்கள் உலகில் எந்தப்பெண்ணுக்கும் ஏற்பட்டிருக்காது என்பது நிஜமாகும். தாயாரின் மனவுறுதி, திட்டமிட்டுச் செயற்பட்டமை, பொறுமை, முயற்சி, தியாகம் எல்லாமே குடும்பத்தை உயர்த்தியது என்றே அடித்துக் கூறலாம். எனது தாயாரின் இந்த ஆளுமைமிக்க பணியானது என்றும் எங்களில் பலருக்கு வழிகாட்டியாக அமைந்தது என்று பெருமையாக்க் கூறிக்கொள்ளலாம்.

---

## வெற்றி

நம்மைத் தாழ்த்தும்போது
கொதித்து எழு...
நம்மைப் புகழும்போது
அடக்கமாய் இரு!...

## சிறியது

சிறிய தவறுகளை
மறந்துவிடு...
சிறிய உதவிகளை
மறந்துவிடாதே!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் தங்கம்மா ஆச்சி

செல்வம் கொழிக்கும் வன்னிமண்ணிலும் எனது தாயார் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். துணுக்காய் பிரதேச பிரிவிலுள்ள மல்லாவியில் சகோதரர் நடராசாவிற்கு காணிகள் உண்டு. இதேவேளை எனது தந்தையாருக்கும் பாண்டியன்குளம் பிரதேசத்திலுள்ள ஒட்டன்குளம் என்ற இடத்தில் காணி இருந்தது. காலபோகம், சிறுபோகம் என நெற்செய்கை நல்லவருவாயைத் தந்தது. தோட்டப்பயிர்ச்செய்கையும் அமோகம் என்றபடியால் பசிபட்டினி இல்லை. அப்படிச்சிறப்புமிக்கதுதான் இந்த வன்னிமண்.

இந்தப்பகுதிகள் எல்லாம் குடியேற்றத்திட்டங்களாகும். தீவகப்பகுதியினர்தான் மிக அதிகமாக வாழ்ந்தனர். ஒவ்வொரு வீட்டுக்குப் பக்கத்தில் இன்னொரு ஊரவர், சாதி, மதங்களால் வேறுபட்டவர்கள் வாழ்ந்தனர். அப்போ எல்லோரும் அன்பாகவும், பண்பாகவும் பழகினர். உழைத்தனர், நன்றாக வாழ்ந்தனர். அவ்வேளையில் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோரும் எங்கள் தாயாரை நாவற்குழி ஆச்சி என்றும், நாவற்குழி அம்மா என்றும் அழைத்தனர்.

எங்கள் வீட்டில் நெல், மற்றும் மரவள்ளிக்கிழங்கு, பூசனிக்காய், பயறு, உழுந்து, முருங்கைக்காய், பப்பாசி, மாம்பழம் யாவும் தாராளமாக விளையும். வீட்டுக்கு வரும் உறவுகள், நட்புகளுக்கு இவைகளை கொடுத்து உதவுவார். யாழ்ப்பாணம் செல்லும்போது சாக்குப்பைகளில் மரக்கறி மற்றும் உணவுப்பொருட்களையும் அதிகமாக எடுத்துச்சென்று பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பார்.

இறுதிக்காலத்தில் என்னைப்பெற்றவளோடு வாழ்ந்து உதவி செய்ய முடியாவிட்டாலும் வன்னியில் என்னோடு பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். வேளாவேளைக்கு உணவுதந்து உபசரித்திருக்கிறார். எனது உத்தியோகம் சம்பந்தமாக நான் கொழும்புக்கு சென்ற வேளைகளில் பல தடவைகள் அவரை தனியேவிட்டுவிட்டு வந்தவிட்டேன்..! என்று பல தடவைகள் ஏங்கியிருக்கிறேன். அவர் ஒரு இரும்புப் பெண்மணி, மனத்தைரியம் மிக்கவர். ஆதலால் எல்லாவற்றையும் எதிர்கொண்டு வாழ்ந்துகாட்டினார். நான் காலையில் புறப்பட்டு மாலையில்தான் வீடுவருவேன். அப்போஅதிகாலையில்எழுந்து காலைச்சாப்பாடு, மதியச்சாப்பாடு எல்லாம் தயார் செய்து பாசல் கட்டித்தந்து வழியனுப்புவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல் வயல்களிலும், தோட்டங்களிலும் அப்போ பத்து-பதினைந்துபேர் வேலை செய்வார்கள். அவர்கள் அனைவருக்கும் மூன்று நேர உணவுகளைத் தயார்செய்து அவர்களுக்குப் பரிமாறுவார். பதினைந்துபேருக்கும் சமையல் சாப்பாடு அதுவும் கிழமைக்கணக்கில் என்றால் எவ்வளவு கடினம். அந்த வேளைகளில் நானும் அண்ணரும் தூள் இடித்துக்கொடுத்திருக்கிறோம். அரிசிமா, பயறுமா, உழுத்தம்மா அனைத்தும் உரல்தான். அப்போ உரல்-உலக்கை இடிபடுவதைப்போல்த்தான் எனது தாயாரும் குடும்பத்தின் உயர்ச்சிக்கு உழைத்திருக்கிறார். இப்ப உள்ளமாதிரி கிறைண்டர், மிக்சி வசதிகள் என்னென்றே தெரியாதகாலம். எல்லாம் கை, உடல் வேலைதான். இதனால் தாயாரும், நாங்களும் அப்போ உழைத்து உடல் நோய் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்ந்திருக்கின்றோம்.

---

## தாய் (பெண்) பெயர்கள்...

| | | | | |
|---|---|---|---|---|
| அம்மா | இல்லத்தரசி | மகள் | ஆச்சி | துணையாள் |
| அன்னை | மனைவி | மருமகள் | அம்மம்மா | குடும்பத்தரசி |
| மாதா | பெற்றவள் | பேத்தி | மனையாள் | குடும்பத்தலைவி |
| பதி | சம்சாரம் | மாமி | உத்தமி | குடியிருந்தகோவில் |
| தாரம் | தையல் | சின்னம்மா | ஈன்றவள் | காவல்தெய்வம் |
| இல்லாள் | துணைவி | பெரியம்மா | கர்ப்புக்கரசி | முதலானவள் |

மேற்குறிப்பிட்ட அனைத்துச் சொற்களும் தாயை அல்லது பெண்ணைக் குறிக்கும் சொற்களாகும். இன்னும் பல சொற்கள் உண்டு. பெற்ற தாயே உலகில் உயர்ந்தவள், சிறந்தவளாவள். உலகில் எம்மைப் படைத்த தாய்க்குத்தான் அதாவது ஒரு பெண்ணுக்குத்தான் மிக அதிகமான ஒத்த சொற்கள் இருப்பதாக அறியப்படுகின்றது. இந்த உலகைப் படைக்கும் தாயை பெண்ணை எந்நாளும் போற்றுவோம்!...வாழ்த்துவோம்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியாற்றில் தங்கம்மா ஆச்சி

பாலி ஆறு எங்குள்ளது என்று உங்களில் பலருக்குத் தெரிந்திருக்காது என நினைக்கிறேன். இந்த ஆறு வன்னியில் ஓடுகிறது. அதாவது பாரிய நீர்ப்பாசனக் குளமான வவுனிக்குளத்திற்கு அருகாமையில் பாண்டியன்குளம் பிரதேசத்தில் ஓடுகிறது. அதாவது மேட்டுநிலங்களிலும், சிறு மலைகளிலும் வழிந்தோடும் தண்ணீர இந்த ஆற்றில் சங்கமிக்கின்றது. இந்த ஆறு வவுனியா மாவட்டத்தில் உருவாகி, முல்லைத்தீவு மாவட்டத்தால் பாய்ந்து சென்று, மன்னார் மாவட்டத்தால் ஓடி, மன்னார் கடற்பிராந்தியத்தில் சங்கமிக்கின்றது. இந்த ஆற்றுக்கு பல சுவாரஸ்யமான கதைகளும் உண்டு.

அந்தக்காலத்தில் இந்த ஆற்றைக் கடப்பதென்பது கோடை காலங்களில் சிறிது சுலபம். மாரிகாலத்தில் மிகக்கடுமை. அன்றைய நாட்களில் குறுக்கே கட்டப்படும் பாலங்களே கிடையாது. ஆகவே ஆற்றைக் கடப்பவர்கள் தோய்ந்து, நனைந்து உயிர் ஆபத்துடன் தான் அந்த ஆற்றைக்கடக்க வேண்டும். இப்படிப் பல அனுபவங்கள் எனக்கு உண்டு. இதில் எனது தாயாரோடு ஏற்பட்ட ஆறு கடக்கும் சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன்.

எனது தந்தையாரின் வயற்காணிகள் ஒட்டன்குளம் என்ற பிரதேசத்தில் இருந்தன. எனது சகோதரரின் காணிகள் மல்லாவியில் இருந்தன. இந்த இரு பிரதேசங்களுக்கும் இடையேதான் பாலியாறு ஓடுகிறது. நிறைந்த வயல் வெளிகள் காடுகள் எல்லாம் நடந்து சென்றுதான் ஓரிடத்திலிருந்து மற்றைய இடத்திற்குச் சென்றடைய முடியும். நெல் வயல் வேலைகளுக்காக அடிக்கடி இந்த ஆற்றைக்கடந்து, நனைந்து சென்றுதான் சென்றடைவோம். இது இங்கு இயல்பும், வழக்கமான செயற்பாடும். ஒரு மாரி காலம் மழை கொட்டித்தீர்த்தது. குளங்கள், வயல்கள் எல்லாம் நீர்மட்டம் பெருக, இந்தப் பாலியாறும் நீர்மட்டம் அதிகரித்தது. சுமார் 70-80 அடி உயரத்தில் ஆற்று நீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அவ்வேளையில் அண்ணனும், தாயாரும், நானும் அந்த ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். பாதுகாப்பு ஒன்றும் இல்லாதநிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆற்றின் அகலம் சுமார் 50-60 அடி இருக்கும். நாங்கள் நன்றாகவே நீந்தத் தெரிந்தவர்கள் என்றபடியால் பீதிகொள்ளவில்லை. தாயாரைத்தான் என்ன செய்வது என்று சிறிது பயப்பட்டோம். பிறகு நாங்கள் கொண்டுவந்த நீளமான நைலோன் கயிற்றைப்பாவித்து மறுகரை போகலாம் என முடிவு எடுத்தோம். நீர் மட்டத்தில் உள்ள ஒரு மரத்தில் கயிற்றைக்கட்டிவிட்டு, அண்ணன் கடும் அலைகளிடையே தாண்டி நீந்திச்சென்று மறுமுனையில் ஒரு மரத்தில் அந்தக் கயிற்றைக் கட்டிவிட்டு, அந்தக்கயிற்றின் வழியே திரும்பி நின்ற இடத்திற்கு வந்தார். பின்பு கொண்டுவந்த உடைகள், பொருட்கள் அனைத்தையும் ஒரு உரப்பையில் கட்டி என்னிடம் தரப்பட்டது. மறுகரைக்கு கொண்டுபோய்ச் சேர்ப்பது எனது பொறுப்பு.

அண்ணன் தாயரை தோளில் இறுக்கமாகப் பிடிக்கும் படி கூற, அவரும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். அண்ணன் அம்மாவை தோளில் சுமந்தவாறு, கயிற்றில் பிடித்தபடி நீந்த, நான் பின்னாலே நீந்தி மெல்ல மெல்லமாக அலைகளையும் தாண்டி உயிர் பயத்துடன் அக்கரை போய்ச்சேர்ந்தோம். தற்செயலாக தாயாரின் கை இறுக்கமானபிடி தளர்ந்திருந்தால் அல்லது அந்தக்கயிறு அறுந்திருந்தால் எங்கள் மூவரின் உயிர்களும் அன்றே போய் முடிந்திருக்கும். நாங்கள் கொண்டு சென்ற பொருட்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. பின்னர் ஈர உடை மாற்றி, எங்கள் குடிசைக்குச் சென்றடைந்தோம்.

இவை மட்டுமா....? வன்னியில் இவை போன்ற அவலங்களும், அனுபவங்களும் நிறையவே இருந்தன. "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்று கூறுவது போல எங்கள் தாயார் ஒரு வல்ல ஜீவன்தான். மனத்துணிவு மிக்கவர். எதிர் நீச்சல் போட்டு வெற்றிபெறுவதில் வல்லவர். எத்தனையோ சோகங்கள், துன்பங்கள், போராட்டங்கள் நிறைந்ததுதான் இந்த வாழ்க்கை என்பதைத் தாயாரோடு வாழ்ந்தபடியால் பல அனுபவங்களைப் பெற்றிருக்கின்றோம். அவரின் வழிகாட்டல்கள் நம் குடும்பத்தவரின் எதிர்கால வாழ்வுக்கு நன்மை புரிந்துகொண்டிருக்கின்றன என்பது உண்மையான விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவைக்காக வளர்ச்சி!... சேவையில் வளர்ச்சி!.. சேவையினூடானவளர்ச்சி!.. சாமசிறி சமூகத்திலகம் நாவற்குழியூர் திரு வைரமுத்து - நடராசா J.P (அகில இலங்கை சமாதான நீதவான்)**

Action Green - London (UK)

# நூறாவது பிறந்தநாள்

தாய் ""மௌனத்தின் பலன் பிரார்த்தனை பிரார்த்தனையின் பலன் நம்பிக்கை நம்பிக்கையின் பலன் அன்பு அன்பின் பலன் சேவை, சேவையின் பலன் ஆன்ம நிம்மதி"" -அன்னை திரேசா-

தந்தை ""முயற்சி இல்லை என்றால் உன்னை ஜெயிக்க முடியாது. முயற்சி இருந்தால் உன்னைத் தோற்க முடியாது"" -அப்துல் கலாம்-

மேற்கூறியவற்றிற்கு அமைய எமது தாய் தந்தையர் காட்டிய பாதை, செயற்திறமை, கடின உழைப்பு எமக்குப் பாடமாக அமைந்தது. வாழ்க்கையானது ஆண் பெண் இருவரும் இணைந்துதான் நடைபெறுகின்றது. இவ்வுலகில் எல்லோருக்குமே இந்த இருவரின் கூட்டுறவில்தான் வாரிசுகள் தோன்றுகின்றார்கள். ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் நலம்பெற வேண்டும். அக்குடும்பத்தில் நல்ல குழந்தைகள் பிறக்க வேண்டும். அக்குழந்தைகள் அறிவுடையவர்களாக, சமுதாயத்தில் பொறுப்புள்ள பிரசைகளாக வாழவேண்டும். நல்ல உறுதுணையாக இருக்க வேண்டும்.

எங்கள் குடும்பத்தில் ஒன்பது ஆண் 5 பெண். நான் இரண்டாவது மகனாவன். ஒரு குடும்பத்தில் கணவனோ மனைவியோ பலரால் பாராட்டப்படுபவராகவும் புகழப்படுபவராகவும் அமையலாம். எங்கள் குடும்பத்தில் அன்னைக்கு மட்டும் புகழும் பாராட்டும் உரியதாகும். பிறர் குற்றத்தைப் பெரிது படுத்தாமையும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும் என அன்னை கூறுவதுண்டு. மனிதப் பிறவியின் மதிப்பை ஒவ்வொருவரும் உணர்ந்து பிறருக்குத் துன்பம் இழைக்காமலும் இயன்ற அளவில் உதவி செய்தும் எல்லோரும் இன்புற்று வாழ, மனமார வாழ்த்த நல்லெண்ண அலைகளைப் பரப்பிக்கொண்டே இருக்க வேண்டும்.

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் 8ம் வகுப்புவரைதான் அப்போது இருந்தது. அதுவரைதான் கல்வி கற்றனர். கல்வியை விட அவர்கள் பெற்ற அனுபவங்கள்தான் அவர்களையும் எங்களையும் நல்வழிப்படுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் தியாகராசா தம்பிமார் கூடிக்கதைத்துத்தான் நல்ல முடிவுகளை எடுத்துக்காரியமாற்றியிருக்கிறேன்.

தற்போது எனக்கு எண்பது வயது கடந்தாலும் எனது தாய் அன்று கூறி என்னை எப்படி வளர்த்தாரோ அதன்படி வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறேன். இதனால் சிலர் என்னை குறை கூறினார்கள் ஆனால் என் மனட்சாட்சிக்கு உட்பட்டு எனது குடும்பத்தவர்களுக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்திருக்கிறேன். வாழும் மட்டும் நல்லதையே செய்து வாழ்ந்தால் நமது சந்ததிகளும் நன்றாக வாழ்வார்கள். இம்மண்ணுக்கு என்னை அறிமுகம் செய்த என் பெற்றோரைப் போற்றுவோம்!..என் தாய்க்காக ஒரு பாடலை இத்தோடு இணைத்துள்ளேன்...

**பாடல்: அம்மா என்றழைக்காத உயிரில்லையே**

**குரல்: கே ஜே ஏசுதாஸ் வரிகள்: வாலி**

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறொன்று ஏது (அம்மா)
அபிராமி சிவகாமி கருமாயி மகமாயி
திருக்கோயில் தெய்வங்கள் நீதானம்மா
அன்னைக்கு அன்றாடம் அபிஷேகம் அலங்காரம்
புரிகின்ற சிறு தொண்டன் நாந்தானம்மா
பொருளோடு புகழ் வேண்டும் மகனல்ல தாயே உன்
அருள் வேண்டும் எனக்கென்றும் அது போதுமே
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும் நான்உந்தன்
மகனாகப் பிறக்கின்ற வரம் வேண்டுமே
அதை நீயே தருவாயே (அம்மா)
பசும் தங்கம் புது வெள்ளி மாணிக்கம் மணிவைரம்
இவை யாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா
விலைமீது விலைவைத்துக் கேட்டாலும் கொடுத்தாலும்
கடை தன்னில் தாயன்பு கிடைக்காதம்மா
ஈரைந்து மாதங்கள் கருவோடு எனைத்தாங்கி
நீ பட்ட பெரும் பாடு அறிவேனம்மா
ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும் உழைத்தாலும்
உனக்கிங்கு நான் பட்ட கடன் தீருமா
உன்னாலே பிறந்தேனே (அம்மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயிற்சிறந்த கோவிலுமில்லை....

**"தாயிற்சிறந்த கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
ஆயிரம் உறவினில் பெருமைகள் இல்லை
அண்ணன் தந்தையே உயர்வின் எல்லை"**

அம்மா!..தாயைப்பற்றி பெருமைகொள்ளாதவர் இந்த உலகத்தில் யாரும் இல்லை. பெற்ற தாயை எல்லோரும் மதிக்கிறார்கள் புகழ் பாடுகிறார்கள். ஆனால் அவை வெறும் வார்த்தை ஜாலங்கள் இல்லை என்பதைக் காலத்தால் உணர்ந்தேன். ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கப் படும் வேதனைகள், அதைப் பாதுகாத்து வளர்த்தெடுக்க எடுக்கும் முயற்சிகள் அப்பாடா அதுவரை அவளுக்குத் தூக்கம், ஓய்வு, உணவு இல்லாமல் எவ்வளவு தியாகம் புரிந்திருப்பாள்.

பெற்றவள் நமக்குச் செய்தகடமைகளைச் சிலபிள்ளைகள் மறந்து விடுகிறார்கள். அதில் நானும் ஒருவன்தான். அதாவது வயதான காலத்தில் அருகில் இருந்து உதவவில்லை, ஆறுதல்கூறிப் பாசத்தைக் கொடுக்கவில்லை. அவளின் மனக்கவலைகளைப் போக்கவில்லை. இவை அனைத்துக்கும் புலம்பெயர் சூழ்நிலையும் காரணமாகிவிட்டது.

அன்று என்தாய் எவ்வளவோ புத்திமதிகளைச் சொன்னாள். தர்மத்தின் ஆசையை என்மனதில் உருவாக்கினாள். நான் நன்றாக வாழ அவள் என்னையும் கூட்டிச் சென்று கும்பிடாத தெய்வங்கள் இல்லை. அங்கே இருக்கும் பிச்சை எடுப்போருக்கு எனது கையில் பணம் கொடுத்து இதை அவர்களின் தட்டுகளில் போடு..உனக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லிப் பணம் தந்து அதைப்போட வைத்து என்னையும் ஒரு தர்மகுணம் கொண்டவனாக மாற்ற ஆசைப்பட்டவர் என் தாயென்னும் கோவில்தான்.

என் தாய் எங்களை வறுமையில்தான் வளர்த்தாள். இத்தனைபேருக்கும் தந்தையின் உழைப்பு எண்ணிலடங்காதது. பசித்தபோதும் பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாதபோதும் பிறர்பொருளை அபகரிக்கவில்லை. திருடவில்லை. தட்டிப்பறிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிக்குப் பணம்பொடுத்துப் பிழைக்கவில்லை. நேர்மையாகத்தான் வாழ்ந்து எங்களை வளர்த்தெடுத்து ஆளாக்கினாள். எங்கள் அனைவரையும் பெற்றெடுத்து ஆளாக்கி அத்தனைபேரையும் நல்ல நிலைக்கு உயர்த்த அவள் பட்ட வேதனைகள் தியாகங்களை இப்போ எண்ணினால் கண்ணீர்தான் பெருக்கெடுக்கும். அப்படிப்பட்ட தியாக தீபத்தை எந்நாளும் வணங்குகின்றோம்.

ஈரைந்து மாதமே இடைநோக உடல்நோக
ஈன்றெடுத்த என் தாயே ஏழேழு ஜென்மமே
எடுத்து நான் வந்தும் என்னைத் துன்பித்து
காணிக்கை வைத்தாய் என் பாவம் தீருமா!...

முத்தம் கொடுத்த உடல் பற்றி எரியுதே
நித்தம் அணைத்த கரம் நீறாக வேகுதே
உலகில் என்னைத் தத்தம் கொடுத்த உடல்
கனலால் வேகுதே சித்தம் தடுமாறி
என் ஜீவன் மயங்குதே அம்மா!...அம்மா!...

எனது தாயவள் வாழ்ந்த காலத்தில் அறம் தவறாமல் சத்தியம் காத்தாள். ஏராளமான புண்ணியங்களைச் செய்து எங்களை வழிநடாத்தினாள். எத்தனையோ நற்காரியங்களைச் செய்து ஊருக்கு வழிகாட்டினாள். ஊரிலுள்ள பெண்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து புகழின் உச்சியில் நின்றவள்.

நிழலின் அருமையை உணர வெய்யில் தேவை. மழையின் அருமை தெரிய வறட்சி தேவை. அதே நிலை என் தாய்க்கும் ஏற்பட்டிருக்கிறது. அந்தச்சமயத்தில் என் தேவை அவர்களுக்கு வேண்டியிருந்தது. ஆனால் நானோ சவுதியில். நான் அருகில் இல்லாமையினால் தாயார் மனங்கலங்கிப் போய்விட்டார். "என் அவசரத்திற்கு இப்போது அவன் இங்கு இல்லையே" என்று வருந்தியதாகவும் பின்னர் அறிந்தேன். எனது வாழ்நாளின் பிற்காலத்தில் என் தாயைப்போல தர்மங்கள் புண்ணியங்கள் செய்ய ஆசைகொண்டு இப்பவும் ஊரில் வசிக்கும் பல வறிய உறவுகளுக்கு என்னாலான பங்களிப்பைத் தொடர்ந்து செய்து வருகிறேன். உதாரணத்திற்கு எனது சிறிய தந்தையார் மாணிக்கம் குடும்பத்தைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துப் பார்ப்பதில் உள்ள இன்பம் வேறு எதிலும் இல்லை. கொடுப்பதில் ஆசை வைத்தால் இருப்பவை போய்விடும். ஆகையால் துன்பம் தராது. இனிக்கொடுப்பதற்கு என்ன செய்வதென்ற கவலைதான் இப்போ!.. கொடுப்பது கடமையாகிவிட்டால் பிறர்பொருளை மனம் விரும்பாது. அதாவது பேராசை போய்விடும். பேராசை இல்லையானால் சுயநலம் இருக்காது. தர்மமார்க்கமே முடிவானால் அங்கே ஆசை, பாசம், சொந்தம், பந்தங்களுக்கு இடமில்லை. என்னை இந்த நிலைக்கு மாற்றியவர் என்தாயவள்தான். ஆகவே நம் தாய் தந்தையரின் வழிகாட்டலைப் பின்தொடர்ந்து நற்காரியங்களைச் செய்து வாழ்வதே எனது பணியாக மாறிவிட்டது. இப்போ எனக்கு மரணம் பற்றிக் கவலையில்லை. இறைவனை அடையும் மார்க்கமே என் சிந்தனையாகும்!..

சிறுவயதில் ஒரு சம்பவம் எங்கள் வீட்டிற்குப் பின்னால் உள்ள பனங்காணியில் ஒரு கிழவி (வெள்ளையண்ணரின் தாயார்) வயதுபோய் நடமாட முடியாத நிலையில் தனிமையில் வாழ்ந்துவந்தார். அவருக்கு உதவிசெய்யப் பல சிறுவர்கள் முன்வராதபோதும் என்தாயாரின் அறிவுறுத்தலால் நான் செய்துவந்தேன். அப்போது போறவழிக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று சொன்னார் என்தாய். எனக்கு அப்போ விளங்கவில்லை. பின் வளர்ந்து ஆளாகி சவுதிநாட்டில் பல புத்தகங்களைப் படித்து வாழ்ந்த போதுதான் இதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டேன். அதாவது நீ செய்யும் நற்காரியங்கள்தான் நீ உயிர் பிரிந்த பின் உன் ஆன்மா ஜென்ம லோகம் செல்லும் வழியில் உனக்கு எந்தத்தடைகளும் வந்து சேராது. சந்தோஷமாகச் செல்வாய் என்று விளங்கிக்கொண்டேன். அதாவது சிறுவனாக நான் அந்த வெள்ளைப் பாட்டிக்குச் செய்த சேவை(அவரின் மனிதக்கழிவுகளை தூரக்கொண்டுபோய் போடுதல்) தெய்வத்திற்குச் செய்த சேவையாகும். நிட்சயம் எனது வாழ்க்கைப் பயணத்தில் இது புண்ணியமாக அமைந்தது என்றே கூறுவேன்.

தற்போதய காலத்தில் பிறந்தநாள் வேறுபல கொண்டாட்டங்கள் எனப் பலர் ஆடம்பரமாக பெரும் பணத்தைக் கொட்டிச் செலவழித்துக் காசைக் கரியாக்குகின்றனர். ஊரில் வாழ்ந்த காலத்தில் பிறந்தநாள் என்றால் என்னென்று தெரியாமல் வாழ்ந்த பலர் இன்று நிலைமாறி வாழ்வது வேதனையே. அடுத்தவன் பசித்திட்டால் ஈயாதா பலர் ஆடம்பரத்தில் மூழ்கி அழிவதைக் காண்கின்றோம். இதனால் ஆடம்பர வாழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் புறக்கணிக்கின்றேன். இந்த ஆண்டு தை மாதம் முதலாம் திகதி எனது தினம் என்பது எனது நண்பர்கள் சிலருக்குத்தெரியும். அவர்கள் இரகசியமாக ஒரு சிறு கொண்டாட்டம் செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். எனக்குத் தெரியாது. ஆனால் இந்நாளில் ஏதாவது செய்யலாம் என்று நான் நினைத்து, எனது நண்பனின் மனைவி ஊருக்குப் போகும் போது அதாவது தை மாதம் முதலாம் திகதி அவரிடம் இலங்கை பணம் ஒரு லட்சம் ரூபா கொடுத்து இப்பணத்தை கைதடியில் அமைந்துள்ள ஆதரவற்றோர் இல்லப் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் படி வேண்டியிருந்தேன். அதன்படி அவரும் பணத்தைக் கொடுத்தார். எட்டாம் திகதி நான் பிறந்த நட்சத்திரம் வந்த அந்த நாள் இப்பணம் அங்கே சேர்ந்தது எனக்கு மகிழ்வுதான். இதற்கு வழிகாட்டியாக இருந்தவர் என் தயார்தான். ஆகவே நாம் வாழும்போதே பிறருக்குக் கொடுத்து வாழவேண்டும். பிறர்பொருளை பணத்தை அபகரிக்காமல் வாழ்ந்தால் நமது சந்ததிகளும் என்றும் சந்தோஷமாக வாழ்வார்கள். பிறரும் சந்தோஷமாக வாழ்வார்கள் என்பதே நிலையான உண்மை என்பதனைப் புரிந்துகொண்டு வாழ்கிறேன்.

இப்படியாக என் தாயாரைப் பற்றி எழுதுவதென்றால் பக்கம் பக்கமாகவே எழுதலாம். அவரின் வாழ்க்கையின் முன்மாதிரிகள், பணிகள், வழிகாட்டிய முறைகள், பிறருக்கு உதவிய முறைகள், பிள்ளை வளர்ப்பில் அவரின் உழைப்புக்கள், பெண்கள் எப்படி வாழவேண்டும் என்ற வழிமுறைகள் அனைத்தையுமே அவர் திறம்படத்தான் செய்துவிட்டுச் சென்றுள்ளார். நானும் இளவயதில் எனக்குத் தெரியாமல் அறியாமல் பல தவறுகளை விட்டிருக்கிறேன். அவற்றையெல்லாம் இப்பொழுது எண்ணும்போது வேதனைப்படுகிறேன்.

தற்பொழுது வயதுபோன காலத்தில் படாத துன்பங்களை எல்லாம் பட்டு, குடும்பம் பிள்ளைகள் என எல்லோராலும் கஸ்டப்பட்டு மனம் நொந்து வாழ்ந்தாலும் எனது தாயை தந்தையை நினைத்துத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். தாய் என்னும் கோவிலைத் தினமும் வழிபட்டுக்கொண்டுதான் வாழ்கிறேன். சில அனுபவங்கள் முன்கூட்டியே எனக்குத் தெரிந்துவிடும் 1988ம் ஆண்டில் நான் ஒரு பாடல் எழுதினேன் அதை எப்பொழுதும் நான் நினைத்துப் பார்ப்பதுண்டு..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை என் துணை அதைத்தந்தான் இறைவனே
வசந்த காலம் மலர்ந்த போதும் நான்
கண்டதில்லையே தனிமை என்னும் துணை
விளை நிலம்
ஒன்று வேலிக்குள் இன்று
பலனின்றிப் போகும் நிலையினிலே
உறவென்னும் கூண்டில் தனிமையில் வாடும்
பறவையின் உள்ளம் தவிக்கையிலே
எந்நாளும் தாய்மை என்கின்ற தெய்வம்
கொள்ளாத துன்பம் இல்லை தனிமை என்னும் துணை
கடலுக்குள் ஓடும் நதிகளின் ஓட்டம்
கரையினில் பார்த்தால் தெரிந்திடுமா
இதயத்தில் ஏங்கும் ஏக்கத்தின் வாட்டம்
எழுத்தினிற்கூட முடிந்திடுமா
கண் மூடித்தூங்கும் என்போல யாரும்
இன்றில்லை பூமிதனில் தனிமை என் துணை!...

தாய் அன்பும் தாய்ப்பாசமும் தாயின் ஆசியும் என்றும் நமக்குத்துணை!..
வாழ்க வையகம்!.. **வி.எஸ்.வாசன் (சீனிவாசன்)**

**மகன்**

**- லண்டன்**

---

# அன்னையவள்!...

அன்பின் சிகரமானவள்
ஆசையின் முத்தானவள்
இதயத்தின் நாளமானவள்
ஈகத்தின் வடிவமானவள்
உண்மையின் உயிரானவள்
ஊக்கத்தின் உரமானவள்
எளிமையின் வடிவானவள்
ஏழ்மையை விரட்டுபவள்
ஐயமின்றி கடமையாற்றுபவள்
ஒருவருக்கும் தீங்கிழைக்காதவள்
ஓயாமல் உழைப்பவள்
ஔவை போல் வாழ்பவள்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து மாதம் என்னைச் சுமந்தவள்....

பத்து மாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டி வளர்த்த எனது தாயாருக்கும் என்னையும் எனது சகோதரங்களை வளர்க்க மாடாக உழைத்த எங்கள் தந்தைக்கும் முதல் வணக்கம். தந்தையார் உழைத்தாலும் தாயார்தான் வீட்டுப்பொறுப்பு முழுவதையும் பார்த்தார். பெரியண்ணர் வளர்ந்ததும் படிப்பை நிறுத்திவிட்டுத் தந்தையாருடன் சேர்ந்து வேலை செய்து மற்றவர்களைப் படிக்க வைத்து ஆளாக்கினார். குடும்பத்தில் என்ன பிரச்சனை வந்தாலும் நாங்கள் எல்லோரும் நித்திரையானதும் தாய் தந்தை பெரிய அண்ணர் இரண்டாவது அண்ணர் எனச் சேர்ந்து ஆலோசனை செய்வார்கள் பின்பு அதன்படி நடந்து கொள்வார்கள்.

நான் திருமணமான பின்பு எனது கை ரேகையைப்பார்த்து ஒரு சாத்திரி சொன்னார். உனது தகப்பனுக்கு மூன்று உத்தியோகம் தெரியும். என்று, எனது தந்தையார் விவசாயம் செய்பவர் இவர் என்ன உத்தியோகம் என்று சொல்லுகிறாரே என்று திகைத்துப் போய் நின்றோம். அப்போ அவர் சொன்னார் உத்தியோகம் என்றவுடன் அரசாங்க வேலை என்று நினைத்தார்களா?.. அதுதான் இல்லை. ஒன்று நன்றாக வேலை செய்வார். இரண்டு நன்றாகச் சாப்பிடுவார். மூன்றாவது சொன்னதைச் செய்வார். அவர் சொன்னதும் சரிதான் உண்மையும் அதுதான். தந்தையாரிடம் குடிப்பழக்கம் இல்லாதபடியால் எங்கள் எல்லோரையும் வளர்ப்பதற்குத் தாயாருக்கு இலகுவாக இருந்தது. கடைசி நேரத்தில் வருத்தமாக இருக்கும்போது எனக்கு அவரைப் பராமரிக்கும் பாக்கியம் கிடைத்தது. சந்தோஷமாகப் பார்த்தேன். தாயாருக்கு அந்தப் பாக்கியம் கிடைக்காமல் போனது இன்றும் கவலைதான்.

சிலவேளைகளில் குடும்பத்தில் பிரச்சனை ஏற்படும்போது தாயார் சாப்பாடு கொடுத்தால் வேண்டாம் என்று அடம்பிடிப்பார். நான் கொடுத்தால் வாங்கிச் சாப்பிடுவார். சில சமயம் கிறுக்குக்குணம் வந்தால் தடியால் யாரென்றும் பார்க்காமல் எறிவார்.தாயார் எல்லாப்பிள்ளைகளையும் மருமக்களையும் பேரப்பிள்ளைகளையும் சமமாகப் பார்ப்பார். அதனால்தான் இந்தப்பெரிய குடும்பத்தைக் கொண்டு நடத்தக்கூடியதாக இருந்தது என்று சொல்ல முடியும். எங்கள் எல்லோருக்கும் பெரிய ஒரு வழிகாட்டியாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு மட்டுமல்ல எங்கள் ஊரில் உள்ளவர்களின் நன்மை தீமை எல்லாவற்றிற்கும் முன்னின்று உதவி செய்வார்கள். அது மட்டுமல்லாமல் பிரிந்து வாழும் குடும்பங்களைக் கண்டு பேசிச் சமாதானத்தை ஏற்படுத்தி மீண்டும் ஒன்றுசேர்ந்து வாழ வழிவகுத்தார் எங்கள் தாயார். நாவற்குழிச் சந்தியிலிருந்து கேரதீவு வரைக்கும் துரை குடும்பம் என்றால் தெரியாதவர்களில்லை என்று பெருமையாகக் கூறலாம். இன்னும் சொல்லப் போனால் பதின்நான்கு செல்வங்களைப் பெற்றுச் சாதனை படைத்தவர்கள். எனது தாயார் அடிக்கடி சொல்வார் "நேரம் பொன்னானது" என்று. ஊரில் இருக்கும் போது அதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை வெளிநாட்டுக்கு வந்த பின்புதான் அதன் அர்த்தம் எனக்கு விளங்கியது. தாய்-தந்தையர் அதிகம் படிக்காதவர்களாக இருந்தாலும் எவ்வளவோ அறிவும் ஆற்றலும் இருந்தபடியால்தான் எங்கள் எல்லோரையும் வளர்த்துப் படிப்பித்துத் திருமணம் செய்து வைத்தார்கள். அவர்களுக்குக் கடவுளும் துணையாக இருந்திருக்கிறார் என்று நம்புகிறேன்.

எனது மகளுக்கு நுவரெலியா-கந்தனில் ஆசிரியர் வேலை கிடைத்ததாலும் நாட்டு நிலமை மோசமாகியதாலும் எனது குடும்பம் மட்டுவிலில் இருந்து இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கே மற்றப் பிள்ளைகளைப் படிக்க வைத்து நானும் அவர்களுடன் இருந்தேன். ஒரு விடுமுறைக்கு ஊருக்குப் போனேன். அப்போ எனது தாயார் பல பொருட்களை எனக்கு எடுத்துக் காட்டினார். அவை அனைத்தும் தான் இறந்தபின்பு தேவையான பொருட்கள்தான் நான் அவற்றைப் பார்த்துவிட்டு வியந்தேன் கண்ணீர் சொரிந்தேன். மலைத்துப்போய் நின்றேன். அவர் சொன்னார் நான் இறக்கும் அன்று ஊரடங்குச் சட்டம் என்றால் நீங்கள் போகவேண்டிய இடங்களுக்குப் போய் எல்லாப் பொருட்களையும் வேண்டமுடியாது. நீங்கள் கஸ்டப்படக்கூடாதென்று எல்லாம் வேண்டி வைத்துள்ளேன். ஒன்று மட்டும் வேண்டமுடியாது. அதுக்கும் நீங்கள் யோசிக்கத் தேவையில்லை. தென்னை ஓலையால் பின்னிவிட்டு அதில் என்னை வைத்துக்கொண்டு போகலாம்.

அந்தத்தீர்க்கதரிசி சொன்னது போல் அன்று நாட்டில் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்தது. 04.04.1998 அன்று தாயார் காலமாகிவிட்டார். ஜெகராசா அண்ணர் சாவகச்சேரிக்குப்போய் கடை முதலாளியிடம் கதைத்துப்பேசிப் பின்கதவைத் திறந்து சவப்பெட்டி வேண்டிவந்து அன்றே நல்லடக்கமும் செய்து முடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால் வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளை எதிர்பார்க்கக்கூடாது தான் இறந்தால் அன்றைய தினமே அடக்கம் செய்யவேண்டும் என்று ஏற்கனவே ஜெகராசா அண்ணரிடம் தாயார் சொல்லி வைத்தவராம். அவர் விருப்பப்படி அவர் கூறியபடி எல்லாம் நடைபெற்று முடிந்தது. உண்மையில் எனது தாயார் ஒரு ஞானத்தங்கம்தான். போக்குவரத்துப்பிரச்சனையால் எனதுகுடும்பமும் தம்பி சிவராசா குடும்பமும் மூத்த அண்ணர் தியாகராசா குடும்பமும் கொழும்பில் நின்று தவியாய் தவித்தும் பலன் இல்லாத பிள்ளைகளானோம். கடைசி நேரத்தில்கூட தாயாரைப் பராமரிக்கவோ திருமுகத்தைப் பார்க்கவோ முடியவில்லையே என்ற ஏக்கம் இன்றும் என்றும் உள்ளத்தில் உறுதிக்கொண்டே இருக்கின்றது.

ஒவ்வொருவருக்கும் பெயர் அமைவது போல் வாழ்க்கையும் அமையும் என்றும் சிலர் கூறுவார்கள். வைரமுத்து-தங்கம்மா என்று சொல்லும்போது அதற்குள் தங்கம், வைரம், முத்து என்பன அடங்குகின்றன. அந்த வைரமும் சேர்த்துச் செய்த கலவைதான் நான். எனக்குப் பராசக்தி என்று பெயர் வைத்தமைக்கு அவர்களுக்கு என்றும் நான் நன்றி செலுத்துகிறேன். என்னுடைய வாழ்வில் பல இன்னல்கள் ஏற்பட்டபோதும் அவற்றை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போடவைத்து வாழ்வில் வளம்பெற வைத்து சக்தி என்னும் பெயருக்கு ஏற்றவாறு சக்தியைக் கொடுத்த எனது தாய்-தந்தையரை என்றும் வணங்குகிறேன். நன்றிகூறுகிறேன்!...

**திருமதி பராசக்தி பரமசாமி**
**மகள் - லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைக்குட்டியின் கடைசி வரிகள்....

அம்மா (ஆச்சி) பத்து மாதம் சுமந்த அம்மா நீ கருவறையில் உயிர் தந்து தொப்புள் கொடி வழியே உறவு தந்து கத்தரித்த போதிலும்.அம்மா(ஆச்சி) எனும் சொல்லில் உணர்வு தந்து பிள்ளைப் பாசம் எனும் உணவூட்டி உருவம் தந்த என் அன்னை (ஆச்சி). படிக்கச் சொன்ன ஆசான் நீ கரம் பிடித்து நான் தடுமாறி விழுந்த போதெல்லாம் என் கண்களை விட வேகமாக கலங்கியது உனது கண்கள்தான். காய்ச்சல் வந்த மாலையில் பட்டுத் துணியோடு உறங்காமல் உட்க்கார்ந்திருந்தது உனது பனித்த கண்கள்.இப்போது என்னை நனைக்கிறது.

அம்மா (ஆச்சி) என் ஆதி வார்த்தை, என் பிரிய வார்த்தை என் நெருவிலும் என்னை கார்த்த வார்த்தை என்னைக் கைபிடித்து வழி நடத்தும் வார்த்தை பேசாத பொழுதுகளிலும் என்னைப் பேசவைத்து வழி நடத்தும் வார்த்தை. நான் பிறந்த நாள் தொடங்கி திருமண பந்தத்தில் இணையும் வரை உனக்கு குழந்யாகவே இருந்தேன் இப்போதும் நீ குழந்தையென அழைத்ததை எண்ணி எண்ணி நீ மறுபடியும் இவ்வுலகில் மறுபிறவி எடுக்கமாடடாய என துடிக்கிறேன்.

ஒரு குடும்பம் நன்றாக இருக்க வேண்டும், நன்றாக வர வேண்டுமென்றால் அந்த குடும்பத்தின் தாயானவளும் மூத்த பிள்ளையும் சரியாக இருக்க வேண்டும் என கூறுவார்கள் அதன் அர்த்தத்தை எனது வாழ்க்கையில் உன்னையும், மூத்த அண்ணனையும் (தியாகராஜா) பார்த்துப் பார்த்து வியந்து போனேன் இதை ஊரவர்கள் கூடப் பார்த்து பிரமித்துப் போனார்கள். என்னடா இந்தத் தங்கம்மா பதின்நான்காயும் பெற்று ஒருவித பிரச்சனைகளுக்கும் இடம் வைக்காமல் சாதுர்யமாக பிள்ளைகளையெல்லாம் வளர்த்துள்ளாள் என உற்றார், உறவினர், அயலூரவர்களெல்லாம் பாராட்டும்படி செய்தாய் இதுவே எனக்கும் எனது சகோதர சகோதரிகளுக்கும் நீ செய்த பெரிய பாக்கியம். இதனால் இன்று உனது பிள்ளைகள் தலைநிமிர்ந்து நடக்கக்கூடியதாக இருக்கிறது. இப்படியொரு பாக்கியம் இனிமேலும் எமது வாழ்வில் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்தான் உனது கடைக்குட்டிப் பிள்ளை. எவ்வளவு அன்பாக என்னை வளர்த்தாலும். நான் செய்யாத குளப்படிகள் ஏராளம். நான்தான் எனது சகோதரர்களிடம் அடிவேண்டியதிலும் முதன்மையானவன். ஒரு வீட்டில் கடைசிப் பிள்ளைக்குத்தான் அதிக வேலை. அதே நேரம் கடைசிப்பிள்ளையில்தான் எல்லோரும் அன்பாகவும் இருப்பார்கள். அப்படிச் செல்லமாகவும் அன்பாகவும் வளர்ந்த நான் தான் உனக்குக் கொள்ளி வைக்க வேண்டும் என்று சொல்வார்கள். அது எனது கடமை என்றும் சொல்வார்கள்.

அதை நான் ஏற்றுக்கொண்டு வாழ்கையில்தான் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றபடியால் பெற்றவளின் அன்பைப் பெறமுடியாமல் தவித்தேன். கால ஓட்டத்தில் வயதுபோய் என்னைப் பெற்றவள் இறந்த பொழுதுகூட அந்தக்கடமையைச் செய்யமுடியாமல் வெளி நாட்டில் நின்று தவித்தேன். கடைக்குட்டியாகிய நான்தான் என் தாயில் இறுதியாகப் பால் குடித்து வளர்ந்தேன். ஆனால் உனக்குப் பால்ஊட்டமுடியாமலும் இறுதிப் பயணத்தில்கூடக் கலந்துகொள்ள முடியாத பாவியாக வெளிநாட்டில் நின்று துடித்தேன். அந்த நினைவுகள் இன்றும் என் மனதை வாட்டி வதைக்கின்றதே தாயே!..

என் வாழ்வில் இருள் போக்கி ஒளி ஏற்றி வாழ்வில் உயர்ச்சி பெற வைத்த என் தங்கமே!.. எனக்கு இன்னொரு ஜென்மம் கிடைத்தால் மறுபடியும் உனது மகனாக பிறக்கவேண்டுமென ஆண்டவனை வேண்டி விடைபெறுகிறேன். என்றும் உன் கடைக்குட்டி!...

**வை.அழகராஜா**
**லண்டன்.**

---

**இளமை முதுமையை நோக்கி விரைகின்றது**
**இன்பம் துன்பத்தை நோக்கி நகருகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் பிள்ளை....

ஒரு சோடி திருமணம் முடித்துவிட்டால் எண்ணிப் பத்தே மாதத்தில் குழந்தை பிறக்க வேண்டும் என்பது நமது சமுதாயத்தில் எழுதாத விதியாகும். அதுவும் மூத்தபிள்ளை ஆண்பிள்ளை பிறந்துவிட்டால் அந்தக்குடும்பத்தில் குதூகலம்தான். அப்படிப் பிள்ளை பிறக்கவில்லை என்றால் பெண்ணின் தலைமீதுதான் குண்டைத்தூக்கிப் போடுவார்கள். பழி சுமத்துவார்கள். உடல் ரீதியாக ஆணிலே குறைபாடு இருந்தாலும் குழந்தை இல்லை என்றால் பெண்மீதுதான் அபாண்டமாகப் பழி சுமத்துவது தமிழ்ச்சமுதாயத்தின் குறைபாடு என்றுதான் கூறவேண்டும்.

வைரமுத்து - தங்கம்மா தம்பதிகள் திருமணம் முடித்து அடுத்த வருடமே முதல் ஆண் பிள்ளை (தியாகராசா) பிறந்துவிட்டார். குடுப்பத்தில் சந்தோஷம்தான். பின்பு அடுக்கடுக்காக ஒரு டசினையும் தாண்டிப் பிறந்தார்கள். (9ஆண் + 5பெண்) அந்த ஊரிலேயே பெரிய குடும்பம். இதுவரை அந்த ஊரில் இந்தச் சாதனையை ஒருவரும் முறியடிக்கவில்லை என்பதும் ஒரு வரலாறாகும். எப்படி இருந்தாலும் தாய்-தந்தையருக்கு முதல்ப்பிள்ளையில் கொள்ளை ஆசைதானே. இது இயல்பான வாழ்க்கை முறைதானே.

தங்கம்மா பெற்றெடுத்த பிள்ளைகள் வளர்ந்து திருமணம் செய்து தாங்களும் பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் இவ்வளவு பெரிய குடும்பத்தை உழைத்துக் காத்த தந்தையுடன் தோள் கொடுத்து உழைத்தவர் என்றால் அது மூத்த மகனுக்கே (தியாகராசா) சாரும். உடன்பிறந்தோரின் கல்வி, வேலைவாய்ப்பு,உழைப்பு, பாதுகாப்பு, திருமணம், ஒழுக்க வாழ்வு என அனைத்தையும் மூத்த மகனின் தலையில் பாரம் வந்து விழுந்துவிடும்.அப்படித்தான் எங்கள் குடும்பத்தில் சகல பொறுப்புக்களையும் மூத்த அண்ணரும் இரண்டாவது அண்ணரும் பார்த்துக்கொண்டனர். தாயாரின் வழிகாட்டலில் தந்தையார் மற்றும் மூத்த அண்ணனின் உழைப்பு இரண்டாவது அண்ணனின் (நடராசா) நிர்வாகக் கட்டமைப்பில் எங்கள் குடும்பத்தவர்கள் இன்றுவரை நன்மதிப்போடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகனுக்கும் எங்கள் தாயாருக்கும் வயது வித்தியாசம் பதினெட்டுத்தான். இருவரும் கூடிப்பேசித்தான் எந்தக்காரியத்தையும் செய்வதை நான் கண்டிருக்கிறேன். தாயார் அவரை மூத்தவா...மூத்தவா என்றே எப்போதும் அழைப்பார். பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாத நேரங்களிலெல்லாம் மூத்தவன் வரட்டும் இன்றைக்கு நல்ல அடிவேண்டித்தருகிறேன் என்று தாயார் கடிந்து பேசியதை நான் பலதடவைகள் அவதானித்திருக்கிறேன். அவர் வீடு வந்ததும் எல்லோரும் அமைதியாகி விடுவார்கள். அப்படி ஒரு பய பக்தியும் கட்டுப்கோப்பாகவும் நாங்கள் வளர்வதற்கு மூத்த உண்ணரின் அன்பும் ஆதரவும் கண்டிப்பும் உழைப்பும்தான் காரணமாக அமைந்தன என்று கூறலாம்.

இப்படிப்பட்ட மூத்த அண்ணர் எங்கள் குடுப்பத்திற்குச் செய்த பணிகளோ ஆயிரம். மிக...மிக...அதிகம். உடன்பிறந்தோரின் நலத்திற்காக எதிர்கால வாழ்விற்காக தன் படிப்பையே இடை நடுவில் நிறுத்தி உழைப்பு என்னும் உன்னத பணியில் ஈடுபட்டார். தந்தையாரோடு மாடாக உழைத்து உருக்குலைந்தவர். அப்படிப்பட்ட தியாகிதான் இந்தத் தியாகச் செம்மல் தியாகராசா அவர்கள். அவர் தற்போது உயிருடன் இல்லாவிடினும் அவர் செய்த பணிகளுக்கு ஒருவரும் ஈடுகொடுக்க முடியாது என்பது உண்மையே.

எங்கள் வீடும் அவரின் வீடும் ஒரே கிராமத்தில்தான். அருகே அமைந்துள்ளன. அப்போது அவர் தொழிலுக்குச் சென்றாலும் அல்லது வேறு விடையமாக எங்கு சென்றாலும் நடுச்சாமமானாலும் எங்கள் வீட்டுக்கு வந்து தாயாரோடு கதைத்துப் பேசி, ஒரு தேநீர் குடித்து, உடன்பிறந்தோரின் குறைநிறைகளை அறிந்துதான் செல்வார். அப்படியாகஅவரும் எங்கள் குடும்பத்தின் பிதாமகளும் பிதா மகனுமாக வழிநடத்தினார்கள் என்பது நிஜமாகும்.

இப்படியாக எங்கள் குடும்பத்திற்கு உழைப்பு என்னும் புனிதமான பணியை அர்ப்பணிப்போடு வாழ்ந்து காட்டிய இந்தத் தியாகச் செம்மலின் மனைவி அதாவது எங்கள் குடும்பத்தின் மூத்த மருமகள் (இராசமணி) அவரும் எங்கள் குடும்பத்திற்காகப் பல தியாகங்களைப் புரிந்தவர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் குறிப்பிட்டுச் சொல்லலாம். தனது பிள்ளைகளைப் போல் எங்கள் வீட்டுச் சிறியவர்களையும: அன்றைய காலப்பகுதிகளில் கட்டிக்காத்து தாயாகவும் அண்ணியாகவும் இருந்து எங்கள் குடும்பத்துக்காக உழைத்தவர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார். இருவரும் எங்கள் குடும்பத்தின் மெழுகுதிரியாக ஒளி கொடுத்திருக்கிறார்கள் என்பது உண்மையே. மூத்தவர் என்றும் எங்கள் குடும்பத்தின் மூத்தவர்தான். இவர் ஒரு குலவிளக்கே. இச்சந்தர்ப்பத்தில் எங்கள் குடும்பம் சார்ந்த அஞ்சலிகள்!...

## அப்பம்மா ஒரு அதிசயப் பெண்மணி!...

அப்பம்மாவை நான் கண்டதில்லை. நான் குழந்தையாக இருக்கும்போது என்னை மடியில் தூக்கி வைத்திருந்தவர் என்று என் அப்பா-அம்மா சொன்னார்கள். 1998ல் அப்பம்மாவைப் பார்க்க தாயகம் சென்றபோது நாங்கள் கொழும்பில் நிற்க அவர் உயிர் பிரிந்தது. அப்போதய போர்ச் சூழலில் அப்பம்மாவின் பூ உடலைக்கூடப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது பெரும் கவலை. இருப்பினும் அப்பம்மா நிறையவே பிள்ளைகளைப் பெற்றது மாத்திரமல்ல இறுதிவரை அவரின் அழகு, ஆளுமை, குடும்ப நிர்வாகம்,திறன், உழைப்புக்கு நிகரேதும் இந்த உலகில் இல்லை என்பது எனது நம்பிக்கையாகும்!...ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறேன்...

**திருமதி. சிவதர்சினி-பிராங்ளின்**
**ஜேர்மனி.**
**பேரப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தெய்வம்....

நாவற்குழி கிழக்கு, வேலம்பிராய் கிராமத்தில் பிறந்து வளர்ந்து அமரத்துவமடைந்த திருமதி வயிரமுத்து தங்கம்மா அவர்களின் நூறாவது பிறந்தநாளையொட்டி அவரைப் பற்றி மலர் வெளியீடு செய்வதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன் வேலம்பராய் கிராமத்தில் முத்து தங்கம் என்றாலும் கொத்துக் கொத்தாகப் பிறந்த 14 பிள்ளைகளில் 13 வது பிள்ளையான மகள் பரமேஸ்வரியின் கணவர் என்கிற முறையில் அவரைப் பற்றி நான் அறிந்த நல்ல பொக்கிசங்கள் சிலவற்றை சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன். 1980ம் ஆண்டு வேலம்பிராய் கிராமத்தில் நான் காலடி வைத்த நாள் தொடக்கம் எனது மாமியான தங்கம்மா அவர்களைப் பற்றிய சிறந்த குணாதிசயங்களை யானறிவேன் அவரை எனது தாயைப் போல் தான் நேசித்தேன் . அதே போல் அவரும் என்னை தனது மகனாகத் தான் கவனித்து சில அறிவுரைகளை வழங்கினார் .

எமது முதல் குழந்தை சரிதா பிறந்து நாம் புலம் பெயர்ந்து செல்லும் வரை எங்களுடன் ஒன்றாக இருந்து எனது மனைவியையும் மகளையும் அன்பாகப் பார்த்தார். இரண்டு, மூன்று பிள்ளைகளை பெற்று வளர்க்க கஸ்டப்படும் இக்காலத்தில் 14 பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி சான்றோர் போற்ற வைத்த பெருமைக்குரியவர். தனது பிள்ளைகளை மிகவும் கட்டுக்கோப்புடனும் சிறந்தபழக்க வழங்கங்களுடன் பராமரித்துள்ளார். எந்த விடயமானாலும் தனது மூத்த பிள்ளைகளுடன் கலந்து ஆலோசித்து தான் முடிவு செய்வார் அவரது ஆசீர்வாதத்தால் எமது பிள்ளைகள் கணக்காளராகவும், டாக்டராகவும் கணணி பொறியியலாளராகவும் மற்றும் அவரது பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் டாக்டராக, சட்டத்தரணிகளாக, பொறியலாளர்களாக, கணக்காளர்களாக, கட்டிட படவரையஞராக, ஆசிரியர்களாக, ஊடகவியலாளர்களாக இருப்பதையிட்டு மிகவும் பெருமையடைகின்றேன் அவரது நினைவுகளை சுமந்த வண்ணம் அவரது நினைவாக அவர் வாழ்ந்த இல்லத்தை புனரைமைத்து " ஆச்சி இல்லம்" என பெயர் சூட்டி வருடந்தோறும் அவரது நினைவு தினத்தை கொண்டாடி வருகின்றோம் அவர் ஓர் அணையா விளக்கு எம்மை வழிகாட்டி வாழ வைத்த அன்புத் தெய்வம். அவரது நல்லாசிகள் என்றும் எம்மை வழிகாட்டும்.

**ஆ.பாலேந்திரன் தலைவர்,**
**நாவற்குழி கிழக்கு "காந்தி" சனசமூக நிலையம்**
**மருமகன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம்மா எனது தங்கமான அம்மம்மா!....

தங்கம்மா வைரமுத்து அவர்கள் எனது அம்மம்மா என்பதில் நான் மிகவும் பெருமைபட்டுக் கொள்கிறேன். காரணம் தனது சிறியவயதில் திருமண பந்தத்தில் இணைந்து தனதுகல்வியைப் பாதியில் இடைநிறுத்தியபோதும் தனது பிள்ளைகளை சகல நெருக்கடிக்குள்ளும் கற்பித்து ஆளாக்கி நல்ல நிலைமைக்கு இட்டுச் சென்றதில் அம்மம்மாவுக்குப் பாரிய பங்குண்டு. அதுமாத்திரமல்லாமல் குடும்பத்தில் எழும் பிரச்சனைகளைச் சமாளித்து அவைகளுக்கு சுமூகமாகத் தீர்வுகாண்பதில் அம்மம்மா கெட்டிக்காரியாவார்.

எனது குழந்தைப் பருவத்தில் அம்மம்மாவோடும் அம்மப்பாவோடும் சில ஆண்டுகள் நாவற்குழியில் களித்தேன் என்பது இனிய நினைவுகளைத் தருகின்ற மகிழ்ச்சியான தருணங்கள். எனது மூன்று பிறந்த நாட்களை நான் அம்மம்மாவோடு களித்தேன் என்பது பெருமையான விடயம் மாத்திரமல்ல இனிய தருணங்களைத் தருகின்ற தருணங்களுமாகும்.

அம்மம்மாவின் வாழ்க்கை எங்கள் எல்லோருக்கும் படிப்பினையைத் தருகின்ற புத்தகமாகும். இன்னும் எனது இதயத்தில் மூலையில் சிறுகீறலாக ஒருகவலை என்னவென்றால் நான் இலங்கையை விட்டுப் புறப்பட்டு லண்டன் வந்தபின்பு அவரைச் சந்திக்காமல் போனது என்பதாகும் அம்மம்மாவின் நூறாவது பிறந்தநாள் நினைவுமலரில் அவரது நினைவுகளை மீட்டிக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். அம்மம்மா... என்றும் என் நினைவுகளில் நீங்காமல்!!!!

**திருமதி. சரிதா அண்ணாதுரை**
**லண்டன்**
**பேரப்பிள்ளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அம்மம்மா.....

இந்த உலகை படைத்த இறைவன் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்க முடியாது என்பதால், ஒவ்வொரு மனித உயிருக்கும் தனது உருவாக தாயைக் கொடுத்தார். அன்னையும், ஆண்டவனும் தனித்தனி வடிவங்கள் இல்லை என்பதை உலகிற்கு இந்த தத்துவம் மூலம் இறைவன் உணர்த்தியிருக்கிறான். இறைவனின் படைப்பில் தன்னலம் கருதாத படைப்பு ஒன்று உண்டு என்றால் அது அன்னை மட்டுமே என்றால் அது மிகையாகாது.

என்னைப்பொறுத்தவரையில் எங்களுக்கு இரண்டு அன்னையர்கள். எல்லோருக்கும் ஒரு தாய்தானே இருக்க முடியும். ஆனால் எங்களுக்கு இரண்டு தாயார் கிடைத்ததில் நாம் பெருமைப்படுகின்றோம். அந்த இரண்டாவது தாய்தான் எங்கள் தங்கமான அம்மம்மா வைரமுத்து தங்கம்மா அவர்கள். சிறுவயதிலிருந்து மட்டுவிலில் பிறந்து வளர்ந்ததால் அம்மம்மாவின் அன்பும், பாசமும் எங்களுக்கு தெரியாமல் போய்விட்டது. ஆனால் 1990 இல் இருந்து 1998 இல் அம்மம்மா இறக்கும்வரை அவருடன் வாழும் பெரும்பாக்கியம் எமக்குக் கிடைத்தது. இந்த நேரத்தில் அதை நினைத்து நான் மிகப்பெருமைப்படுகின்றேன். ஏனென்றால் எங்களது அம்மம்மாவுக்கு எவ்வளவோ பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். இருந்தும் எமக்குத்தான் சேர்ந்து வாழும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அவருடன் வாழ்ந்த அந்த எட்டு ஆண்டுகளில் நான் தெரிந்து கொண்ட விடையங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். முதலில் நான் சொல்ல விரும்புவது அம்மம்மாவினுடைய அன்பும் பாசமும். எல்லோரிலும் ஒரேமாதிரியான அன்பும், பாசமும் வைத்திருந்தார். எத்தனையோ பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் இருந்தபோதிலும் எல்லோரிடமும் சம அன்பை வெளிக்காட்டினார். இது எங்களுக்கு நன்றாகப் புரிந்தது. எத்தனையோ உறவுகள் தூர இருந்த போதிலும் அவர் வெறுப்பைக்காட்டியதே கிடையாது. எங்களிலும் மிக அன்பாக இருந்தார். எங்களுக்கு வாழ்வதற்கும், படிப்பதற்கும் எவ்வளவோ தடைகள் வந்தன. அந்தத் தடைகளை எல்லாம் உடைத்தெறிந்த ஒரு வீரப்பெண்ணாகவும், துணிந்த பெண்ணாகவும் அவரை நாம் கண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியின் வாழ்க்கை வழிகாட்டியான திருக்குறளையே அம்மம்மா மிஞ்சிவிட்டா என்றுதான் என்னால் சொல்ல முடியும். ஏனென்றால் எந்தக் காலத்திலும் ஒரு மனிதன் முழுமையாக வாழ திருக்குறளைப் படித்தாலே போதும். எனினும் படித்தவர்கள் கூட வழி தடுமாறும் காலம் இது. குறளில் சொல்லப்படுகின்ற அந்தனை நற்பண்புகளையும் நான் அவரிடம் கண்டேன். உயிரிலும் விட ஒழுக்கம் தான் உயர்வானது என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதைக்கடைப்பிடிப்பவர்களோ சிலர்தான். அவரிடமிருந்து நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொண்டோம். இன்று நாம் ஒழுக்கமானவர்களாக வாழ்வதற்கும் அம்மம்மாதான் காரணம். பெற்ற தாயின் அன்பைவிடப் பெரியது உலகத்தில் ஒன்றுமே கிடையாது. அதைக்கூட மிஞ்சிவிட்டா அம்மம்மா. அவ்வளவு அக்கறையாகவும், பாசமாகவும் இருந்தார்.

ஒவ்வொரு நாளும் காலை எழுந்தால் " நீ இந்த வேலையை செய், மற்றவர் அடுத்த வேலையைச் செய் " என்று எங்களது வேலைகளை எங்களுக்கே பிரித்துக் கொடுப்பார். நாங்கள் பள்ளி செல்லும் வரை பார்த்துப் பார்த்து கவனிப்பார். எங்களது தேவைகளை எல்லாம் நிறைவு செய்வார். பள்ளியால் வந்ததும் படிப்பில் நாங்கள் எப்படி இருக்கின்றோம் என்பதையும் கேட்டுத் தெரிந்து கொள்வார். நாங்களும் பொய் சொன்னதேகிடையாது. அதனால் எங்களுக்குள் புரிந்துணர்வு நிறையவே காணப்பட்டன. எத்தனையோ தடவைகள் நாம் பள்ளியால் வரும்போது அம்மா வேலைக்குப் போய்விடுவார். அப்பொழுதெல்லாம் தாய்க்கு தாயாக அம்மம்மா நடந்துகொண்டார். நாங்கள் வரும் நேரம் தெரிந்து சாப்பாடுகளை இறக்கி வைத்துவிட்டு தட்டுகளில் சோறு போட்டுக்கொண்டிருப்பார். இது என்னால் மறக்கவே முடியாது. என் கண்கள் குளமாகின்றன. என்னால் சொல்ல வார்த்தை இல்லை.

எல்லோரும் நல்லா இருக்க வேண்டும் என்று நினைப்பதுபோல எங்கள் அம்மம்மாவும் நல்லா இருக்க வேண்டும் என்று இறக்கும் வரை கவலைப்பட்டா, கடவுளையும் வேண்டினார். இன்று நாங்கள் நல்லாக இருக்க முழுக்க முழுக்க அம்மம்மாவின் வளர்ப்பும், ஆசீர்வாதமும்தான் காரணம். இன்னொரு சம்பவம் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு வெள்ளிக்கிழமை காலை வேளை, அன்று பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை. அம்மம்மா கடைக்குச்சென்று பொங்கலுக்கு தேவையான பொருட்கள் எல்லாம் வாங்கி வந்தார். பின்பு என்னையும் கோயிலுக்கு போகவேணும் முழுகிவிட்டு வா என்றார். அவர் சொன்னபடி செய்தேன். ஆனால் அன்று எந்தவித ஒரு விசேட நாளும் இல்லை. அதனால் எனக்கு ஒன்றும் புரியவில்லை. அப்பொழுதுதான் " ஏன் இன்று பொங்கப்போகின்றோம்" என்று நான் கேட்டேன். "உனக்கு ஒரு வேலை கிடைக்க வேண்டும் என்று கடவுளுக்கு நேர்ந்தனான்" என்று கூறினார்.

இதை விட எனக்கு என்ன வேணும்.கடவுளே அம்மம்மா வடிவில் வந்து வேலை தந்ததுபோல் இருந்து. உனக்கு வேலை கிடைத்தால்தான் தன் உயிர் நின்மதியாகப் போகும் என்றும் சொன்னார். வெளிநாட்டுக்கு போகவேண்டாம். இங்கேயே நல்ல தொழில் செய்து அம்மாவை வடிவாக பார்க்கும்படி கூறினார். நான் தற்போது சுவீடனில் வாழ்ந்தாலும் இங்கும் ஒரு ஆசிரியராகத்தான் பணியாற்றுகின்றேன். நானும் எனது சகோதரர்களும் அம்மம்மாவின் விருப்பப்படி எங்கள் அம்மாவை பொக்கிஷம் போல கவனிக்கின்றோம். அம்மம்மாவின் ஆத்மாவும் சாந்தியடைந்திருக்கும்.

இன்னும் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள நினைக்கறேன். நானோ எனது சகோதரர்களோ எப்ப தேர்வு எழுதப்போனாலும் நிறைய புத்திமதிகள் கூறுவார். தேர்வு இடைவேளைக்கு ஏதாவது சோடா வாங்கிக்குடியுங்கோ என்பார். அதுமட்டுமா தேங்காயும், கற்பூரமும் தருவார். போகிற வழியில் பிள்ளையாருக்கு தேங்காயை உடைத்துவிட்டு, கும்பிட்டு போட்டுவாருங்கள் என்று வாசலில் நின்று நல்லபடியாக வழி அனுப்பிவைப்பார். இன்று நினைத்து பார்க்கும்போது இப்படியான ஒரு ஆத்மாவை இழந்துவிட்டோம் என்று மனம் ஏங்குகிறது.

இவை மட்டுமா அம்மாவோ, அல்லது நாங்களோ கொஞ்சம் தாமதமாக வீடுவர நேர்ந்தால், அம்மம்மா படலைக்கே வந்திடுவார். கண் கொஞ்சம் அவருக்குத் தெரியாவிட்டாலும் வந்து நின்று கொண்டு எங்களது பெயர்களைச் சொல்லிக்கூப்பிடுவார். வீதியால் போகிறவர்கள் எல்லோரிடமும் எங்களைக்கண்டதா? என்று கேட்டுக்கொண்டிப்பார். பின்பு எங்களைக்கண்டதும்தான் நின்மதியடைவார். இப்படி ஒரு வரம் யாருக்குக் கிடைக்கும்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுவந்த காலத்தில் பெற்றோர்களை ஒரு பிள்ளை எப்படிப் பார்த்துக்கொள்ள முடியுமோ அதனிலும் விட இரண்டு மடங்காக நாங்கள் அம்மம்மாவைக் கவனித்தோம். அவருக்கு தேவையான சகல பராமரிப்புகளையும் பார்த்துப் பார்த்து எங்கள் அம்மாவும், நாமும் செய்தோம். அம்மம்மாவுக்கு தலை கடிக்குதென்றால் என்னைக்கொண்டு மட்டும்தான் பேன் பார்ப்பார். அம்மா தான் சுடுதண்ணி வைத்து குளிக்க வைக்கவேண்டும். அம்மம்மா சரியான துப்பரவாகவும் இருப்பார்.

எங்களுடன் மட்டுமன்றி அயலவர்களுடனும் மிகவும் கனிவாகப் பழகுவார். எல்லோருக்கும் நல்ல புத்திமதிகள் கூறுவார். நீதி, நியாயப்படிதான் நடப்பார். தனது தூரத்தில் இருக்கும் பிள்ளைகளுக்கு மடல் எழுதும் பொழுது என்னைக்கொண்டுதான் எழுதுவார். அப்பொழுது அவர் பிள்ளைகளுக்கு சொல்லும் புத்திமதிகளையும் பார்த்து நான் வியந்திருக்கிறேன்.

இன்னுமொரு நல்ல பண்பொன்றை நான் அவரிடம் கற்றுக்கொண்டேன். எனது மகள் கூட அதைச்செய்து வருகிறாள். எங்கேயும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே அங்கு நிற்போம். அத்தோடு நாளைக்குத் தேவையானதை இன்றே எடுத்துவைப்போம். இது அம்மம்மாவின் நாளாந்த ஒரு நல்ல பழக்கமாக இருந்தது. தான் இறக்க முதலே " நான் செத்த பிறகு எனக்கு இந்தச் சேலை தான் கட்டவேண்டும், இந்தச் செருப்பு, இந்தக் குடை வைக்க வேண்டும், ஒருதரும் அழக்கூடாது, நடுமேசையில் என்னைப்படுத்தி சுற்றிவர பல மேசைகள் போட்டு எனது எல்லாப் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் நிற்க வேண்டும், எனக்கு மேளம் அடிக்கவோ, வீடியோ எடுக்கவோ வேண்டாம், எல்லோரும் சாறி உடுத்து வடிவாக நிற்க வேண்டும், அத்தோடு பிள்ளைகளைப் பட்டினி போடாமல் சமைத்துச் சாப்பிடுங்கள் என்றெல்லாம் எங்களிடம் சொல்லிவைத்தார்.

அப்பொழுதெல்லாம் இப்படிச் சொல்ல வேண்டாம் என்று நான் அடிக்கடி கூறுவேன். ஏனென்றால் எங்களுக்குச் சரியான பயமாக இருக்கும். எனக்கு செத்தவர்கள் என்றால் சரியான பயம். அதனால் செத்தால் எங்களிடம் வரவேண்டாம் என்றும் பயத்தில் கூறுவேன். அதற்குக்கூட உங்களிடம் வராமல் நான் யாரிடம் போவேன், ஆனால் வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தொந்தரவு செய்யமாட்டேன், வந்து ஒவ்வொரு நாளும் பார்த்துவிட்டுப் போவேன்... என்று கூறுவார். இன்று எங்களைப்பார்த்து மகிழ்ச்சியடைவார் என்று நம்புகின்றோம். எந்த ஒரு வார்த்தையையும் நான் மிகைப்படுத்திக் கூறவில்லை. இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

இறுதியாக அம்மம்மாவின் இறப்பு அன்று விடிய நான்கு மணியளவில் எங்களது அம்மாவை பின்னால் மாமரத்துக்குக்கீழே கூட்டிக்கொண்டு போ என்றுதான் சொன்னார். அம்மாவும் கூட்டிப்போனார். இறுதியாக அம்மம்மா சொன்ன வார்த்தை அதுதான். பின்பு அம்மாவின் கையை இறுக்கிப் பிடித்தபடி எங்களது அம்மாவின் மடியிலே இறந்துவிட்டார். அந்த மாமரம் இன்றும் நிற்கின்றது. அம்மாவுக்கு இறந்ததே தெரியவில்லை. மற்றவர்கள் சொன்ன பிறகுதான் அம்மா நம்பினார். எங்கள் அம்மாவின் மடியில் அம்மம்மா இறந்தது எங்கள் அம்மா பெற்ற பெரும்பேறு. ஒருவருக்கும் கிடைக்காத ஒரு பேறு. நாங்கள் இன்று போல் என்றும் வாழ அம்மம்மா ஆசீர்வதிப்பார் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

**பேத்தி**
**திருமதி கலைச்செல்வி மதிவண்ணன்**
**சுவீடன்.**

**குறிப்பு:- கீழே வரும் பாடலை அம்மம்மாவின் எல்லாப் பேரப்பிள்ளைகளுக்காகவும் நாம் ஒருமுறை கேட்க விரும்புகின்றோம்.**

**பாடல்:-**

பூவே பூச்சூடவா
எந்தன் நெஞ்சில் பால் வார்க்க வா..
பூவே பூச்சூடவா
எந்தன் நெஞ்சில் பால் வார்க்க வா..
வாசல் பார்த்து கண்கள் பூத்து காத்து நின்றேன் வா!..
பூவே பூச்சூடவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் நெஞ்சில் பால் வார்க்க வா..
அழைப்பு மணி எந்த வீட்டில் கேட்டாலும்
ஓடி நான் வந்து பார்ப்பேன்
தென்றல் என்வாசல் தீண்டவேயில்லை ..
கண்ணில் வெண்ணீரை வார்பேன்.
கண்களும் ஓய்ந்தது..
ஜீவனும் தேய்ந்தது..
ஜீவ தீபங்கள் ஓயும் நேரம் நீயும் நெய்யாக வந்தாய்..
இந்த கண்ணிரில் சோகம் இல்லை
இன்று ஆனந்தம் தந்தாய்..
பேத்தி என்றாலும் நீயும் என் தாய் - பூவே பூச்சூடவா
எந்தன் நெஞ்சில் பால் வார்க்க வா..
காலம் கரைந்தாலும் கோலம் சிதைந்தாலும்
பாசம் வெளுக்காது மானே
நீரில் குளித்தாலும் நெருப்பில் எரித்தாலும்
தங்கம் கருக்காது தாயே
பொன் முகம் பார்க்கிறேன்
அதில் என் முகம் பார்க்கிறேன்..
இந்த பொன்மானை பார்த்துக்கொண்டே ..
சென்று நான் சேர வெண்டும்
மீண்டும் ஜென்மங்கள் மாறும்போது,
நீ என் மகளாக வேண்டும்.
பாச ராகங்கள் பாட வேண்டும்.. - பூவே பூச்சூடவா
எந்தன் நெஞ்சில் பால் வார்க்க வா..
வாசல் பார்த்து கண்கள் பூத்து காத்து நின்றேன் வா!..
பூவே பூச்சூடவா -எந்தன் நெஞ்சில் பால் வார்க்க வா..
எந்தன் நெஞ்சில் பால் வார்க்க வா.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Pooti (Our Great-Grandmonther)

Our Great-Grandmother is a truly inspirational person to us all. She supported our Great-Grandfather throughout his life, and without them, the Vairamuthu family would not be what it is today. Unfortunately I've never had the pleasure of meeting her or spending time with her, however the stories about her that have been passed down to me from my father are simply amazing. Therefore, I wanted to share a few words to commemorate her 100th birthday.

In today's world many parents struggle to raise just a small family. Yet, our Great-Grandmother was able to bring up 14 children, and each one of them has grown up to be in a good place in society.The knock-on effect of her triumph is that their kids, and the kids of their kids, have also been given the opportunity to reach even greater heights. Thus it is clear that she has had an effect on everyone one of us in the Vairamuthu lineage.

My father has told me many a time about how she lived for many wonderful years. In spite of growing old until the day she passed away, she kept in complete control of herself, of her children, and even her grandchildren.

More so than my Grandfather's own siblings, it was in fact our Great-grandmother who was there to help out our Grandmother and to check up on my father and his young siblings in times ofneed. She was a woman who spoke the truth, she knew how to treat people and she did what was right. No matter who you were, she would tell you how she felt.

In today's world, many people are hesitant to speak their mind when they see a problem. They seem to be more concerned about what others would think of them, rather than speaking up and bringing about a positive change. Nevertheless, our Great-Grandmother was unique. She spoke her mind on any matter. More often than not, her words were right, which others were too timid to address. Subsequently there is no surprise that the people of our village referred to her as "Sri Ma". Sri Ma was a reference to the then Sri Lankan President, Bandaranaike, who happened to be the first female president in the world. So it was quite fitting for the wider community to refer to our Great-Grandmother with such a respectable title.

She is truly one of a kind. She will always be in our hearts. Our Sri Ma. Our Great-Grandmother. Our Pooti.

Satheesan Saravanan
London

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் என்னும் ஆச்சி.....

அவரின் பெயரில் தங்கம் இருக்கிறது. அப்படியே தங்கமான குஞ்சியாச்சியை சீனியம்மா என்றும் பலர் அழைக்கக்காரணம் அவர் இனிமையானவர். இனிப்பானவர், அழகானவர் தன் வாழ் நாளில் எத்தனையோ துயரங்கள் துன்பங்களைக் கண்டு வாழ்ந்தவர். சந்தோசங்களைக் கண்டுமகிழ்ந்தவர். வறுமை, துன்பம், துயர் வந்தபோதெல்லாம் துவளாமல், மனமுடையாமல் எல்லாவற்றையும் சகித்துக் காரியமாற்றிய ஒரு அதிபர் என்றே கூறலாம். ஊரில் சிலர் நக்கல் நளினமாக இலங்கைப் பிரதமர் சிறீமா பாண்டாரநாயக்காவின் பெயரைச் சொல்லி "சிறீமா ஆச்சி" என்று அழைத்ததும் உண்டு.

தாயாரிடம் நான் பல தடவைகள் அவருடைய இளமைக்காலங்கள் பற்றி துருவி ஆராய்ந்ததும் உண்டு. அவ்வேளையில் அவர் கூறியதை இன்றும் என்றும் என்னால் மறக்க முடியாது பல சம்பவங்கள் உண்டு. தான் சிறுமியாக வீட்டில் கடைக்குட்டியாகப் பிறந்ததாகவும், அப்போ தனக்கிருந்த அன்பு, பாசம், மரியாதை பிரமாதம் எனக்கூறுவார். நல்ல குண்டாகவும், அழகாகவும், துடிப்புள்ள இளம்பருவப் பெண்ணாக இருந்தபடியால், அதாவது தனது 16 வது வயதிலேயே திருமணம்முடிந்ததாகக் கூறினார். காதலித்தீர்களாக என்று கேட்டபோது, அப்போ காதல் என்றால் என்னென்றே தெரியாதாம். பெற்றோர் பார்த்த திருமணத்தில் இணைய வேண்டியதுதான். அந்தக்காலத்தில் இது இயல்பான விடையம்தான். கட்டையோ? நெட்டையோ? கறுப்போ? சிவப்போ? மனதுக்குப்பிடிப்போ? பிடிப்பில்லையோ? எதுவென்றாலும் பெற்றோரின் சந்தோசமும், விருப்பமும்தான் பிள்ளைகள் திருமணத்தில் இணைந்து வாழவேண்டும். இப்போ இது நடக்குமா?....நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியம்தான்.

தான் பருவமடைந்தபோது அழகு கொட்டிக்கிடந்ததாம். அளவுக்கு அதிகமான உடல்கட்டு, குண்டான பெண். ஏனைய தோழியரகளுடன் நெல்வயல் தோட்ட வேலைகளில் ஆடிப்பாடிய சம்பவங்களையும் தான்செய்த குளப்படிகளையும் பின்னாளில் பிள்ளைகளாகி எங்களுக்குச் சொன்னபோது எனது சகோதரிகள், சகோதரர்கள் கும்மாளம் கொட்டிச்சிரித்து மகிழ்ந்த நாட்களை மறக்கமுடியாது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடிக்கையும் நிகழ்ந்திருக்கிறது. தாயாரை ஒருவருக்கு பேசிவைத்தனர். ஆனால் எனது தந்தையாரின் பெற்றோரின் சண்டித்தனம், வசதிகள் காரணமாகப் பலவந்தமாகத் தாயார் கடத்தப்பட்டுத்தான் தனது கலியாணம் நடந்ததாக்க் கூறியபோது தற்போதைய சினிமாப்படக் காட்சிகள்போல் இருந்துள்ளது.

எனது தாயாரின் சிவந்த அழகான மேனி, ஆனால் தந்தையாரோ கறுத்த கட்டுடல் மேனி, இவர்களின் கலவையில்தான் நானும் எனது சகோதர சகோதரிகளும் பிறந்தோம். தாயாரின் பல அழகுகளை வர்ணிக்கலாம், ஆனால் அவரின் தலைமுடிக்கு தனிச்சிறப்பு உண்டு. சுருட்டைத் தலைமுடி, அவர் எண்ணெய் தேய்த்து, சீயாக்காய், தேசிக்காய் வைத்துத் தலை முழுகுவது வழக்கம். அப்படி முழுகியதும் அவரின் தலைமயிரைப் பார்க்க முடியாது. ஆத்மீகவாதி சாய்பாபாவின் தலைமயிர் போல் சுருண்ட தலைமயிர் கம்பீரமாக நிற்கும். அமெரிக்க-ஆபிரிக்க கலப்பினத்தவர்களின் தலைமுடிபோலவும் அழகாகக் காணப்படும். நான் சிறுவனாக இருக்கும் போது அக்காமாருடன் சேர்ந்து அந்த அடங்கா தலைமுடியைத் தடவி, கிண்டி, ஆராய்ந்து ஒரு பேன் எடுப்பதற்குப் படாதபாடுபடுவேன். இதை எப்போ நினைத்தாலும் சிரிப்போ சிரிப்புதான்....!

அப்படி அழகான முடி, வசீகரமான முடி. அந்த முடியைக் கூட்டிக்கட்ட முடியாமல் அவர் கஸ்டப்பட்ட வேளைகளில் எனது அக்காமார் பல தடவைகள் உதவி செய்து கட்டிவிடுவார்கள். தாயாரின் தலைமுடி போலவே எனது அக்காவுக்கும் (பராசக்தி) அப்படியே தலைமுடி காணப்படுவதுடன் அவரின் பிள்ளைகளுக்கும் இந்தச் சுருள் முடி இன்று அழகு சேர்ப்பதை எப்படி வர்ணிப்பது. இப்படியாக எனது தாயாரின் அழகுக் கோலத்தை இன்னும் வர்ணிக்கலாம்.

இவரின் குணவியல்புகளில் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. பரோபகார சிந்தனை, செயற்பாடு, மற்றவர்களின் உணர்வுகளை நேசிப்பது, மதிப்பது, தலைநிமிர்ந்து வாழ்ந்தது எல்லாம் சிறப்புத்தான். பிள்ளைகளைவிட தனக்குக் கிடைத்த மருமக்கள் மீது பாசம் அதிகம் கொண்டிருந்தார். வறுமையிலும் பிள்ளைகளுக்கு கல்வியூட்ட எவ்வளவோ போராடினார். பணக்கஸ்டம் வந்த போதிலும் எல்லாவற்றையும் எதிர்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு நன்கு கல்வியூட்டினார். நாங்கள் ஒரு றோயல் குடும்பம் அல்ல. சாதாரண விவசாய தொழிலாள கூலிவேலை செய்த குடும்பமாகும்.

பின்னாளில் அவரின் வழிகாட்டலில் அரச உத்தியோகம், வியாபாரம், விவசாயம் என எனது சகோதர சகோதரிகள் மேற்கொண்டது பெருமையாகும். அந்தக் காலத்தில் வெறும் எட்டாம் வகுப்புத்தான் படித்து ஒரு கிராமத்தில் வாழ்ந்த தாயாருக்கு இப்படியான ஆற்றல், அறிவு, ஆளுமை, அனுபவம், பொதுநோக்கு, பிறருக்கு உதவுதல் போன்ற நல்ல பல விடையங்களை எப்படிக் கற்றார்? அதன்படி செயற்பட்டார், நல்லவழிகாட்டினார் என்னும்போது ஆச்சரியம்தான். நடமாடும் பல்கலைக்கழகமாக, உற்ற வழிகாட்டியாக, பிறர் வாழ்த்தப், போற்ற வாழ்ந்த எனது தாயார் ஒரு இலட்சியவாதியாகவே வாழ்ந்திருக்கிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைக்கு வித்தானவர்கள்

தமிழர்களின் வாழ்வியலில் பல வருடங்களின்முன் தமது சொந்த ஊர்களில்தான் வாழ்ந்தார்கள். அப்போது உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களுக்கு ஆகக்கூடிய தூரம் கொழும்புப் பிரயாணமாகத்தான் இருந்துவந்தது. அப்போது நன்மை தீமைகள் என்றால் ஒரே நாளிலேயே அனைவரும் ஒன்றுகூடிச் சுக துக்கங்கங்களில் கலந்துகொண்டனர், குதூகலித்தனர்.

நாளடைவில் சனத்தொகைப் பெருக்கம், அரசியல் சூழல், போர் அழுத்தம், இன வன்முறைகள், சொத்தழிவுகள், உயிர் அழிவுகள் எனவும் அகதிவாழ்வுமாக மாறியது. உயிர் ஆபத்துக்கள் அதிகரிக்கவே குடும்பங்கள் சிதறுண்டன. இடம்பெயர்வால் வெளிநாடுகளிலும் பல்லாயிரம் தமிழர்கள் புலம்பெயர்ந்தனர்.

தங்கம்மா - வைரமுத்து குடும்பத்தவர்களும் இதில் விதி விலக்கா...மூன்றாவது மகனான சரவணமுத்து இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதி மட்டுமல்ல இலங்கை இ.போ.ச வரலாற்றில் முதலாவது சமாதான நீதவானகவும் கடமைபுரிந்தார் (J.P) யாழ் பஸ் நிலையத்தில் 1984ம் ஆண்டு இராணுவம் நடாத்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தார். அதுவும் கடமை நேரத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டார். அடுத்த மகனின் ஜெகராசாவின்மகனான ஜெயசீலன் 17-18 வயது அப்போது விடுதலைப்புலிகளில் போராளி. இந்திய இராணுவம் - விடுதலைப்புலிகள் மோதலில் கைதடியில் உயிரிழந்தான். ஆனான் அவனது உயிரற்ற உடலுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரைத் தெரியாத சோக சம்பவமும் நடந்து முடிந்தது.

இவற்றைவிட 1958 கலவரத்தில் நடராசா, சரவணமுத்து இருவரும் கொழும்பில் பாதிக்கப்பட்டு இஸ்லாமிய நண்பர்களால் காப்பாற்றப்பட்டு ஒருவாறு ஊர் வந்து சேர்ந்தனர். அடுத்து சிவராசா ஆகிய நானும் 1977 இனக்கலவரத்தில் துணுக்காயில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக் காயப்பட்டு உயிர் பிழைத்தேன். பின்னர் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட "சன்சோனிக் கமிஷனில்" இளைப்பாறிய நீதிபதிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் சாட்சியமளித்தேன். இனவாதத்தின்கீழ் ஒன்றுமே செய்யமுடியாமல் போனது. நீதி, நியாயம் இல்லை. நஸ்ட ஈடும் இல்லை. எல்லாம் அரசின் வெறும் கண்துடைப்பாகவே முடிந்தன.

இப்படியாக வைரமுத்து - தங்கம்மா குடும்பத்தில் மகன் (சரவணமுத்து) பேரன் (ஜெயசீலன்) தாய் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்தமை எங்கள் குடும்பத்திற்குப் பேரிழப்பாகவே முடிந்துவிட்டது. இந்த இருவரின் இழப்புக்காக இவ்வேளையில் அஞ்சலிப்போம். சகோதரர் சரவணமுத்து அவர்களின் மரணச்சடங்கில் அவரது நண்பரும் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளருமான நாவற்குழியூர் கலாநிதி அம்பலவாணர் சிவராசா அவர்கள் உரையாற்றியபோது கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்கள் என அறிந்தேன். இந்த இரு மரணச்சம்பவத்துக்கும் நான் வெளிநாட்டில் ஆதலால் அப்போது கலந்துகொள்ள முடியாமல் போனது இன்றும் மனதை வாட்டி வதைக்கின்றதே!..இந்த இரு தியாகிகளுக்கும் எமது குடும்பத்தினரின் சார்பாக அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்!...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப்பயணம்.......

மனிதவாழ்வில் எப்படி வாழ்ந்தோமோ..அப்படித்தான் இறுதியில் போய்ச்சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சென்றடைகின்றோம். இது வாழ்வின் நியதியாகும். நாம் பிறப்பது எவ்வளவு அபூர்வமானதோ அதே போல் இறப்பதும் நிட்சயிக்கப்பட்ட உண்மையாகும். இந்த இடைப்பட்ட காலத்தில் நாம் வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் புரிந்துவிடும். நாம் எவ்வளவு ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல... எப்படி வாழ்ந்தோம் என்னத்தை விட்டுச் செல்கிறோம் என்பதுதான் முக்கியமான விடையமாகும். இதில் சிலர் குறுகிய காலங்கள் வாழ்ந்தாலும் அவர்களின் புகழ் நூறு அல்ல ஆயிரம் ஆண்டுகள்வரை நீண்டு நிலைத்துவிடுகின்றன. உதாரணத்திற்கு மகாகவி பாரதியாரை எடுத்து நோக்கினால் அவர் முப்பத்தெட்டு ஆண்டுகள்தான் இப்பூமியில் வாழ்ந்திருக்கிறார். ஆனால் அவர்விட்டுச்சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள், சமூகவிடுதலைச் சிந்தனைகள் அன்றும் இன்றும் என்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளவு சிறப்பான விடையமாகும்.

எங்கள் தாயாரும் இப்பூமியில் எண்பத்தொரு (81) ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். 1917ம் ஆண்டு பிறந்தவர் 1998 சித்திரை மாதம் நான்காம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவரும் ஒரு சாதனைப் பெண்ணாகவே வாழ்ந்து மறைந்திருக்கிறார். பதின்நான்கு பிள்ளைகளைப் பெற்றுப் பெரிய ஒரு குடும்ப விருட்சத்தை ஒரு கொடியாக வாழ வைத்திருக்கிறார். இன்று பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் கொள்ளுப் பேரப்பிள்ளைகள என உலகம் முழுவதும் வைரமுத்து-தங்கம்மா குடும்ப வாரிசுகள் என்று பெயர் சொல்லி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தாயார் அவர்கள் தனது வயதுபோன காலத்தில் தனது சொந்த வீட்டிலேயே உயிர்பிரிந்திருக்கிறார். அதுவும் தான் பெற்ற பிள்ளைகளில் ஒன்றான நாகேஸ்வரியின் மடியியேயே உயிர் துறந்த துயர சம்பவம் 1998-04-04 தேதியில் நிகழ்ந்து முடிந்திருக்கிறது. அவர் உயிர் மட்டும்தான் அன்று பிரிந்தது. ஆனால் அவரின் வார்த்தைகள், அறிவுரைகள், வழிகாட்டல்கள், பண்புகள், பழக்க வழக்கங்கள், பிறருக்கு உதவுதல் பண்புகள், ஒற்றுமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுக்குடும்ப வாழ்க்கை, உழைப்பு, சம்பாத்தியம் அத்தனை விடையங்களும் இன்று மட்டுமல்ல என்றுமே எங்கள் குடும்பத்தோடு உயிர் வாழ்ந்துகொண்டே இருக்கின்றன.

மனிதர் எப்படி ஓகோ என்று வாழ்ந்தாலும் பெரிய பதவி புகழோடு வாழ்ந்தாலும் யாராவது தனது இறுதிப்பயணத்துக்கு எதையாவது முன்னேற்பாடாக வேண்டி வைப்பார்களா?..கிடைக்கவே கிடையாது. ஆனால் எங்கள் தாயார் தனது இறுதிப்பயணத்திற்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களை முன்னேற்பாடாகவே வேண்டி வைத்துக்கொண்டார் என்னும் போது அவரின் மன இயல்பைப் பார்த்தால் அதிசயமாகத்தான் இருக்கும். தனது இறுதி வயது நெருங்கிவர, உடலும் இயலாததன்மைகள் வந்தபோது தனது இறுதிப்பயணத்திற்கு என சேலை, சட்டை, செருப்பு, குடை, இறுதிச்சடங்கிற்கு வேண்டிய சில பொருட்கள் அனைத்தையும் தானே வேண்டி வைத்தார். தனது இறுதிச் சடங்கிற்குத் தேவையான பணத்தையும் மகன் ஜெகராசாவிடம் கொடுத்து வைத்திருக்கிறார். மற்றவர்களுக்குத் தன்னால் எந்தவித கஸ்டமும் வரகூடாது என்பதில் எவ்வளவு உறுதியாய் இருந்து செயலாற்றியிருக்கிறார். முன்னேற்பாடாகத் திட்டமிட்டு வாழ்ந்திருக்கிறார் என்னும்போது இவர் ஒரு அதிசயப் பிறப்பு என்றுதான் கூறவேண்டும்.

நாட்டில் இனப்பிரச்சனை யுத்த மேகங்கள் சூழ்துகொண்ட காலம் அது (1998) தன்னோடு ஊரில் வாழ்ந்த பிள்ளைகளுக்குச் சொல்லி வைத்தவைகள் சிலவற்றை பின்னர் கேட்டபோது நாம் கண்கலங்கிநின்றோம். நான் இறந்தால் யாரையும் பார்க்கக்கூடாது... தனது உடல் நாலு ஐந்து நாட்கள் கிடந்து பழுதாகக்கூடாது... வெளிநாட்டிலுள்ள பிள்ளைகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது...மேள தாள ஆடம்பரங்கள் ஒன்றும் இருக்கக்கூடாது...ஊரவர்கள் அயலவர்களுடன் சாதாரணமாக தான் இறந்த அன்றே அடக்கம் செய்துவிட வேண்டும் என்று அவர் விருப்பத்துடன் கூறியபடியே நடந்து முடிந்தது.

இந்தச்சம்பவங்களை யோசித்தால் இப்போதும் கண்ணீர்தான் கொட்டும். தனது இறப்புக்கு இவ்வளவு திட்டமிட்டுச் செயற்பட வைத்திருக்கிறார். மற்றவர்களுக்கு எந்தத் தொந்தரவும் வைக்கக்கூடாது என்று எண்ணி வாழ்ந்து காட்டியிருக்கிறார். அதுவும் தனது இறந்த உடல் நாலு ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களாகக்கிடந்து மற்றவர்களுக்குத் துன்பம் விளைவிக்கக்கூடாது என்று சிந்தித்துத் தனது முடிவை முன்கூட்டியே அறிவித்திருந்ததை எண்ணும்போது இவர் ஒரு தீர்கதரிசியான பெண்மணி என்றே கூறவேண்டும்.

ஆம்..தீர்க்கதரிசிதான். காலத்தால் அழியாத நினைவுகளை விட்டுச் சென்றிருக்கிறார். எங்கள் எல்லோருக்கும் அருமையான பாடங்களைப் புகட்டி ஓர் ஆசிரியராகச் சென்றிருக்கிறார். அனுபவத்தை, ஆற்றலை, வேகத்தை, விவேகத்தை ஊட்டிச் சென்றிருக்கிறார். மொத்தத்தில் ஒரு பல்கலைக் கழகம்போல் செயற்பட்டு மறைந்திருக்கிறார். குப்பையில் கிடந்தாலும் தங்கத்துக்கு என்றும் பெறுமதியும் மதிப்பும்தான்... அதேபோலவே எங்கள் தாயார் தங்கம்மாவின் வாழ்க்கை வரலாறும் என்றும் எங்களுக்குத் தங்கம்தான்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுகத்தைக் காணாத பாவி.....

எனக்கு உயிர்தந்து, உடல்தந்து, குருதிதந்து, பால்தந்து, பத்துமாதம் சுமந்து பெற்று, பகலிரவாய் கண்விழித்து, சீராட்டிப் பாலூட்டித் தூங்க வைத்தவள் என் தாயவளே. கடவுளாகத் தன் திருமுகத்தைக் காட்டி மகிழ வைத்தாள். உறவுகளை அடையாளம் காட்டினாள். பாடசாலை சென்று கல்வி பெறவைத்தாள். என் உடல் அழுக்கைப் போக்கி என்னை அழகுபடுத்திப் பார்த்தார். என்னைப் பெற்றவள் எனக்குச் செய்த பணிகளும் தியாகங்களும் எண்ணிலடங்காதவையே.

தாயவளோடு ஊரிலும் வன்னி மல்லாவியிலும் பல ஆண்டுகள் வாழ்ந்தபோதெல்லாம் எனக்கு வழிகாட்டியாக, ஒளியூட்டினாள். வேளா வேளைக்கு உணவு தந்து உயிரூட்டினாள். அவ்வப்போது அறிவுரைகள் கூறி என் வாழ்வை நெறிப்படுத்தினாள். இப்பெருமை அனைத்தும் முதல் என் தாயவளுக்கே சாரும். அப்படிப்பட்ட உத்தமியின் இறுதிச்சடங்கில்கூட என்னால் கலந்துகொள்ள முடியாமல் போனது துரதிஸ்டமே. இச்சம்பவத்தின் தவிப்பு, ஏக்கம், ஆதங்கம் அனைத்தும் என் மனதை இன்றுவரை வாட்டி வதைத்துக்கொண்டே இருக்கின்றது.

நாட்டில் நிலவிய கொடூர யுத்தத்தால் நானும் இடம்பெயர்ந்து வெளிநாடு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் தேதிதான் என் தாயவளுக்கு இறுதி முத்தம் கொடுத்துவிட்டு கண்ணீருடன் விடைபெற்று வெளிநாடு வந்தேன். யுத்தம் நீடித்துக்கொண்டு சென்றதால் எத்தனை இழப்புக்கள் சோகங்கள், சுமைகள், இடம்பெயர்வுகள், அவலங்கள் நிகழ்ந்து முடிந்தன. அடுத்த ஆண்டே எனது மனைவியும் எனது மகளும் வெளிநாடு வந்து என்னோடு இணைந்து கொண்டனர். இங்கு 1985ல் ஒரு மகனும் 1988ல் ஒரு மகனும் பிறந்தனர் ஜேர்மனியில். வாழ்க்கைப் பயணம் நீண்டது.

காலம் உருண்டோடியது. என் தாய்நாட்டையும் பெற்றவளையும் உறவுகளையும் கண்டுகளிக்க வேண்டும். தாய்க்குப் பணிவிடை செய்ய வேண்டும், உறவுகள் நட்புளுடன் வாழவேண்டும் என்னும் ஆசையில் மனம் அலை மோதி மனதை உறுத்திக்கொண்டெ இருந்தது. நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் உக்கிரமடைந்திருந்தது. தரைவழிப்பாதைகள் தடைப்பட்டிருந்தது. அவலங்கள் பெருகியே கொழும்பு-பலாலி விமான சேவை மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையாக இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

இவ்வேளையில்தான் 1998ம் ஆண்டு நானும் எனது மனைவி பிள்ளைகளுடன் தாயகம் செல்ல ஆயத்தமானோம். இராமாயணத்தில் இராமன் 14 வருடங்கள் காட்டு வாழ்வை முடித்து அயோத்தி திரும்பியதைப் போல நானும் (1984 -1998) 14 வருடங்கள் வெளிநாட்டு வாழ்க்கையை அனுபவித்து எனது மனைவி பிள்ளைகள் (16வயது பெண்) (13வயது ஆண்) (10வயது ஆண்) என ஐந்து பேரும் தாயகம் செல்ல ஆயத்தமானோம். அப்போது நாட்டில் போர் உக்கிரமம் அடைந்த நிலை. உனது 16 வயதுக் குமர்ப் பிள்ளையுடன் தாயகம் செல்வது ஆபத்தானது என்று பலர் என்னைத் தடுத்தபோதும் பல சிரமங்கள் தாண்டி எங்கள் பயணம் தொடர்ந்தது.

எனது பிள்ளைகள் இருவர் வெளிநாட்டில் பிறந்தபடியால் அவர்களை கட்டாயம் என் தாய்நாட்டைக் காட்டவேண்டும் என் தாயிடம் காட்டவேண்டும் என்ற ஆசை ஒருபுறம், வயது போன தாயார் உயிருடன் இருக்கும்போதே ஒரு தடவையாவது பார்த்துவிடவேண்டும் என்ற துடிப்பால் விமானப்பயணம் ஆரம்பமாகியது. எத்தனை கர்பனைகள், ஆசைகள். பயங்கரமான சூழ்நிலைகளையும்தாண்டி தாயவளிடம் போய்ச் சேரவேண்டும் என்ற மன உறுதி...

நானும் மனைவி பிள்ளைகள் அனைவரும் தன்னைப் பார்க்க வருகிறோம் என அறிந்து அன்னையின் மனம் ஆனந்தப்பட்டதாகப் பின்பு அறிந்தோம். இவ்விடையம் அவருக்குக் எட்டவே வருத்தமாகக் கிடந்த தாயார் எழுந்து சிறிதுதூரம் நடந்து திரிந்தார் என அறிந்தோம். எங்களைக் கண்டு உறவாடவேண்டும் என்ற ஆனந்தக்களிப்பில் அவர் திளைத்தார். எப்ப வருகிறார்கள்?...எப்ப வருகிறார்கள்?..என்று அடிக்கடி வினவியதாகவும் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தார் எனவும் பின்பு அறியக்கூடியதாக இருந்தது. ஆனாலும் நாட்டுப் போர்ச் சூழலால் இவர்கள் வருவார்களா?.. என்னை ஒருதடவையாவது உயிருடன் பார்ப்பார்களா? என்ற ஏக்கமும் ஆதங்கமும் அவரிடம் நிறையவே காணப்பட்டதாகவும் உறவுகள் கூற பின்னர் அறிந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்நான்கு ஆண்டுகளின் பின் என் தாய்நாட்டை, என்னைப் பெற்றவளைத் தரிசிக்கலாம் என்ற எண்ணத்தில் மூழ்க விமானம் தாய்நாட்டைச் சென்றடைந்தது. எங்களை அறியாமலே ஒரு உணர்வு. ஒரு ஆனந்தம். "பெற்றதாயும் பிறந்த பொன் நாடும் நன்றவானிலும் நனிசிறந்தவையே"என்பது நிஜமாகியது. கொழும்பிலிருந்து தரைப்பாதைகள் தடைப்பட்டபடியால் கொழும்பு-பலாலி செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி, பிரயாணச்சீட்டு பெறவேண்டும். இவற்றில் சில இடையூறுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. யாழ்ப்பாணத்துக்கான விமானப்பயணம் தடைப்பட்டு ஒரு வார காலம் கொழும்பில் கெடுபிடிகளோடு தங்கவேண்டியதாயிற்று.

தன் மகனையும் மருமகள் பேரப்பிள்ளைகளைக் காணப்போகிறேன் என்று ஆனந்தப்பட்டிருப்பார். அல்லது இவர்கள் வருமுன் நான் இறந்துவிடுவேனா?.. என ஆதங்கப்பட்டிருக்கலாம். அன்று (04-04-1998) இரவு உறங்குவதற்கு ஆயத்தமான போதுதான் தலைச்சுற்று ஏற்பட்டது. வீட்டுமுற்றத்திலுள்ள மாமரத்துக்குக்கீழ் மகள் நாகேஸ்வரியின் மடியில் சரிந்தவர்தான் அப்படியே உயிர் துறந்த துயரம் எங்கள் எல்லோரையும் கண்ணீர் சொரிய வைத்தது. அன்றைய போர்ச்சூழலால் தாயாரின் திருமுகத்தை இறுதியில்கூடப் பார்க்க முடியாத பாவிகளாகப் பரிதவித்தோம்.

நாங்களும் மூத்த அண்ணர் தியாகராசா குடும்பமும் அக்கா பராசக்தி குடும்பமும் கொழும்பில் நின்று தவியாய்த்தவித்தோம். இந்நிகழ்வை இப்போ எண்ணினால் கண்ணீர்தான் பெருக்கெடுக்கும். இவ்வளவு துயரங்கள், பணச்செலவுகள், கெடுபிடிகள் பட்டும் தாயாரை உயிரோடும் பார்க்க முடியவில்லை, இறுதிச்சடங்கிலும் கலந்து கொள்ளமுடியாமல் போனதை எண்ணும்போது நாங்கள் கொடுத்து வைக்காதவர்கள் அல்லது அதிஸ்டமில்லாதவர்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது.

தாயாரின் விருப்பப்படி அவரின் இறுதிக்கிரிகைகள் இறந்த அன்றே அடக்கம் செய்யப்பட்டது. மேலும் ஒரு கிழமையின் பின்பே யாழ்ப்பாணம் செல்லும் அனுமதி கிடைத்தது. வெறுப்புடன் மனவேதனையுடன், அடக்கமுடியாத துன்பத்துடன் நான் பிறந்த வீட்டுக்குச் சென்று சகோதரங்களுடனும் உறவுகளுடனும் அழுது கண்ணீர் வடித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை" என்று கூறுவதைப் போல ஜேர்மனியிலிருந்து இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து, இவ்வளவு பணம் செலவு செய்து படாத பாடுகள் பட்டும் கிட்டப்போயும் பெற்றவளை ஒருதடவையேனும் பார்க்கமுடியாத பாவியாக அன்று நின்றதை எண்ணிப் பார்க்கையில் இப்போதும் வேதனைதான். முயற்சி திருவனையாகாமல் போனது கவலைதான். இருந்தாலும் என்னைப் பெற்றவள் என் வாழ்நாள் முழுவதும் என்னோடுதான் வாழ்ந்துகொண்டிருக்கிறாள். அவள் எப்போதும் எங்களுக்கு ஒளி கொடுத்துக்கொண்டே இருப்பாள். இருக்கிறாள்!...
கடைசி நேரத்திலும் உன் திருமுகத்தை காணாத பாவிதான் நான்".......

**மகன் சிவராசா - ஜேர்மனி.**

# நினைவழியா தாயவள்!..

மாதங்கள் பத்து எனைச் சுமந்தவள் நீ தானம்மா
மலர்ப் பொய்கையில் உதித்தவள் நீ அம்மா
பாலூட்டி எமைக்காத்து நின்றவள் தாயம்மா
அமுதூட்டி தாலாட்டி பாராட்டி வளர்த்த தாயே!..

பகலிரவாய் கண்விழித்துப் பார்த்தவள் நீயம்மா
படிப்பினிலே உயர்ந்திட வழிகாட்டியவளும் நீதான்
ஊரோடும் உறவாட வைத்தவள் நீ அம்மா
பார் போற்றும் ஒளி விளக்கும் நீதான் அம்மா!..

வெளிநாட்டில் வாழ்ந்துவிட்டு உனைக்காணவே
பேரப்பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு
ஓடோடி வருகையில் எத்தனை பல இடையூறுகள்
உன் திருமுகத்தைக்கூடப் பார்க்காத பாவி நான்!..

உன் பெற்ற கடனைக் கூடத் தீர்க்க முடியாமல்
நான் வெம்பினேன் வெதும்பினேன் வெந்து துடித்தேன்
பாலூட்டிய உன் திரு முகத்தை இறுதி நேரத்திலும்
பார்க்க முடியாத பாவிதான் நான் அம்மா!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமான எங்கள் பூட்டி.........

திருமதி வைரமுத்து தங்கம்மா என்கின்ற பெயரை மட்டும்மனதில் திரும்பத் திரும்ப ஞாபகப்படுதிக் கொண்டிருந்தேன். புகைப்படத்தில் மட்டுமே நான் பார்த்த அவர்களின் தோற்றமும்,அதன் கீழே தோற்றம்,மறைவு எனும்வாசகங்களுக்கு மேலே நான் பார்த்த பெயரும் நினைவைவிட்டுச் செல்லவில்லை. இவை தவிர என் பாட்டியைப்பற்றிக் கூற என்னிடம் எதுவுமே இல்லாதிருந்தது. இருப்பினும் அவர்களைப் பற்றி அறியும் ஆவலுடன் என்அம்மம்மாவையும்,அம்மாவையும் இருத்திவிட்டு செவ்விகாண்பவர் என்ற மிடுக்குடன் அமர்கின்றேன். பாட்டி என்றுகூப்பிடுவதிலும் பார்க்கிலும் ஆச்சி என்ற வார்த்தைக்குள்இனம் தெரியாத உரிமையையும் பாசத்தையும்உணர்ந்தவளாய் ஆச்சியைப் பற்றிய அவர்களின்மறக்கமுடியா நினைவுகளை என்னிடம் கூறுமாறு கூறிவிட்டுகாகிதத்தைக் கையால் ஏந்தி தயாராகி நின்றேன்.

கூறி முடித்தவர்கள் கலங்கிய கண்ணீருடண் எழுந்துசென்றுவிட்டார்கள். என் காகிததில் கண்ணீர்த்துளிகள்கல்வெட்டு பொறித்திருந்தன. அதில் நான் எதுவும் எழுதவில்லை. அவர்கள் கூறியது என் மனதிற்குள் ஒவ்வொருகாட்சிகளாக நிழலாடுகின்றன. அந்தக் காட்சிகளை நீங்களும் வந்து பாருங்கள். வாருங்கள் ஆண்டு 2000 ற்கு பலவருடங்கள் முற்பட்ட என் வேலம்பிராய் ஊருக்குள்வாருங்கள்.

இயற்கையான இளம் தென்றலும், சிற்றலை தவழ்ந்து வரும் குளத்தையும்,கரையில் வளர்ந்து நிற்கும் நாவல்மரங்களையும்,கூட்டமாகப் பறக்கும்கொக்குகளையும்,தெளிவாகக்கேட்கும் கண்ணகியம்மன்கோவில் மணி ஓசையையும் உங்கள் மனம் ஈர்த்துவைத்திருப்பதால் நகரமுடியாமல் நீங்கள் திண்டாடுவதுஎனக்குப் புரிகின்றது. அதோ பாருங்கள்!கொய்யகம்வைக்காத சேலையுடன், சுருள் தலைமுடி, வெள்ளைநிறத்தோலும், சுறுசுறுப்புடன் எதையும் நோக்கும் கண்களும்கொண்டதாக ஒரு ஆச்சி வேகமாக அரிவி வெட்டுகின்றார். ஆம் அவர்தான் எங்கள் ஆச்சி. பிள்ளைச் செல்வங்கள் 14 பெற்றவர். அதில் 09 ஆண் பிள்ளைகளும் 05 பெண்பிள்ளைகளும். மக்கள் மருமக்கள் என அனைவரையும் தன்பிள்ளைகளாய் நினைத்து எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாகப் பேசுகிறார்!..பழகுகின்றார் பாருங்கள். அவர்கள் அனைவரும் ஆச்சி எனஅன்போடு அழைத்து வயல் வரம்பிலே அளவளாவி நிற்பதைப்பாருங்கள். அவர்களது ஒற்றுமை கண்டு நெற்பயிர்களும் நாணித்தலைகுனிகின்றன. தங்கம்மாவின் பரம்பரையினர் தம்முன்னே யாரும் தலைகுனிந்து நிற்பதைப்பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். அதனால் தான்எல்லோரும் கணத்தில் அரிவி வெட்டி விடுகின்றார்கள்போலும். வயல் வேலை முடித்துப் பேரப்பிள்ளைகள்அனைவரும் புல்லுக்கட்டுகளைச் சுமந்து வருகின்றார்கள்.

அவர்களுள் என் அம்மாவும், அன்ராவும் கூட சேர்ந்துவருகின்றார்கள். அம்மா கூறியது உண்மை தான். புல்லுப்பிடுங்கித் தான் நாங்களும் படிச்சு இந்த நிலைமைக்குவந்தனாங்கள் என்று அடிக்கடி எனக்குச்சொல்லுவார். குளக்கரைக்கு அப்பாலுள்ள காய்கறித்தோட்டமும் ஆச்சியின் பரம்பரைக் கதை சொல்லும் போலிருக்கின்றதே!கத்தரி, மிளகாய் என்று தோட்டத்தில்எல்லாக் காய்கறிகளும் நிறைந்திருப்பதைப் பாருங்கள்ஆச்சியின் மனசைப்போல, அவற்றின் கூட்டத்தைப்பாருங்கள் அந்தக் குடும்பத்தைப்போல.

தூரத்தே யாழ்தேவி வரும் ஓசையும் கேட்கின்றது. அந்திசாய்ந்துவிட்டது அவர்கள் எல்லோரும் வீடுசெல்கின்றார்கள். நாமும் போவோம். ஆச்சியின் மூத்தமகனான தியாகராஜாவை நாளில் ஒரு பொழுதேனும்பாராமல் ஆச்சிக்கு சோறு, தண்ணிஇறங்குவதில்லை. அங்கே வருவது எனது பெரிய தாத்தாதான். அவருக்கும் ஆச்சியைப் பார்த்தா தான் நித்திரையேவரும். ஆயிரம் இருந்தாலும் தலைப் பிள்ளை அல்லவா?. அங்கே நிலவைப் பார்த்தபடி ஆச்சியின் மடியில்படுத்திருப்பது எனது அம்மம்மாவாகத்தான் இருக்கவேண்டும். குடும்பத்தில் 12வது பிள்ளை அவர். நாகேஸ்வரிஇல்லம் தான் என் ஆச்சியின் ஆலயம். தான் பிறந்த போதுகட்டியதால் அப்பெயர் வைத்தார்கள் என அம்மம்மாகூறுவார். கடிதத்தில் விலாசம் எழுதி வரும்போது கூட நாகேஸ்வரிஇல்லம் இல.100,நாவற்குழி கிழக்கு,தச்சன்தோப்பு கைதடிஎன்று தான் வருமாம். தனக்கு மூத்ததா 08 அண்ணன்மார் இருந்ததால அந்தக் காலத்தில் தனக்குப் பெரிதாக குடும்பப்பொறுப்புப்பற்றி ஒன்றும் தெரியாது என்று அம்மம்மாசொன்னவா. அண்ணன்மார் எல்லோருக்கும் தான் செல்லத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையாகஇருந்தனான் என்றும் சொல்லுறவா தான். என்னுடைய அம்மம்மாவுக்கும் ஆச்சி என்றால் உயிர்தான்.

ஆச்சியின் திருமணம் ஒரு சுவாரஷ்யமான சம்பவம் தான். ஆச்சிக்கு 3 அக்காமார். அவர்களில் ஒருவர் வீட்டில் தான் ஆச்சிதங்குவது வழமை.ஒருநாள் அவரின் அக்கா மற்றையதமக்கை வீட்டிற்கு முறுக்குரல் வாங்கி வரும்படிஅனுப்பியிருக்கின்றார்கள். அங்கே சென்ற ஆச்சியை மற்றைய தமக்கையும் அவரின் கணவரும் ஒரு அறைக்குள் அவரை இருந்துவிட்டு,தமக்கையின் கணவர் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த தன் தம்பியை அழைத்துக்கொண்டுவந்து அப்போதே திருமணம் செய்துவைத்துவிட்டார்கள். என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா?எனக்கும் தான். அன்று அப்புவின் அண்ணன் இதைசெய்யாமல் விட்டிருந்தால் இன்று நான் ஏது?.

இவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் அப்பு இடையிலே இறந்துவிட்டாலும், பிள்ளைகளை நேர்ப்பாதையிலே ஓட்டிச்சென்று அவர்களுக்குரிய இடத்தில் பத்திரமாகஇறக்கி விட்டுவிட்டுத் தன் பயணத்தை முடித்த அந்தத்தியாகத் தாய்க்கு தங்கம் என்ற பெயர் பொருத்தம்தான். இல்லாவிடில் பிள்ளைகள் வழிதெரியாது திகைத்து நின்றிருப்பார்கள். எங்களுக்குள்ளேயே நிறையப் பேசிவிட்டோம். வாருங்கள்ஆச்சியுடனும், அப்புவுடனும், பிள்ளைகள் வாழ்ந்த ஒருகாட்சியைப் பார்ப்போம்.

இது தைப்பூச நன்னாளாகத்தான் இருக்க வேண்டும். பானையில் புத்தரிசிச் சோறுபொங்குகின்றதே!. ஆச்சியும்,மக்களும்,மருமக்களும் எல்லோரும்ஆளுக்கொரு வேலை செய்கின்றார்கள். யார்பிள்ளைகள்,யார் மருமக்கள் என்றே தெரியவில்லை. அப்புகையை குறுக்கே வைத்து சோற்றை குழைத்துக்கொண்டிருக்க ஒவ்வொருவராக கைகளை நீட்டுகிறார்கள். ஒவ்வொரு கைகளுக்கும் ஒவ்வொரு குழையல் சாதம்கொடுக்கின்றார் அப்பு. அதற்குள் சோறு இருக்கிறது,மரக்கறிகள் இருக்கின்றன. பருப்பு இருக்கின்றது. பால்,இனிப்பு, வாழைப்பழம், சர்க்கரை அனைத்துக்கும் மேலாக ஆச்சிஅப்புவின் பாசம்,அன்பு,உழைப்பு,நிறைவு, நிம்மதி என அனைத்தும் குழைந்து இருப்பது உங்களுக்கும்தெரிகின்றது தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் ஒரு கைப்பிடிச் சோற்றின் அருமை அதில் கொலைப்பசியும் தீர்ந்துவிடும். அவ்விடத்தில் நான் இல்லைஎன்பது எனக்குக் கவலை. ஊரிலுள்ள பல பேருக்கு எங்கள்ஆச்சிதான் திருமணம் செய்துவைப்பார்களாம். பிரச்சனைகள் எதுவானாலும் அதனைசரியான முறையில் தீர்த்து வைக்கும் குணத்தால் அவரை"பிரக்கிராசி" என ஊர்மக்கள் அழைப்பதுண்டு. அந்தப்பெருங்குணம் என் அம்மம்மாவிலும் உண்டு. அம்மாவிற்கும்உண்டு. எனக்கும் வளர வேண்டும் என்ற ஆசை.

அந்தக்காலத்தில் 10ரூபாய் சேலையைப் பார்ப்பவர்கள்வியக்கும் வண்ணம் நேர்த்தியாக அணிந்திருப்பார் என்ஆச்சி. அவரின் எளிமையான தோற்றமும், எந்நாளும்சுத்தமான உடற்தோற்றமும் அவரின் உள்ளத்தின் சாயலைபார்த்தவுடனே தெரிவிப்பவை. வரவுக்கேற்ற செலவு செய்துபிள்ளைகளை மனம் நோகாமல் வளர்த்த கண்மணிதான்அவர். என்னுடைய குட்டி மாமா மீது அளவுகடந்த அன்புகொண்டவர் என அம்மா அடிக்கடி சொல்லுவார். தன்சாப்பாட்டிலும் லண்டனுக்குக் கொஞ்சம் வைக்கவேணும்எண்டு (மாமாவின் செல்லப்பெயர் லண்டன்)சொல்லி காத்திருப்பார் மாமாவுக்காக. அந்தக்காலத்தில் என்அம்மாவையும்,அன்ராவையும் குடும்பக்கஷ்டத்தால் அவர்களின் படிப்பை இடைநிறுத்துமாறு கூறி பல தடைகள் வந்த போதும் அவர்கள்படிக்கக் கூடிய பிள்ளைகள்,அவர்களின் படிப்பைஇடைநிறுத்தாதே என என் அம்மம்மாவிற்கு அடிக்கடிகூறுவாராம். என் ஆச்சி எதிர்காலம் பற்றி நன்றாகவேகணித்திருக்கின்றார். தீர்க்கதரிசியாக இருந்திருப்பாரோ என சந்தேகமாகஇருக்கின்றது.

அதோ! ஆச்சி படலையில் வழிமேல் விழி வைத்துக்காத்திருக்கின்றார். யாருக்காக இந்த காத்திருப்பு? ஆம் பாடசாலை சென்ற அவரதுபேரப்பிள்ளைகளுக்காகத்தான். தாயை விடவும் பேத்தியின்பரிதவிப்பு அதிகமானது என்பது என் அனுபவத்திலிருந்தே எனக்கு நன்றாகத் தெரியும். வீட்டு வழியாக சாத்திரக்காரர்கள் யார் சென்றாலும் விட்டுவைக்கமாட்டா ஆச்சி. அவர்களைக் கூப்பிட்டு, இருத்தி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்களின் குறிப்புகளைக் கொடுத்து பார்க்கச்சொல்லுவார். இந்த அக்கறையை இந்த நூற்றாண்டில் நான் தேடிப்பார்த்தாலும் பார்க்க முடியுமோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் தண்ணீர் குடிப்பதென்றால் ஆச்சிக்கு சரியானவிருப்பமாம். என் அம்மா சொல்லுவார் நாங்கள் தண்ணீர்அள்ளுவதற்காக கிணற்றுக்கு போகும்போது ஆச்சி ஒருவாளியைக் கொடுத்து அனுப்பிவிடுவார்.அந்தப் பழக்கம்இப்போதும் என் வீட்டில் இருக்கின்றது. என்னுடையஅம்மம்மாவிற்கு நோகக்கூடாதென்று என் அம்மாவையும், அன்ராவையும் வேலை செய்யச்சொல்லுவாவாம். தன் பிள்ளைக்கு வலிக்கக்கூடாதென ஓர்தாய் நினைப்பதில் எவ்விதமான தவறும் இல்லையே?. ஆனால் என்ன?அவரது இக்கொள்கையை என்னுடைய அம்மம்மாவும் இப்போது பின்பற்றுகின்றாரே!இதனால்எங்கள் அம்மாவிற்கு நோக கூடாதென்று சொல்லி எங்களை வேலை செய்யச் சொல்லுவா. மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம் தான் என்றாலும் வேலை என்றால் எனக்கு கொஞ்சம் கஷ்டம் தான்.

ஆச்சிக்கு அவரின் இறுதிக் காலத்தில் நெஞ்சுவலி எனப் பலநோய்கள் தொற்றிக் கொண்டுவிட்டன. ஆச்சிக்கு உடம்பு சரியில்லை அதனால் தான் அவர் சாப்பிட மறுக்கின்றார் பாருங்கள். ஆச்சிக்கு என் அம்மம்மா தான் அவர் உயிருடன் இருக்கும் போது கடைசியாக தோயவார்த்துவிட்டுகவனிச்சவா. இப்போது நாங்கள் 1998ம் ஆண்டில் நிற்கின்றோம் என்றும் இல்லாதவாறு ஆச்சி விடியற்காலையில் எழும்பும் போது என் அம்மம்மாவையும் துணைக்குக் கூப்பிடுகின்றார் பாருங்கள். என் அம்மம்மா ஆச்சியை பின்புறம் அழைத்துச்செல்கின்றார்

ஆச்சி சட்டென கீழே சாய்கின்றார். என் அம்மம்மாவின் மடியில் அவரின் தலை. ஆச்சி என்னணை ஆச்சி" என்று சொல்லி என் அம்மம்மா புலம்புகின்றார். திடீரென்று ஆச்சி அழ ஆரம்பிக்கின்றார். அந்தக் கண்ணீருக்குள் அவர் சொல்லவந்த பல வார்தைகள் புதைந்திருக்கின்றன போலும். சற்றுநேரத்தில் அவரின் அழுகை ஓய்கின்றது. அம்மம்மாவிற்கு என்ன நடக்கின்றதென்பது புரியவில்லை. அயல்வீட்டு இராமச்சந்திரன் மாமாவின் உதவியுடன் ஆச்சியை வாங்கொன்றில் கிடத்திவிட்டு அம்மம்மா முகத்தைத் தண்ணீரால் துடைத்துக்கொண்டிருந்தார். அம்மாக்கா வந்து சொல்லும் வரைக்கும் அம்மம்மாவிற்கு ஆச்சி இறந்துவிட்டார் என்ற உண்மை அம்மம்மாவிற்குப் புரியாமல் தான் இருந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! தங்கம்,வெள்ளியாகி வானோடு சென்றுவிட்டது. நான் இறந்தாலும் உங்களை அடிக்கடி வந்து பார்ப்பேன் என்று ஆச்சி சொன்ன வார்த்தையை இப்போதும் அம்மாசொல்லிச் சொல்லி அழுவார்கள். இறுதியில் தாய் உயிர் தன்மடியில் வைத்து பிரிந்ததே என்று சொல்லித்தீர்க்க முடியாதகவலை என் அம்மம்மாவிற்குள். துணையை இழந்து தனி மரமாய் எங்கள் தோப்பை உருவாக்கிய ஆச்சி இப்போது எங்கள் முன்னே இல்லை. என்றாலும் அவரது அம்மா அவருக்குக் சீதனமாககொடுத்த காணியை அவர் என் அம்மம்மாவிற்கு கொடுத்து அம்மம்மா என் அம்மாவிற்கு கொடுத்ததால் அதற்குள் ஓடியாடித்திரியும் எனக்கு ஆச்சி எங்களோடு,என்றும்,எப்போதும்,இப்போதும் அருகிலேயே இருப்பது போன்றதொரு நினைவு.

அவரை கண்கொண்டு காணாமலே என்னால் பாசம்கொள்ள முடிகின்றது என்றால் அவரோடு கூடி வாழ்ந்த உங்களின் பாசம் சொல்ல எனக்குத் தெரியவில்லை. அவர்கட்டிய சேலையை இன்று நானும் எனது பாடசாலை நாடகத்தில் பாட்டி வேடத்தில் உடுத்தி நடித்துக்கொண்டிருக்கின்றேன். அந்தச் சேலையை கட்டியணைத்து என்அம்மம்மாவும்,அம்மாவும் சில வேளைகளில் சிந்தனையற்று நிற்பார்கள்.ஆச்சியுடனான நினைவுகளே அவர்கள் நினைவற்றவர்களாக நிற்பதற்குக் காரணம் என்பதைஉணர்ந்து விடுவேன்.

இன்று கல்வி,மருத்துவம்,விஞ்ஞானம், கலை,காவல்,பொருளியல்,அரசியல், ஊடகம் என அனைத்து துறைகளிலும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரும் தடம்பதித்து நிற்கின்றார்கள். எங்கள் பரம்பரை இன்றும் எல்லா நாடுகளிலும் கிளை பரப்பி வாழ்கின்றது. இதற்கு மூல காரணம் ஆச்சிதான். எல்லோரும் எல்லோராலும் எப்போதும் நினைக்கும்படி வாழமாட்டார்கள். ஆனால் சிலபேர் ஐந்து தலைமுறைகளுக்கு அப்பாலும் எல்லோர் நினைவுகளிலும் உயிரோடு இருப்பார்கள். எங்கள் ஆச்சியும் அதில் ஒருவர்தான்..குடும்பம் என்றால் இப்படி இருக்க வேண்டும். தாய் என்றால் இப்படி இருக்க வேண்டும் என எங்கள் ஆச்சியையும்,அவர் குடும்பத்தையும் உதாரணம் காட்டிபேசுவார்கள். அவருடைய ஆசீர்வாதத்தால் அவர் வழிவந்த எல்லோரும் இன்றும் நன்றாக வாழ்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து வந்த பாதையை மறந்து மனிதர்களாக எந்நாளும் வாழ்ந்து விட முடியாது. நினைவுகள் ஒருவரின் வாழ்வில் நிதர்சனமானவை. ஆச்சியின் கூட்டுக் குடும்பத்தில் சேர்ந்து வாழாவிட்டாலும் பூட்டியாக இருப்பதில் எனக்கும் சிறுபெருமை தான். என்றாலும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வோம். எங்கள் ஆச்சி எங்கள் நினைவுகளால் இன்றும்உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.....!

நன்றி.
ஆக்கம்

**செல்வி சர்விகா அண்ணாமலை. (பூட்டப்பிள்ளை)**
**நாவற்குழி-கிழக்கு (வேலம்பராய்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகள் வழங்கும் எங்கள் ஆச்சி........

பேரன்.சவுந்தன்-கனடா

நாங்கள் எல்லோருமே அன்போடு ஆச்சி என்று அழைத்த அந்த அன்பே உணர்வாய், உருவாய், உயிராய் உயர்வாய் வாழ்ந்த எங்கள் அப்பம்மா தங்கம்மா-வைரமுத்து அவர்களின் நூறாவது பிறந்தநாள் என்று எண்ணும் போது நானும் ஆனந்தப்படுகிறேன். அவர் இப்பொழுது உயிருடன் இல்லாவிடினும் அவர் வழிவந்த தொப்பிள் கொடிதான் நான். காலம் வேகமாகச் சுழல்கின்றது. கண்மூடி விழிப்பதற்குள் வயதுகள் கடந்து முதுமையைத் தொட்டு நிற்கிறோம். ஒரு நொடிப்பொழுது கடந்து கொள்கிறது எனில் பல அனுபவங்கள், பல சம்பவங்கள் கடந்து நிற்கிறோம் என்று அர்த்தம்.

எங்களின் ஆச்சி பதின்நான்கு குழந்தைகளின் தாய். எனது தந்தை தியாகராசா மூத்த மகன் மட்டுமல்ல, எங்கள் ஆச்சியின் உள்ளம் நிறைந்த மகன். ஆச்சியின் உள்ளக் குமுறல்களை அறிந்த மகன். வீட்டின் அனைத்துப் பொறுப்புக்களையும் சுமந்த மகன். அதனால் ஆச்சியின் செல்ல மகன். குடும்பத்தின் அனைத்துத் துன்பங்களிலும் பங்கெடுத்த மூத்த மகன். அனைத்து சகோதர சகோதரிகளின் வாழ்வில் உயர்வு பெற, கல்வியில் மேலோங்க உயிர்நாடியாகவும் முன்னோடியாகவும் இருந்தவர். இவை அனைத்துக்கும் ஆச்சியின் வழிகாட்டல், ஆலோசனைகள் உழைப்பு, தியாகம் என்பன ஒருங்கே அமைந்ததென்றால் அந்தப் பெருமை எங்கள் ஆச்சிக்கே உரிமையானதாகும்.

அனைத்து இன்னல்களையும் துன்பங்களையும் மறந்து வைரமுத்துவின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சீரோடும் சிறப்போடும் பெயரோடும் புகழோடும் வாழ வழிகோலியவர் எங்கள் ஆச்சிதான் என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறேன். இன்றும் என்றும் அவரது ஆத்மா எங்கள் எல்லோருக்கும் நல்லாசிகள் வழங்கிக்கொண்டிருக்கிறது என்றால் வைரமுத்து குடும்பம் என்றால் எவருமே மறுக்க மாட்டார்கள். ஆச்சியின் அந்தப் புனிதமான ஆவி எங்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திலும் கடைக்கண் பார்வையைச் செலுத்துகின்றது என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சியின் பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் கல்வியில் உயர்ந்து, அதி உயர் பதவிகள் என்று சொல்லுகின்ற மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், ஊடகம், கணனித்துறைகளில் பிரகாசிக்கின்றனர். பல பட்டதாரிகள் உருவாகிவிட்டார்கள். இப்போதும் பலர் பட்டதாரிகளாகப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர் நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் அரச உத்தியோகம், வர்த்தகம் என முன்னேற்றம் கண்டிருப்பது என்றால் அது எங்கள் ஆச்சியின் "நல்லாசிகள்"தான். இது யாருமே மறுக்க முடியாத உண்மையாகும். எவ்வளவு இன்னல்கள் வந்தபோதும் அவற்றை வெளிக்காட்டாமல் தனக்கே உரித்தான தலைமைத்துவப் பண்பையும் குடும்பச் சிறப்பையும் முன்னிறுத்தி வாழ்ந்த அந்தத் தெய்வத்தை எம்மால் என்றுமே மறக்க முடியாது.

தனது மூத்தமகனின் மூத்த பேரன் ஆகிய என்மீது என் ஆச்சிக்கு வித்தியாசமான, விசேடமான அன்பும் ஆசையும், அரவணைப்பும் இருந்ததை நான் அறிவேன். எப்போதும் ஆச்சியின் ஆசையில் தனது மூத்த மகன் குடும்பத்திற்காக நிறையவே துன்ப துயரங்களை சந்தித்தவன் என்பதை நான் அறிவேன். இந்தக்கவலை ஆச்சிக்கு நிறையவே இருந்தது.. ஒரு தடவை ஆச்சியின் இன்னொரு மகன் சீனி ஐயா வெளிநாடு சென்று திரும்பிய வேளையில் நல்லதொரு சேலையை வேண்டிக்கொண்டுவந்து ஆச்சிக்குக் கொடுத்த போது அதை வேண்டிக் கவனமாக வைத்தார். அப்போது ஆச்சியின் ஒரு பேரக்குழந்தை பட்டதாரியாகி யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்குச் செல்ல அந்த நல்ல சேலையைக் கட்டிக்கொள்ளுங்கள் என்று கேட்டபோது...அது எனது மூத்த பேரன் சமந்தன் என்றுதான் என்னை அப்போது அழைப்பார். அவனின் திருமணத்துக்குத்தான் அதைக் கட்டுவேன் என்று கூறியது இன்றும் என் மனக்கண் முன்னால் நிழலாய் இருக்கின்றது. ஆச்சியின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் என் மனக்கண்முன்னால் திரும்பிப் பார்க்கிறேன். என் மனம் வெம்புகிறது.

நான் அப்போது ஊரில் இருந்த காலத்தில் வீட்டில் பல கஸ்டங்கள் ஏற்பட்டது. அப்போதெல்லாம் ஆச்சி வந்து எனது ஐயாவிடம் கூறுவார் உனது இரண்டு பிள்ளைகளை பாடசாலையிலிருந்து நிறுத்தி ஏதாவது ஒரு வேலையைப் பழக்கு. வேலைக்கு அனுப்பினால் வீட்டுக்கஸ்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்துவிடும் என்பார்.காரணம் தன்னோடு இருந்து கஸ்டப்பட்ட மூத்தவன் மேலும் கஸ்டப்படக்கூடாது என்பதே அவரின் நோக்கமாக இருந்தது. ஆனால் விபரம் தெரியாத எனக்கு அப்போது வேதனையாகத்தான் இருந்தது. அப்படியாக ஆச்சி எனது ஐயாமீது மிகுந்த கர்சனை கொண்டிருந்தார் என்பதைப் பின்னாளில் உணர்ந்து கொண்டேன்.

நான் நோர்வேயில் இருந்த காலத்தில் ஊரின் எங்கள் வீட்டைத் திருத்த உதவி செய்தேன். அம்மன்கோவில் தென்னம் தோட்டக்காணி வேண்டினேன். ஐயாவின் பெயரிலேயே எழுதினேன். அப்போது என்னுடைய ஐயா ஓரளவு வசதியாகவும் புகழோடும்தான் வாழ்ந்தார். சில வருடங்களின் பின்பு தாய் நாட்டிற்குப் போனேன். அப்போது ஆச்சி ஓடிவந்து என்னைப்பார்த்து கட்டிப்பிடித்து முத்தம்தந்து மகிழ்ந்தார். அப்போது நான் சொன்னேன் ஆச்சி நீங்கள் வாழ்கின்ற காலத்தில் உங்களுடைய மூத்த மகனை எனது ஐயாவை நல்லாக வைத்திருக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். அதை நான் செய்திட்டேன்!.. என்று சொன்னவுடன் ஆச்சியின் கண்கள் கலங்கியது மட்டுமல்லாமல் மீண்டும் என்னைக் கட்டிப்பிடித்து முத்தம் தந்த அந்தச்சம்பவம் என்னால் இன்றும் மறக்கமுடியாது. ஆச்சியின் கண்ணீரை நான் முன்பு எப்போதுமே நான் பார்த்தது கிடையாது. அவ்வளவுக்கு மனக்கட்டுப்பாடும் எதிர்கால சிந்தனையும் மிக்கவர் என்பது எனக்கு இப்போது புலனாகின்றது.

எனது ஐயா அயலூரான கோவிலாக்கண்டியில் வேலை செய்யும் போது சில வேளைகளில் இரவு பத்து, பதினொரு மணி அளவில்தான் வீட்டுக்கு வருவார். அதன்பின் முகம்கழுவி சாமிகும்பிட்டு வீபூதி பூசிகொண்டு உடனே ஆச்சியிடம் போய்விடுவார். அதற்கு முன்பு ஆச்சி எங்கள் வீட்டுக்கு வந்து மூத்தவன் இன்னும் வரவில்லையா?..என்று கேட்டுக்கொண்டு போயிருப்பார். இது அன்றாடம் நிகழும் சம்பவமாகும். இப்படி ஒரு தாய்-மகன் பாசத்தை நான் எங்குமே பார்த்ததில்லை என்றே கூறுவேன். என்னுடைய ஐயாவிற்கு ஆச்சி என்றால் உயிர்.. ஆச்சி இல்லாமல் அவரால் ஒன்றுமே செய்யமுடியாது. அந்த அளவிற்கு இருவரின் பாசமும் இறுக்கமாகவே இருந்தது.

இன்று உலகத்தில் பல நாடுகளிலும் வைரமுத்து-தங்கம்மா வாரிசுகள், தொப்பிள்கொடி உறவுகள் சீரோடும் சிறப்போடும் வாழ்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் அது எங்கள் ஆச்சியின் அந்தப்புனிதமான ஆத்மாதான் எங்களை எல்லாம் வழி நடத்துகின்றது என்று பெருமையாகக் கூறிக்கொள்ளலாம். இன்று வைரமுத்து-தங்கம்மா குடும்ப உறவுகள் மேலோங்கி வாழ்வதற்கு ஆச்சிதான் வழிகாட்டியாகவும் உதாரண புரிசராகவும் வாழ்ந்து காட்டினார். அந்தப் பிதா மகளின் ஆசிகள் என்றும் எங்கள் அனைவரின் அசைவிலும் சிறப்பிலும் பங்குபற்றும். வைரமுத்து-தங்கம்மா குடும்பம் இவ்வளவு உயர்வாக வளர்ந்திருக்கிறது என்றால் ஆச்சியின் இறுக்கமான கட்டுப்பாடு. ஆழமான அன்பு, நல்ல வழிநடத்தல், தூரநோக்குப் பார்வை எனக்குறிப்பிடலாம். ஆச்சி எங்கள் குடும்பத்தில் இருக்கும் அனைவரின் வளர்ச்சிக்கு என்றும் உதாரணமாகவே இருக்கின்றார் என்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூறுகிறேன். ஆச்சியின் நாமம் என்றும் நிலைத்திருக்கும்.!...

## அன்னைக்கு அன்னை!..

விழி காணும் தெய்வமாக
வழி காட்டும் சுடராக
ஒளி தந்த பௌர்ணமி...

வேசம் ஒன்றும் இல்லாமல்
பாசம் தன்னைப் பொழிந்து
வாசம் வீசும் மல்லிகை...

தன் உதிரத்தில் பாதியை
என் உணவுக்குத் தந்த
அன்னைக்கு உலகில் நிகரேது...


சோதனை பல வந்தாலும்
வேதனைகளை விலக்கி அவள்
சாதனைகள் புரியவைக்கும் அன்னை
அன்னைக்கு என்றும் அன்னைதான்!...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வைரமுத்து - தங்கம்மா ஒன்றுகூடல் நிகழ்வு
Vairamuthu - Thangamma Family Day

தமிழர் குடும்பங்களில் அன்றாடம் பல நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கமாகும். அதாவது ஒரு உயிர் பிறந்தபோது ஆரம்பமாகும் நிகழ்வானது அவர் இறக்கும்வரை குடும்பத்தில் பல நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். அதுவும் தமிழர் வாழ்வியலில் கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரிய நிகழ்வுகளுக்குக் குறைவு இருக்காது. ஒருவர் பிறந்து முப்பத்தொராவது நாள்,1வது 10வது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18வது, 25வது, 50வது எனப் பிறந்தநாள் இவற்றைவிட தொட்டிலில் போடுதல், காதுகுத்துதல், பல்லுக்கொழுக்கட்டை, பூப்பெய்துதல், திருமணம், வீடுகுடிபுகிர்தல் எனக்குடும்ப விழாக்களும் பாடசாலை, மன்றம், நூல்நிலையம், சங்கம், ஊடகங்கள், கோவில்கள் எனப் பல விழாக்களுக்குக் குறைவே இருக்காது. அந்த அளவுக்கு தமிழர் வாழ்வில் இந்த விழாக்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றன.

எங்கள் குடும்பத்திலும் ஒரு சிறப்பான ஒன்றுகூடல் விழா வருடாவருடம் நடைபெறுவது சிறப்பாகும். அதாவது வைரமுத்து - தங்கம்மா தம்பதிகள் பெற்றெடுத்த பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் இன்று உலகம் முழுவதும் வாழ்கிறார்கள். குறிப்பாக ஐரோப்பாவில்தான் மிக அதிகமானோர் வாழ்கிறார்கள். எங்கள் தாய் - தந்தையரின் நினைவு கூருவதற்காக வருடாவருடம் ஆடிமாத கோடை விடுமுறையில் லண்டனில் ஒன்றுகூடுவது வழக்கமாகிவிட்டது. 2017ம் வருடம் 9வது தடவையாக இது22.07.2017ல் நடைபெற்றது. இந்த ஒன்றுகூடலுக்கு வித்திட்ட பெருமை பேரனாகிய தமிழழகன்-நடராசாவிற்கே சேரும். அவருக்கும் இவ்வேளையில் பாராட்டைத் தெரிவிப்போம்.

இந்த ஒன்றுகூடல் விழாவானது சனி ஞாயிறு என இரண்டு நாட்கள் கோடைகால விடுமுறையில் லண்டனில் நடைபெறுவது வழக்கமாகும். ஐரோப்பா மட்டுமல்ல கனடா, இலங்கையிலிருந்தும் குடும்ப உறவுகள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள். சுமார் நூறு , நூற்றி ஐம்பதுபேர்வரை வருடாவருடம் கலந்துகொள்வார்கள். குழந்தைகள், சிறுவர்கள் இளையோர்கள், குடும்பத்தவர்கள் எனக்கலந்துகொண்டு எங்கள் குடும்பத்தில் உயிர் துறந்தவர்களையும் நினைவுகொண்டு அஞ்சலியைத் தெரிவிப்பார்கள்.

நினைவுப் பதிவுகளையும் மீட்டு, அவர்கள் விட்டுச் சென்ற பணிகளையும், தடம்பதித்த வரலாறுகளையும் சந்ததிகள் அறிந்துகொள்வதற்கான செயற்பாடுகளும் இடம்பெறும். இவற்றைவிட இருநாட்களும் பலவிதமான போட்டி நிகழ்வுகள், பொழுதுபோக்கு நிகழ்வுகள் நடைபெறும். விளையாட்டுப்போட்டி, பாட்டு, நடனம், பொதுஅறிவுப்போட்டி, ஆடல் எனவும் இயல், இசை, நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என நிகழ்வுகள் களைகட்டும். இந்த இரண்டு நாட்களும் ஒரு மகிழ்வான நிகழ்வுதான். நமது குடும்ப சந்ததிகளை யார்...யார்... என அறிந்து கொள்ளவும், உறவு முறைகளைத் தொடரவும், தெரியாத பல குடும்பங்களைத் தெரிந்து கொள்ளவும் குடும்பச் செய்திகளைப் பகிர்ந்து கொள்ளவும் பல சின்னஞ்சிறிசுகளுக்கு இந்த விழா வழிசமைத்துக் கொடுக்கின்றது.

தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் மூத்தோர் நமது தாய் - தந்தையர் உடன்பிறப்புக்களின் நினைவுப் பதிவுகளை மீட்டுப் பார்ப்பதால் வாழ்க்கையின் நெறிமுறைகளையும் அவர்கள் செய்த பணிகளையும் தியாகங்களையும், அறவாழ்வையும் இளம்சந்ததிகள் கற்று வாழ்வில் உயர்ச்சி பெற இவ்விழா பெரிதும் உதவுகின்றது. குடும்ப உறவுகளிடையே ஒரு இறுக்கத்தை ஏற்படுத்துகின்றது. அன்பு, பாசம், அரவணைப்பு, பிணைப்பை ஏற்படுத்துகின்றது என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாவருடம் நடைபெறும் இதே நாளில் வைரமுத்து - தங்கம்மா நினைவாக தாயகத்தில் வாழும் பிள்ளைகளும் உறவுகளும் தாயகம் கைதடியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர் அனைவருக்கும் நேரடியாகச் சென்று உணவு, சிற்றுண்டிகளை வழங்கிச் சிறப்பித்துத் தருமப்பணிகளிலும் ஈடுபடுகிறார்கள். தாமும் அவர்களோடு உண்டு குடித்து அவர்களுக்குச் சில பண, பொருள் உதவிகளை வழங்கிச் சிறப்பிக்கிறார்கள். இப்படியாக மனிதநேயப் பணிகள் தொடர்வது மனதுக்கு ஆறுதல்தான். வழிகாட்டிய பெற்றோரை இவ்வேளையில் நினைவு கூருகின்றோம்.

தமிழர் வாழ்வியலில் உலகில் இப்படி ஒரு விழா நடைபெறுவது மிக.. மிக..அரிதாகும். இந்தச் சிறப்பான நிகழ்வை அறிந்து கொண்ட பல ஊரவர்களும் நண்பர்களும், புலம்பெயர் தேசங்களில் வாழும் உறவுகள், ஊரவர்கள், நண்பர்கள், தெரிந்த தெரியாத உறவுகளும் தமிழர்களும் "இப்படியும் ஒரு விழாவா" என ஆச்சரியப்படுகிறார்கள். பாராட்டுகிறார்கள். சிறப்பு..மகிழ்ச்சி என்றும் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றும் பலர் பாராட்டுவது நம்குடும்ப உறவுகளுக்கு மகிழ்வைத் தருகின்றது. ஆகவே எம்மைப் பெற்று வளர்த்த தெய்வங்களை நாம் உயிருடன் இருக்கும்வரை மறக்காமல் வாழவேண்டு. அவர்களின் வழிகாட்டல்களைத் தொடரவேண்டும். அவர்களை எப்போதும் நினைவு கொள்வோம். நாம் எங்கு எப்படி வாழ்ந்தாலும் பெற்றோரைப் போற்றி வணங்கினால்தான் நம் வாழ்வில் நிம்மதி கிடைக்கும். நாளைய நமது சந்ததிகளும் நம்மைப் போற்றி வணங்குவார்கள்!..

"பெற்றோரே நமது முதல் தெய்வங்கள்"

---

# நிழற்படங்கள்

வைரமுத்து-தங்கம்மா ஒன்றுகூடல் நிகழ்வுகளின் ஒரு சில நிழற்படங்களை அடுத்துவரும் பக்கங்களில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செல்வங்கள்

கல்வி கற்காதவர்களை கண் இருந்தும் குருடர்கள் என்று வள்ளுவப் பெருமகன் எடுத்தியம்புகின்றார். கல்வி என்பது இரு கண்களைப் போல என்றும் எடுத்துரைக்கின்றார். ஒழுக்கத்தைப் போல கல்வியும் உயிரினும் மேலாகக் கருதப்படுகின்றது. ஒரு மனிதனின் நல் வாழ்விற்கு உணவு, உடை, வாழ்விடம் எவ்வளவு முக்கியமோ அதே போல் கல்விச் செல்வமும் மனித வாழ்விற்கு அவசியமாகவே கருதப்படுகின்றது.

எங்கள் தாயார் பல்கலைக்கழகம் சென்று படிக்காவிடினும் நல்ல அறிவு ஆற்றல் படைத்தவர். அவரின் அனுபவங்களும் தூரநோக்குப் பார்வையுமே குடும்பத்தில் எவ்வளவு வறுமை, பணக்கஸ்டம் இருந்த போதும் தனது அத்தனை பிள்ளைகளையும் கல்விபெற வைத்து உலகைக்காட்டி உயர்ச்சி பெற வைத்தார் என்பது பெருமைக்குரிய விடையமாகும்.

அவரின் வழிகாட்டலில் தொடர்ந்த பிள்ளைகளின் வழிவந்த பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கல்வியில் உயர்ந்து இன்று உலகில் பல நாடுகளில் புகழோடு வாழ்கிறார்கள் என்னும் போது அந்தத்தாயை வணங்குகின்றோம். வைரமுத்து-தங்கம்மா குடும்ப ஆலவிருட்சங்கள் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்து இன்று பல நல்ல வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் சிறப்பான விடையமாகும்.

### பிள்ளைகள், மருமக்கள்:-

பிள்ளைகள் மருமக்கள் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை கூட்டுறவு திணைக்களம், இலங்கை மின்சார சபை, இலங்கைப் பொலிஸ் சேவை, விவசாயம், வியாபார நடவடிக்கையிலும் தொழில் புரிந்து வாழ்ந்தார்கள். உத்தியோகம் புரிச லட்சணம் என்ற முதுமொழிக்கு அமைவாக புகழுடன் வாழ்ந்து குடும்பத்தின் கௌரவத்தை நிலைநாட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள்:-

அவர்கள் வழிவந்த பிள்ளைகள் அதாவது அமரர் தங்கம்மாவின் பேரப்பிள்ளைகளி பலர் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். ஆசிரியர், டாக்டர், கணக்காளர், கணனிப் பொறியியலாளர், உயிரியல் வைத்தியப் பொறியியலாளர், வர்த்தகவியலாளர்களாக தாயகத்திலும் வெளி நாடுகளிலும் படித்துப் பட்டம் பெற்று இன்று கடமைபுரிந்துகொண்டிருக்கிறார்கள்.

## பூட்டப்பிள்ளைகள்:-

பூட்டப் பிள்ளைகளில் ஒருவர் டாக்டராகவும் ஒருவர் சட்டத்தரணியாகவும் லண்டனில் படித்துப் பட்டம் பெற்று தற்போது வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

## பல்கலைக்கழகங்களில் தற்போது கல்வி பயின்றுகொண்டிருக்கும் பூட்டப்பிள்ளைகள்...

லண்டன், கனடா, இலங்கை என தற்போது 8 பூட்டப்பிள்ளைகள் பல்கலைக்கழகங்களில் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியாகக் கல்வியிலும் விளையாட்டிலும் சமூக சேவையிலும் எமது தாயார் காட்டிய நல்வழியில் தடம்பதித்து அனைத்து குடும்ப உறுவுகளும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வைரமுத்து - தங்கம்மா குடும்பத்திற்குப் புகழ் பரப்புக்கொண்டே வாழ்ந்து வருகிறார்கள். 2017ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற க.பொ.த சாதாரண பரீட்சையில் பூட்டப்பிள்ளை ஒருவர் யாழ் சுண்டுக்குளி மகளீர் கல்லூரியில் 10 பாடங்களிலும் ஏ பெறுபேறைப் பெற்றுச் சாதனை படைத்ததுடன் எங்கள் குடும்பத்தின் கௌரவத்தையும் உயர்த்தியிருப்பது சிறப்பான விடையமாகும் செல்வி சர்விகாவின் சாதனைக்கு குடும்பத்தின் சார்பில் நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடாத மலர்!...

செல்வி.கேமா சற்குணநாதன்.
பூட்டப்பிள்ளை - வேலம்பராய்

எங்கள் மாபெரும்
தோப்பொன்றின்
மூல மரமே
வணக்கம்.

எங்கள் வம்சக் கொடியின்
ஆணிவேருக்கு
அதன் விழுதுகள் - இன்று
விழாஎடுக்கின்றன

நான் கவி எழுத
வெள்ளை மேகங்களை
அழைக்கின்றேன்
வார்த்தைகள் நட்சத்திரங்களாய்
வட்டமிடுகின்றன.

என்றும் அழியா
எங்கள் வரலாற்று
புத்தகத்தின்
வாடாமலரே
எந்தன் கவிக்கு
நீரேபொருள்.

முருகன் எமக்களித்த
வரம் நீர்!!!
வைரம் கவர்ந்த
தங்கமும் நீர்!!!
எங்கள் அம்மம்மாவின்
அம்மாவும் நீர்!!!

பூட்டம்மா!!!
பெயரில் மட்டுமல்ல
குணத்திலும் நீரே
தங்கம் அம்மா.
வேலம்பிராய் ஊர் அறியும்
உங்கள்

விருந்தோம்பல் பற்றிஎல்லாம்
நாவற்குழிதானும் அறியும்
உங்கள்
வம்சத்தின் விருட்சம் எல்லாம்

செல்வங்கள் சிறப்புடனே
பதினாறும் பெற்றீர்கள்
பதின்நான்கு குழந்தைகளை
கருவறையில் சுமந்தீர்கள்
பசித்து வருவோர்க்கெல்லாம்
பந்திவிரித்தீர்கள்

பாசம் முழுவதையும்
பொதுவில் வைத்தீர்கள்
ஏராளம் உறவுகளை
தானாகச் சேர்த்தீர்கள்
இன்றுஅவை
பறைசாற்றி நிற்குதம்மா
தங்கம்மாபுகழ் மாலை.

உன் பூட்டிகளில்
ஒருத்திநான்
பெரியவள் ஆகிவிட்டேன்
இன்றுயான்
கடவுளிடம் கேட்பதெல்லாம்
உமக்கு மறு பிறவி
நிகழவேண்டும் - அது
என் வயிற்றில்
உயிர்க்கவேண்டும்

நீர் சேயானால் மட்டுமே - நான்
தாயாகும் வரம் வேண்டும்.
என் அன்பிற்குரித்தான பூட்டிக்கு
நல்லம்மா குடும்பம் சார்பான
இனிய பிறந்ததின நல்வாழ்த்துக்கள்.
என்றும் உங்கள் நினைவுடன்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என்னும் மாமி!...

முந்தித் தவம் கிடந்து கருவில் உயிராய்
முன்னூறு நாள் சுமந்து பெற்று வளர்த்து
முத்தே மணியே முழு நிலவே என
முத்தமிட்டு முகம் மலர்வாள் அம்மா!...

முரண்பாடின்றி அன்போடு அணைத்து
முதன்மையானவள் நல்லாசிரியனாய்
முதுமொழி மூதுரை எனக்கற்றுத் தந்து
முப்பால் குறளும் தாய்பாலாய் தந்திடுவாள்!...

முழுமதியாய் ஒளி தந்த அம்மா மாமியே
முழு உறவுகளும் உயிர்பெற்று வந்தாலும்
முழுமையான உன் உறவுக்கு ஈடாகுமா
முல்லைப் பூப்போன்ற வாசமுள்ள மாமியே!..

வணங்குகின்றேன்!..வாழ்த்துகின்றேன்!...

**திருமதி. இராஜேஸ்வரி சிவராசா**
**மருமகள் - ஜேர்மனி**

# தாய்!...

அங்கமெல்லாம் நோக எமைச்சுமந்து
அந்திபகல் பாராது காத்திடுவாள்
உயிர்தந்து ஒளி தந்த அன்னை
உறக்மிலாமல் எமைக் பார்ப்பாள்...
அறுசுவை உணவாக்கி அன்புடனே
அகம் முகம் மலர ஊட்டிடுவாள்
சாலை ஓரம் கைபிடித்துத் தாங்கியே
பாடசாலை கூட்டிச் சென்றிடுவாள்!...
பைந்தமிழ் சுவைபடச் சொல்லி
பைங்கிளி போல் பேச வைப்பாள்
தீயன நாம்செய்தால் கண்டிப்புடனே
தீண்டாமல் அறிவைப் புகட்டிடுவாள்!..
இடி இடித்து இன்னல் வந்த போதும்
இதயத்தில் இரும்பாய்த் தாங்கிடுவாள்
இதமான பசுமை நினைவுகளையும்
இதயத்தில் வைத்துப் பூஜித்திடுவோம்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தங்கம்மா-வைரமுத்து அவர்களின் 19வது ஆண்டு நினைவான அவரின் குடும்பத்தவர்களால் வேலம்பராய் கண்ணகை அம்மன் கோவிலுக்கு இரு குதிரை வாகனங்கள் செய்யப்பட்டு 04-04-2017 அன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் வைரமுத்து - தியாகராசா

**மண்ணில்** 12.03.1933 - **விண்ணில்** 09.03.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் வைரமுத்து - சரவணமுத்து

**மண்ணில்** 24.03.1938 - **விண்ணில்** 09.11.1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் கணபதி முத்தையா

மலர்வு 09.04.1931 - உதிர்வு 27.12.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அப்பையா பரமசாமி

மலர்வு 01.03.1942 - உதிர்வு 17.12.1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் முருகர் கனகரத்தினம்

மலர்வு 22.11.1947 - உதிர்வு 24.06.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் கத்திறின் (கலா) அழகராசா

அன்னையின் மடியில் 28.04.1963 - ஆண்டவன் மடியில் 14.07.1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூலை 16 திகதியில் உலக நிகழ்வுகள் சில....

1622 முகமது நபி மக்காவிலிருந்து மதீனாவுக்கு பயணம் தொடங்கினார். இது இஸ்லாமிய நாட்காட்டியின் தொடக்கமாகும்.

1661 ஐரோப்பாவின் முதலாவது வங்கித் தாள் (banknote) சுவீடனில் வெளியிடப்பட்டது.

1769 சான் டியேகோ நகரம் அமைக்கப்பட்டது.

1930 எதியோப்பியாவின் முதலாவது அரசியலமைப்பை அதன் மன்னர் ஹைல் செலாசி வெளியிட்டார்.

1942 பிரெஞ்சு அரசு நாட்டில் உள்ள அனைத்து 13,000-20,000 யூதர்களையும் சுற்றி வளைத்துக் கைது செய்ய காவற்துறையினருக்கு உத்தரவிட்டது.

1945 மான்ஹட்டன் திட்டம்: முதலாவது அணுகுண்டு சோதனையை ஐக்கிய அமெரிக்கா நியூ மெக்சிகோ அலமொகோத்ரோவுக்கு அருகில் உள்ள பாலைவனத்தில் வெற்றிகரமாகச் சோதித்தது.

1948 இயேசு கிறிஸ்து வாழ்ந்த நசரெத் நகரத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது.

1950 உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உருகுவாய் பிரேசிலை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

1955 டிஸ்னிலாந்து பூங்கா கலிபோர்னியாவில் அமைக்கப்பட்டது.

1965 பிரான்சையும் இத்தாலியையும் இணைக்கும் மோண்ட் பிளாங்க் சுரங்கப் பாதை திறக்கப்பட்டது.

1969 அப்பல்லோ 11 புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது. இதுவே சந்திரனில் இறங்கவிருக்கும் முதலாவது மனிதரை ஏற்றிச் சென்ற விண்கலம் ஆகும்.

1979 ஈராக் அதிபர் ஹசன் அல்-பாக்ர் பதவியைத் துறந்ததை அடுத்து சதாம் உசேன் அதிபராகப் பதவியேற்றார்.

1989 புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1990 பிலிப்பீன்சில் 7.7 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 1600 பேர் கொல்லப்பட்டனர்.

1994 ருவாண்டாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

1995 காங்கேசன்துறையில் விடுதலைப் புலிகளால் இலங்கை கடற்படையின் எடித்தாரா கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

1994 "ஷூமேக்கர்-லெவி 9" என்ற வால்வெள்ளி வியாழனுடன் மோதியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஜோன் எ.்.ப். கென்னடி, இளையவர், அவரது மனைவி விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டனர்.
2004 தமிழ்நாடு கும்பகோணத்தில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 94 பிள்ளைகள் தீயிற் கருகி மாண்டனர்.
2004 மிலேனியம் பூங்கா சிக்காகோவில் அமைக்கப்பட்டது.
2006 தென்கிழக்கு சீனாவில் இடம்பெற்ற கடற் சூறாவளியினால் 115 பேர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

1194 அசிசியின் புனித கிளாரா, இத்தாலியப் புனிதர் (இ. 1253)
1872 ருவால் அமுன்சென், நோர்வேஜிய விமான ஓட்டி (இ. 1928)
1896 திறிகுவே இலீ, 1வது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் (இ. 1968)
1909 அருணா ஆச.்.ப் அலி, இந்திய விடுதலை இயக்கத் தன்னார்வலர் (இ. 1996)
1936 யாசுவோ .்.புக்குடா, சப்பானின் 91வது பிரதமர்
1936 வெங்கட்ராமன் சுப்ரமணியம், இந்திய-ஆத்திரேலியத் துடுப்பாளர்
1968 தன்ராஜ் பிள்ளை, இந்திய ஹாக்கி வீரர்
1968 லாரி சாங்கர், அமெரிக்க மெய்யியலாளர், விக்கிப்பீடியா நிறுவனர்களில் ஒருவர்
1984 கத்ரீனா கை.்.ப், இந்திய நடிகை
1989 கேரத் பேல், வெல்சிய கால்பந்தாட்டக் காரர்
1989 கிம் வூ-பின், தென்கொரிய நடிகர்
1990 ஜேம்ஸ் மாஸ்லொவ், அமெரிக்க நடிகர்

## இறப்புகள்

1764 உருசியாவின் ஆறாம் இவான், ரசியப் பேரரசர் (பி. 1740)
1916 இலியா மெச்னிகோவ், உருசிய விலங்கியலாளர் (பி. 1845)
1989 உமாமகேஸ்வரன், புளொட் அமைப்பின் தலைவர்
2009 டி. கே. பட்டம்மாள், கருநாடக இசைப் பாடகி (பி. 1919)
2012 இசுடீபன் கோவே, அமெரிக்கத் தொழிலதிபர் (பி. 1932)
2013 பருண் டே, வரலாற்றாய்வாளர், கல்வியாளர் (பி. 1932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்



இம்மலர் சிறப்புற அச்சிட்டு வெயியீடு செய்ய நிதி உதவி செய்த குடும்ப உறவுகளுக்கும் ஆக்கங்களைத் தந்து உதவிய குடும்ப உறவுகளுக்கும் கணனி வடிவமைப்பு அச்சுப் பதிவுகளைச் செய்துதந்த குடும்ப உறவுகளுக்கும் இனிதான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!...

- 2017 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மா 100

THANGAMMA 100

## The Centenary Birthday Celebration

1917 - 2017



Late

**Mrs Thangamma Vairamuthu**

**Navatkuly East – Velamparai**

**16.07.1917 - 04.04.1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org